

# அன்றலர்ந்த மலர்கள்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றலர்ந்த மலர்கள்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றலர்ந்த மலர்கள்
(சுய ஆய்வுக் கட்டுரைகள்)
புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்
முதற்பதிப்பு: 2023 கார்த்திகை
© ஆ.இரத்தினவேலோன்
அட்டை வடிவமைப்பு : க.பரணீதரன்
வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலை அகம், அல்வாய் & கொழும்பு, மீரா பதிப்பகம்
பக்கம்: 124
விலை: 600.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Antralarntha Malarkal**
(Collection of Research Articles)
Pulolyoor A.Rathnavelone
First Edition: 2023 November
©A.Rathnavelone
Cover designed by : K.Bharaneethan
Designed by K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai Aham, Alvai & Colombo, Meera Pathipakam
Pages: 124
Price: 600.00
Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-15-3

ஜீவநதி வெளியீடு - 292 & கொழும்பு, மீரா பதிப்பகம் - 105


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

1. நாவல் இலக்கியத்திற்கொரு புதுவாசல்
தாமரைச்செல்வியின் உயிர் வாசம் /10

2. நலவியல் இலக்கியத்திலோர் புதுவகைப் புனைவு
எம்.கே.முருகானந்தனின் டாக்குத்தரின் தொணதொணப்பு /16

3. சிறுவர்களின் அறிவியல் தேடலிற்கு அடித்தளமிடும்
கோகிலா மகேந்திரனின் அறிவியல் கதைகள் /21

4. அறிவியல் எழுத்துக்களின் சமகால செல்நெறிக்கான ஒரு சாட்சி
எஸ்.பேராசிரியனின் மாசுறும் பூமி /28

5. புத்தகவுலகில் புதுயுகத் தடங்கள் விதித்திடும் பற்றுதலுடன் பயணிக்கும்
"எங்கட புத்தகங்கள்" /34

6. நாவல் ஆய்வாளர்களுக்கு உசாத்துணையாகவல்ல
ஈழத்து நாவல் விமர்சனச் சிறப்பிதழ் /41

7. திறனாய்தலின் அடுத்தகட்ட நகர்விற்கு படிக்கட்டுகளாக அமையும்
இ.இராஜேஸ்கண்ணனின் இரு பனுவல்கள் /47

8. பத்தி எழுத்தில் ஒரு புதிய பாய்ச்சல் பாரிர்
வைத்தியர் தி.ஞானசேகரனின் யாவரும் கேளிர் /53

9. மரபுரிமை தொடர்பில் மற்றுமொரு ஆய்வுநூல்
இரகுவரனின் "தும்பளை மேற்கு சந்திரப்பரமானந்தர் வம்சம்" /59

10. சிறுவர் இலக்கியத்தில் ஒரு முன்னகர்வு
வண செபமாலை அன்புராசா அடிகளாரின்
அண்ணன் ஆமையும் தம்பி முயலும் /64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தீட்சணமாக ஒலித்திருக்கும்
தாட்சாயணியின் ஒன்பதாவது குரல் /70

12. புனைகதை வெளியில் புதிய எல்லையினைத் தொட்டு நிற்கும்
பிரமிளா பிரதீபனின் "விரும்பித் தொலையுமொரு காடு"/76

13. புனைகதை இலக்கியத்திலொரு புதிய பாய்ச்சல்
பேராசிரியர் ஆசி.கந்தராஜாவின் பணச்சடங்கு/81

14. மண்டூர் அசோகாவின் மீதெழலாய் பழுதறக்கனிந்திருக்கும்
எழுதப்படாத கவிதைகள் /88

15. மண்டைதீவின் எட்டுத்திக்கு வட்டாரங்களையும் கண்முன்
கொணரும் மண்டைதீவு கலைச்செல்வியின்
"கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன" /94

16. சமகால சிறுவர் இலக்கியத்தின் வளத்திற்கோர் வகை மாதிரி
பஞ்சகல்யாணியின் "கதை மரம்" /97

17. இனிப்பாய் நயப்புறும்
அஜந்தகுமாரின் நாட்குறிப்புகள்/101

18. சமூக செய்திகளை சீரோடு சித்திரித்திருக்கும்
சிறீறங்கனின் சிவப்புக்கோடு/106

19. மலையக வாழ்வியலை முன்னிறுத்தும்
பாலரஞ்சனி ஜெயபாலின் நெத்திக்காசு /112

20. வடமராட்சியின் வனப்பான வாழ்வியலிற்கு திடசாட்சியாய் திகழுமொரு
கதைத்தொகுதி சிவசோதியின் உறவுகள் சேர்ந்து/118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

புனைவுகளும், புனைவல்லா எழுத்துக்களும் குவிந்திருக்கும் இலக்கிய வெளியில் வாசகர்களை ஈர்த்து, உடனடியாகத் தம்முள் நுழையச் செய்பவை புனைவுகள் எனினும், புனைவல்லா எழுத்துக்கள் புனைவுகளின் வசீகரத்தை மீறி ஆழ்ந்த கருத்துக்களால் வாசகனின் சிந்தனைச் செறிவை செம்மைப்படுத்தக் கூடியவை. அதிலும்,புனைவுகள் பற்றிய விவரணையைக் கோரும் எழுத்துக்கள் புனைவாளனின் ஆற்றலைச் சீர்தூக்கி நிறுத்துவன. அவ்வகையில் சிறுகதைப் படைப்பாளியாக நன்கறியப்பட்ட கலாபூஷணம் புலோலியூர் ஆ.இரத்தின வேலோன் தனது புனைவுசார் இலக்கியப் பங்களிப்புகளுக்கு மேலதிகமாகப் பத்தி எழுத்து,நூல் விமர்சனம், நூல் நயம் எனும் பகுதிகளில் தன் சிந்தையைச் செலவிட்டதன் விளைவாகப் புனைவற்ற பெருவெளியிலும் ஆழத்தடம் பதித்துள்ளார். அவ்வகையில் அவரால் எழுதப்பட்ட பல்துறைசார் நூல்கள் பற்றிய அவரது பார்வையின் தொகுப்பாக "அன்றலர்ந்த மலர்கள்" எனும் இந்நூல் மலர்கின்றது.

இரத்தினவேலோன் ஒரு நூல் பற்றி அணுகும் பாங்கு தனித்துவமானது. அதற்காக அவர் அந்நூல் சார்ந்த சகல விடயங்களையும் ஆராய்ந்து தேடிப் பெறுகிறார். அந்நூலின் ஆசிரியர் பற்றியும் அதன் உள்ளடக்கம் பற்றியும் அவர் முழுமையான தேடலை மேற்கொண்ட பின்னரே அக்கட்டுரையை எழுத ஆரம்பிக்கிறார். அவ்வாறு செய்கின்ற போது அப்பனுவலைத் தேடி வாசிக்க வேண்டும் எனும் ஆவல் வாசகனுக்குத் தொற்ற ஆரம்பிக்கிறது. வாசகனுக்குத் தெரியாத ஒரு விடயத்தை அவர் அறிமுகப்படுத்தும் பாங்கு அவரது எல்லாக் கட்டுரைகளையும் வாசகனைத் தேடி வாசிக்க வைக்கிறது.

இந்நூலில் அவர் அறிமுகப்படுத்தும் முதல் நூல் தாமரைச்செல்வியின் நாவலாகிய உயிர்வாசம். ஈழப் போராட்ட காலத்தில் அலைக்கழிக்கப்பட்ட, படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குப் பயணப்படும் இரு இளைஞர்கள் படகுப் பயணத்திலும், தொடர்ந்து ஆபத்தான தீவுச் சிறைகளிலும் பின்னர் புலம் பெயர்ந்த நாட்டிலும் படும் இன்னல்களைச் சித்திரிக்கும் இந்நாவல் தாமரைச்செல்விக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வருடத்தின் சாகித்திய விருத்தைப் பெற்றுத் தந்த நாவலாகும். அந்நாவல் பற்றிய தன் பார்வையைச் சித்திரிப்பதற்கு முன் ஈழத்து இலக்கிய உலகில் பெண்களின் வருகை, அவர்கள் கையாளும் கருப்பொருள் போன்ற விடயங் களையும், தாமரைச்செல்வி பற்றிய அறிமுகம், அவரது ஏனைய படைப்புகள், அவரது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் என ஒரு பரந்து பட்ட பார்வையை முன் வைக்கிறார் இரத்தினவேலோன்.

அறிவியல் சார்ந்த நூல்கள் இன்றைய உலகளாவிய வாழ்க்கைப் போக்கில் முக்கியமானவை. எனினும், தமிழில் போதிய அளவு அறிவியல் நூல்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்கிய சில நூல்களுள் தன் கவனத்தைக் குவித்த வேலோன் தெரிவு செய்திருக்கின்ற மூன்று நூல்களும் வெவ்வேறு தளங்களைப் பின்புலமாகக் கொண்டவை. மருத்துவர் எம்.கே.முருகானந்தன் எழுதிய "டாக்குத்தரின் தொண தொணப்பு", மனித உடல், உள நலவியல் சார்ந்து எளிய மனிதர்க்கும் புரியும் மொழியில் அமைந்திருப்பதனையும்,கோகிலா மகேந்திரனது "அறிவியல் கதைகள்" சிறுவர்களுக்கு அறிவியலைப் புகட்டுவதிலுள்ள அசாத்திய சவால்களை, புதிய உயிரினங்கள்,அவற்றின் சிறப்பியல்புகளினூடு கதாசிரியை எவ்வாறு கடந்து வருகிறார் என்பதனையும், பேராசிரியனது "மாசுறும் பூமி" நூலானது, காலநிலை மாற்றம், சூழல் மாசுறல் போன்ற சுற்றுச்சூழல் சார்ந்த, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களின் சாதக பாதகங்களை ஆராய்வதையும் வாசகனுக்குச் சலிப்பில்லாத வகையில் தருகிறார் இரத்தின வேலோன்.

ஈழத்தில் சிற்றிதழ்கள் பற்றிய ஆழமான அறிமுகத்துடன் "எங்கட புத்தகங்களின்" வருகையை அறிமுகப்படுத்துகிறார் நூலாசிரியர். வாசிப்புச்சூழல் அருகி வருகின்ற இன்றைய இளையோரிடம், நம்மவர் நூல்களை அறிமுகப்படுத்திக் கொண்டு சேர்க்கும் "எங்கட புத்தகங்களுக்கும்" ஒரு அறிமுகம் தேவை தானே. அதனை நிறைவுறச் செய்திருக்கிறார் இரத்தினவேலோன். சிற்றிதழ்களின் வருகை தொடர்ந்து நிறைபேறடைவதும் காணக் கிடைக்காத ஒன்றாக இருக்கையில் ஒவ்வொரு சிற்றிதழும் எவ்வளவு காலம் தத்தம் பணிகளை நல்கின என்பதிலிருந்து ஜீவநதி தொடங்கிய காலத்திலிருந்து அதன் இமாலய சாதனைகளைப் பட்டியலிட்டு, நாவல் சிறப்பிதழாக வெளிவந்த ஜீவநதியின் 150 சிறப்பிதழ் பற்றியும், அதன் ஆசிரியர் பரணீதரனின் அயராமுயற்சி பற்றியும் யாவரும் அறியும் வண்ணம் தன் எழுத்துக்களால் வண்ணம் தீட்டும் அதிசயத்தையும் இந்நூலில் காண முடிகிறது.

அறிவியல், சஞ்சிகைகள் எனும் வரிசையில் திறனாய்வு, பத்தி எழுத்து ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளிலும் தன் பார்வையைப் பதிக்க இரத்தினவேலோன் மறக்கவில்லை. எழுத்தாளர் இராஜேஸ்கண்ணனின் இரண்டு திறனாய்வு நூல்களைத் தன் கட்டுரையில் அறிமுகப்படுத்தும் வேலோன் இலக்கியத்தின் அளவுகோல்களைத் தேடும் வாசகர்கள் அவற்றைத் தேடிப் படிக்கும் முகமாகத் திசை காட்டி வழியும் காட்டுகிறார். திறனாய்வு வாசகனின் தீவிர வாசிப்பைக் கோருகிற போது, பத்தி எழுத்துக்கள் வாசகனை ஒற்றி எடுக்கும் தென்றலாகிறது. அத்தகைய பத்தி எழுத்துக்கள் மூலம் கவனத்தைக் கோருகின்ற நாவலாசிரியர் தி. ஞானசேகரனின் உலகளாவிய பார்வை செறிந்த "யாவரும் கேளிர்" எனும் நூலின் பார்வையில் அவரைச் சிறந்த பத்தி எழுத்தாளராக அறிமுகப்படுத்துகிறார் நூலாசிரியர்.

எழுத்துக்களின் பல்துறைசார் களங்களிலும் தொடர்ந்து இயங்கிய பா.இரகுபரனின் பின்னணியை பரந்த வாசகர் வட்டத்திற்கு அறிமுகப்படுத்தி தும்பளை கிராம மரபுரிமைகளை விளக்கும் நூலை அனாயாசமாகக் கையாண்டு அந்நூலில் இரகுபரன் தரும் செய்திகளை வாசகனுக்குக் கடத்துகிறார் இரத்தினவேலோன். தும்பளை மேற்கு கிராமம் வானியல், சோதிடம், சித்த வைத்தியம் என்பவற்றில் சிறந்திருந்தது என்பதற்கான சான்றுகளை இரகுபரன் உலகிற்கு அறிமுகப்படுத்த, இரகுபரனை சாதாரண வாசகருக்கும் அறிமுகப் படுத்தும் பணியினைச் செய்கிறது இந்நூல்.

அன்புராசா அடிகளாரின் சிறுவர் இலக்கியநூல் ஆன்மிகப் பணிக்கு மேலதிகமாக இளைய சமுதாயம் மீதான அக்கறையோடு ஆற்றும் அறப்பணி பற்றி இந்நூல் விதந்து உரைக்கிறது. சிறுவர்கள் மனதில் இன்றைய கலாசார மாற்றங்கள் விதைத்துள்ள அபாயகரமான வித்துக்களைப் பிடுங்கியெறிய வேண்டிய தேவை சமூக நலன் நாடும் நல்லுள்ளங்களின் பொறுப்பாகிறது. அதனைச் சீர்படச் செய்பவர்களைப் பற்றிய அறிமுகம் இல்லாது போதல் வாசகப் பரப்பிற்குப் பெரு நட்டம். அதனை ஈடு செய்யும் கட்டுரைகளை இந்நூல் சுமப்பதால் பெருமை கொள்கிறது.

சிறுகதைகள் இரத்தினவேலோனுக்கு மிக அணுக்கமானவை. ஒவ்வொரு சிறுகதையையும் அவர் அணுகும் பாங்கு தனக்கு மிகவும் நெருக்கமான நண்பனோடு இயல்பாக உரையாடுவது போலிருக்கும். அவ்வகையில் தாட்சாயணி, பிரமிளா பிரதீபன், ஆசி.கந்தராஜா, மண்டூர் அசோகா, மண்டைதீவு கலைச்செல்வி, த.அஜந்தகுமார், சிறீரங்கன், பாலரஞ்சனி, மா.சிவசோதி ஆகியோரின் அண்மைக்காலத் தொகுப்புகளின் அறிமுகத்தைச் செம்மையாகவே மேற்கொள்கிறது இந்நூல். இதில் குறிப்பிட்ட ஒவ்வொரு எழுத்தாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வகையில் தனித்துவமிக்கவர்கள். அவர்களை, அவர்களது சிறப்பியல்புகளை, அவர்கள் எழுத வந்த காலங்களை மிகவும் ஆர்வமாக ஆராய்ந்து அவ்வவ் நூல்களுக்கான தனது விமர்சனத்தை மிகவும் கச்சிதமாக உள்வாங்கி யிருக்கிறது இந்நூல் சிறுவர் கதைகளைத் தாங்கி வந்த பஞ்சகல்யாணியின் "கதை மரம்" பற்றிய கட்டுரையும் கவனிப்பிற்குரியதே.

அவ்வகையில் குறிப்பிட்ட காலகட்டத்தில் வெளிவந்த நூல்களுக்கான தனது கருத்துக்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதனூடாகக் குறித்த எழுத்தாளர்களின் வாசகப்பரப்பை அதிகரிப்பதில் தனது இலக்கியப் பங்களிப்பை மிக்க பொறுப்புடன் ஆற்றியுள்ளார் இரத்தினவேலோன் எனக் கூறி வாழ்த்துகிறேன்!

- தாட்சாயணி
(பிரேமினி பொன்னம்பலம்)

பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
12.09.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஈழத்தில் வெளிவந்த பனுவல்களை முன்னிறுத்தி அவ்வப்போது நானெழுதி வந்த கட்டுரைகள் பெரும்பாலும் தினக்குரல் பத்திரிகையிலேயே பிரசுரமாகின. 1997 முதல் 2019வரை என்னால் எழுதப்பெற்ற இருநூறிற்கு அணித்தான இத்தகு கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பத்தியொன்று ஏலவே வெளிவந்த எனது நான்கு நூல்களால் உள்வாங்கப்பட்டுவிட்டன. 2019 இலிருந்து 2022 வரையிலான காலப்பகுதிகளில் யானெழுதிய சுமார் நாற்பது கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. நூல்களை முன்வைத்து எழுதப்படும் கருத்துரைகள், ஆய்வுரை, விமர்சனவுரை, மதிப்புரை, நயப்புரை என பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படினும், என்னைப் பொறுத்தமட்டில் இவற்றினை நூல்களுக்கான "மதிப்புரை"களாகக் கருதியே வாசகர் முன்வைக்கின்றேன்.

படைப்பாளிகளிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இங்கு பிரதானமாகிறது. இம்முயற்சியானது மறைமுகமாக படைப்பாளிகளை ஊக்குவிக்கும் பொறுப்பு மிக்கதொரு பணியினையும் செய்யத் தலைப்படுகின்றது என அறிய வரும் போது உண்மையில் மனம் குதூகலிக்கவே செய்கிறது.

கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் ஈழத்து புனைகதை இலக்கியத்தின் செல்நெறி எத்தகையதாக அமைந்திருந்தது என்பதனை ஓரளவிற்கு இந்நூலில் தரிசிக்கலாம் என நம்புகிறேன். சிறுகதையுடன் நின்றுவிடாது இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களிலும் வெளிவந்த பனுவல்கள் பற்றியும் இந்நூலில் பேசியுள்ளேன். அந்த வகையில் ஏலவே வெளிவந்த என் நான்கு கருத்துரைத் தொகுதிகளிலிருந்தும் இது வேறுபட்டு விளங்குகிறதெனலாம்.

இந்த இருபது மதிப்புரைகளில் ஒன்றினைத் தவிர ஏனைய அனைத்திற்கும் தினக்குரல் பத்திரிகையே களமமைத்துக் கொடுத்திருக்கிறது. மண்டூர் அசோகாவின் நூல் பற்றிய கட்டுரை, அந் நூலில் அணிந்துரையாகவும் பின்னர் ஜீவநதி மண்டூர் அசோகா சிறப்பிதழில் ஒரு கருத்துரையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரமாகியிருந்தது. அந்தவகையில் அவ்விதழ்களின் பிரதம ஆசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அண்மைக்கால அறுவடைகளிலிருந்து "அன்றலர்ந்த மலர்கள்" எனும் இந்நூலிற்கு இசைவான இருபது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்ததோடு, நூலிற்கு அணிசேர்க்கவல்ல அணிந்துரை ஒன்றினையும் தந்துதவிய தங்கை தாட்சாயணிக்கும், இந்நூலினை வெளிக்கொணர என்னுடன் துணை நின்ற தம்பி பரணீதரனிற்கும் எனது அன்பு கலந்த நன்றிகள் என்றும் உண்டு.

பரணீயின் ஜீவநதி பதிப்பகமும் (293) எனது கொழும்பு, மீராபதிப்பகமும் (105) இணைந்து இந்நூலினை வெளிக்கொணர்கிறது. எதிர்கால நூல் வெளிக்கொணர்வு திட்டத்தின் புதியதோர் ஆரம்பம் இதுவென்பேன்.

எனது நூல் வரிசையில் பதினான்காவதாக அறுவடையாகும். "அன்றலர்ந்த மலர்களின்" உருவாக்கத்திற்கு வழமைபோல் என்னுடன் துணைநின்ற எனது மனைவி சாந்தகுமாரி மற்றும் என் பிள்ளைகள் மீரா, துவாரகன் மற்றும் குடும்பத்தினருக்கும், வாசகர்களாகிய உங்களுக்கும் எனது அன்பு என்றும் உண்டு!

எந்தைக்கும், தாய்க்கும் இந்த "அன்றலர்ந்த மலர்கள்" அர்ப்பணம்!

மீண்டும் சந்திப்போம்!

மீரா அகம்
புற்றளை, புலோலி
*24.10.2023*

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்.
arvelone@gmail.com
*0778126490/0775342128*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் இலக்கியத்திற்கொரு புதுவாசல் தாமரைச் செல்வியின் "உயிர்வாசம்"

ஈழத்து இலக்கியத்திற்கு பெண்களின் வகிபாகம் போதுமானதாக இல்லை என ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளின் முற்கூற்றில் இரசிகமணி கனக செந்தி நாதன் ஆதங்கப்பட்ட காலை வீறு கொண்டெழு மாப் போல் எழுத ஆரம்பித்தவர்களுள் பத்மா சோமகாந்தன் (புதுமைப் பிரியை) அன்ன லஷ்மி ராசதுரை (யாழ் நங்கை) வள்ளிநாயகி ராமலிங்கம் (குறமகள்) முதலானோர் மிக்க கவனத்தை ஈர்த்தனர். சாதி, சீதனம், சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் கருத்துக்களே அக்கால கட்டங்களில் இப்பேர்ப்பட்ட பெண் பிரமாக்களின் பாடு பொருளாகின.

பெண்நிலை வாதம், தேசிய இனப் பிரச்சினை போன்றவை முனைப்புற ஆரம்பித்த எழுபதுகளின் (1970) பிற்கூற்றில் மேலும் ஒரு காத்திரமிகு பெண் எழுத்தாளர் பரம்பரை தோற்றம் பெறத் தொடங்கிற்று. பலர் இப்பட்டியலில் பதிவு செய்யத் தக்கவர்கள் எனினும் ரதிதேவி கந்தசாமி (தாமரைச் செல்வி), கோகிலா தேவி மகேந்திரராசா (கோகிலா மகேந்திரன்), அசோகாம்பிகை யோகராசா (மண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகா) போன்றோர் முதனிலையானவர்கள். இம் மூவரும் தமது புனைவுகளுக்காக தேசிய சாகித்ய மண்டல விருது உட்பட பல கௌரவங்களைப் பெற்றவர்கள்.

பரந்தன், குமரபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தாமரைச் செல்வி கடந்த 47 ஆண்டுகளாக எழுத்து ஊதியத்திற்குத் தன்னை அர்ப்பணித்து வருபவர். "சுமைகள்"(1977) "விண்ணில் அல்ல விடிவெள்ளி"(1992) "தாகம்"(1993) "வீதியெல்லாம் தோரணங்கள்"(2003) "பச்சை வயல் கனவு"(2004) போன்ற நாவல்களையும் "வேள்வித் தீ" (1994) எனும் குறுநாவலையும் "ஒரு மழைக் கால இரவு"(1998) "அழுவதற்கு நேரமில்லை"(2002) "வன்னியாச்சி"(2005) "வன்னியாச்சி - சிறுகதைகளின் பெருந் தொகுதி"(2017) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் ஏலவே அறுவடை செய்திருப்பவர்.

ஈழத் தமிழ்ப் பெண் எழுத்தாளர்களுள் உலகளவில் அதீத கவனம் பெற்றவராகத் திகழும் தாமரைச் செல்வியின் சில கதைகள் ஆங்கிலம், ஜேர்மன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆறு சிறுகதைகள் குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இடைவெளி, பசி போன்ற படங்கள் உடன் நினைவில் எழத்தக்கன. ஈழத்து உன்னத நாவல்களில் ஒன்றாக இவரது "பச்சை வயல் கனவு" கொண்டாடத்தக்கது. நமது நாட்டைச் சேர்ந்த பெண் பிரமாக்களுள் நாவல் இலக்கியத்தில் கணிசமான அதே சமயம் காத்திரமான பங்களிப்பைச் செய்தவர்களுள் தாமரைச் செல்வி முதன்மையானவர். விவரணப் பாங்கான நாவல்களையும், போர்க் கால நாவல்களையும் எழுதி விமர்சகர்களைத் தன்பால் திரும்பிப் பார்க்க வைத்தவர்.

பரந்தன், சுப்ரம் பிரசுராலயம் அண்மையில் வெளிக் கொணர்ந்த "உயிர் வாசம்" எனும் பனுவல் தாமரைச் செல்வியின் ஏழாவது நாவலாக அமைகிறது. இந் நூலினூடு தான் ஒரு தேர்ச்சி மிகு நாவலாசிரியை என்பதனை தாமரைச்செல்வி மீண்டுமொரு முறை நிரூபித்திருக்கிறார். உயிர் காக்கவெனப் படகேறி அவுஸ்திரேலியா செல்ல எத்தனித்த அகதிகளின் சோகமிகு வரலாற்றினை "உயிர் வாசம்" எனும் மகுடத்தில் காவியமாக்கியிருக்கிறார் நாவலாசிரியை. இத்தகு பின்புலத்தில் புனையப்பட்ட முதலாவது நாவல் என்ற பெருமையினையும் "உயிர் வாசம்" தனதாக்கிக் கொள்கிறது.

காட்டைக் கழனியாக்கி வளமொடு வாழ்ந்த ஒரு பெரு நிலப் பரப்பினைச் சார்ந்த மக்கள் கொடிய யுத்தத்தின் இடிபாடுகளுக்குள் சிக்குண்டு அல்லற்படும் சோகத்தினை ஒரு புறமாகவும் அதில் தப்பிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைத்த மக்கள் உயிர் காக்கவெனப் புகலிடம் தேடிப் படகு மூலம் அவுஸ்திரேலியா பயணிக்க முயன்று கடலோடு கரைந்து போகும் பயங்கரத்தினை மறுபுறமாகவும் பெருந் தடைகள் பல தாண்டி எதிர் நீச்சலிட்டு அவுஸ்திரேலியா மண்ணில் காலடி பதித்ததும் அங்கு எதிர்கொள்ளும் நெருக்கடிகளை இன்னோர் புறமாகவும் அகதி மாந்தர்களின் வாழ்க்கைக் கோலங்களை தாமரைச் செல்வி உயிர் வாசத்தில் மிக அற்புதமாகவே பதிவு செய்திருக்கிறார்.

வன்னிவாழ் மக்களின் அமைதியான வாழ்வு அதைச் சீர்குலைக்குமாப் போல் மூண்ட கொடூர யுத்தம் அதனாலான அழிவு போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றி அம் மக்களுள் ஒருவராகத் தானும் வாழ்ந்து, பெற்ற அனுபவங்களினூடு ஏலவே "பச்சை வயல் கனவு", "வீதியெல்லாம் தோரணங்கள்" போன்ற நாவல்களைத் தாமரைச் செல்வி தன் முழுக் கவனத்துடனும் வெளிக் கொணர்ந் திருந்தார். இம்மையத்திலிருந்து நீட்சி பெறும் "உயிர் வாசமெனும்" நாவலானது வன்னி வாழ் மக்கள் உயிர் காக்க சிறு படகேறி அலை அலையாக இந்து பசுபிக் சமுத்திரங்களினூடு அவுஸ்திரேலியாவிற்குப் புலம் பெயர்தல், விளைவாலான கடற் பயண அனுபவம், கொக்கோஸ் தீவு, கிறிஸ்மஸ் தீவு, டார்வின் முதலான முகாம்களில் பெறும் அனுபவம் ஈற்றில் அவுஸ்திரேலியாவை அடைந்ததும் அம் மண்ணின் வாழ்வியல் என முப்பத்தாறு பெரு அத்தியாயங்களாக விரிந்து செல்கிறது.

மதி, காந்தன் எனும் இரு நண்பர்களை பிரதான பாத்திரங் களாக்கி நாவலினை நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர். காந்தனை உணர்ச்சி மிக்க பாத்திரமாகவும் மதியைப் பொறுப்புணர்ச்சி கொண்டவனாகவும் உருவாக்கியிருக்கும் தாமரைச் செல்வி காந்தனின் தற்கொலை முயற்சியையும் அதிலிருந்து அவன் மீண்டு வருவான் என்ற நம்பிக்கையை ஈற்றில் வாசிப்போர் மனதில் விதைத்து விடுவதும் மகிழ்ச்சி தருகிறது.

மதியையும் மற்றவர்களையும் ஏற்றி வந்த சிறுபடகு நடுக்கடலில் டீசல் இன்மையால் நின்று போய்விடுகிறது. அத் தருணம் படகில் மாந்தர் படும் பதகளிப்பினை தாமரைச் செல்வி விபரித்த முறைமை சிலிர்க்க வைக்கிறது.

அடியில் கிடந்த கொஞ்ச நஞ்ச டீசலையும் சேர்த்து ஓட்டியதில் படகு நகரத் தொடங்கியது. ஆனால் இரண்டு மணிநேர நகர்வின் பின் படகு திரும்பவும் நின்று விட்டது. மதியின் மனதைப் பெரும் பாறாங்கல்லு அழுத்துவது போலிருந்தது. இந்த நடுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலுக்குள் தான் எல்லாம் முடிந்து விடப் போகிறதோ? பெண்கள் பெருங் குரல் எழுப்பி அழுதார்கள். எத்தனையோ கொடுமைக் குள்ளால் தப்பி வந்து கடலுக்குள் தாழப் போகிறோமோ? என்று கூக்குரல் எழுந்தது. படகோட்டிகள் செய்வதறியாது பேயறைந்த முகத் துடன் நின்றார்கள். எல்லோருக்கும் தலை விறைத்தது போலிருந்தது. கடலோடு தான் மூழ்கிப் போய்விட்ட செய்தியை அறியும் போது வீட்டார் எப்படித் துடி துடித்துப் போவர்கள். அம்மாவின் அழுகையை நினைக்கும் போது...

அந்தக் கும்மிருட்டில் புள்ளி புள்ளியாய் தூரத்தில் ஏதோ தெரிகிறது. அந்தப் புள்ளிகள்... ஏதாவது தீவின் கரைப் பகுதியா? அல்லது படகு ஏதுமா? எல்லோரும் பரபரப்பானார்கள். இருள் முழுவதுமாக மூடிக்கொண்ட நேரத்தில் அந்தக் கரும் புள்ளியின் பக்கமாய் சிறு மின்பொட்டுகள் ஒளிர்ந்தன. படகுக்குள் பெருங் கூச்சல் எழுந்தது.

"அது கொக்கோஸ் தீவாக இருக்கலாம்".

தான் பெறாத அனுபவங்களையும் நம்பகத் தன்மை மிக்கதாய் நிதர்சனக் காட்சிக் கோலங்களாக வெகு நுட்பத்துடனும் கலைத்துவத் துடனும் இந்நாவலில் தாமரைச் செல்வி பதிவு செய்திருப்பது மலைக்க வைக்கின்றது. இந்நாவலிற்கான தரவுகளைச் சேகரிக்க மட்டும் கதாசிரியை கணிசமான காலத்தை செலவு செய்திருக்கலாம்.

இவ்வாறாக கொக்கோஸ் தீவு முகாமை வந்தடைந்த அவர்கள் பலத்த விசாரணைகளின் பின்னர் கிறிஸ்மஸ் தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு தான் பயணிகளுக்கு ஓரளவு நிம்மதி பிறந்தது. அங்கும் அவர்களது வாக்கு மூலங்கள் பதிவு செய்யப் பட்டன. ஏறத்தாழ ஒன்றரை மாதங்களின் பின்னர் டார்வினுக்கு இடம் மாற்றினர். அங்கும் அதே போல் கேள்விக்கணைகளும், பதிவுகளும் தான். ஆனாலும் டார்வினுக்கு வந்த பின்னர் இரண்டு தடவைகள் வீட்டாரோடு கதைக்க முடிந்தது சற்று உற்சாகமாக இருந்தது. மாலை நேரங்களில் மைதானத்தில் பல தமிழ் இளைஞர்களுடன் பேசவும் முடிந்தது.

அன்றும் அதே போல் நீண்ட நேர விசாரணையின் பின்னர் மதி முகாமை விட்டு வெளியே வந்தான். மனதின் படபடப்பு இன்னமும் அடங்கவில்லை. காந்தனுக்காக காத்து நின்றான். விமானம் மூலம் சிட்னிக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து விடுவிக்கப்படுவார்கள் என்ற தகவல் கிடைத்தது. மனப் பாரம் குறைய மூச்சு நிம்மதியாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. சிட்னி நகரமே குளிரில் உறைந்து போயிருந்த ஜூன் மாதத்தின் ஒரு மாலைப் பொழுதில் விமானத்திலிருந்து இறங்கி சிட்னி மண்ணில் கால் பதித்தார்கள். அவர்களுக்கு ஆறு மாதத்திற்கு பிரிட்ஜிங் விசா வழங்கப்பட்டிருந்தது. (பக்கம் 356)

மொத்தம் 549 பக்கங்களைக் கொண்ட இந் நாவலின் 356 ஆம் பக்கத்தைக் கடந்த பின்னரே வாசகர்களாலும் நிம்மதிப் பெரு மூச்சு விட முடிகிறது. கொதிக்கின்ற சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக அவலங்களை அடுக்கடுக்காகக் கூறி உள்ளத்தை உருக வைத்த நாவலாசிரியை வாசகர்களின் மெல்லுணர்வுகளையும் ஆங்காங்கே மீட்டத் தவறவில்லை. அவுஸ்திரேலியாவில் ஓரளவு சுமுகமாக வாழத் தலைப்பட்ட நிலையில் மதிக்கும் லோஜிக்கும் காந்தனுக்கும் ரூபிக்குமிடையே ஏற்பட்ட நட்புறவுகளும் காலப் போக்கில் அவை காதலாக மலர்வதும் ஈற்றில் சந்தர்ப்ப சூழ்நிலை களால் கானலாகிப் போவதுமான தருணங்களை நாவலாசிரியை நகர்த்திச் சென்ற முறைமை நாவலுடன் வாசகர்களை ஒன்றித்து வைக்கத்தக்கன.

புலம் பெயர்ந்த பின்னரும் தமது இன உணர்வுகளை இழக்காத குகதாசன் பாரதி போன்றவர்களின் பாத்திர உருவாக்கம் படகு மாந்தராக இருந்த வேளைகளிலும் சாப்பாட்டில் குறை காண முயலும் சுய இயல்பு, வீரம் காட்ட முயலும் இளைஞர்களின் ஆவேசம் போன்ற இன்னோரன்ன சித்திரிப்புகள் என நாவல் முழுவதுமே தாமரைச் செல்வியின் அரை நூற்றாண்டு கால இலக்கிய அனுபவமும், ஆற்றலும் பளிச்சிடுகிறது.

அகதிகளுக்கு உடனடியாகவே நிரந்தர விசா கிடைத்து விடுவதில்லை. இப்படித்தான் ஆறு மாதம் மூன்று மாதம் எனக் கொடுத்து அதனைப் பின்னர் நீடிப்பார்கள். அதற்கும் சட்டத் தரணிகள் மூலமே அவர்களை அணுக வேண்டியிருக்கும். அங்கு ஓரளவு அவர்கள் நிலை கொண்டதுமே இலங்கையிலுள்ள உறவினர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். இதனால் வைராக்கியத்துடன் அகதிகள் முன்னேற முயல்வார்கள். மறுதலையாகப் பாதை மாறிப் பயணிப் போரும் இல்லாமலில்லை.

அவுஸ்திரேலியாவிற்குப் புலம் பெயர்ந்தாலும் தாமரைச் செல்வியின் சிந்தனையும், கரிசனையும் எப்போதும் பிறந்தகம் மீது உண்டு என்பதற்கு இந்நாவல் தக்க சான்று. தான் வாழும் இரண்டகங் களையுமே தரிசிக்க வைக்கத்தக்கதாக தாமரைச்செல்வி இந்நாவலினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்தியிருப்பதே வெகு சிறப்பு. ஆயினும் பெரும்பாலும் ஈழம் சார் எழுத்தாளராக நின்றே அவர் இயங்கியிருப்பது கண்கூடு.

அவுஸ்திரேலிய தமிழர் வரலாற்றின் பெரு ஆவணமாகத் திகழத்தக்க இந்நாவலில் தாமரைச் செல்வி ஒரு நல்ல நாவலாசிரியை யாக மட்டுமல்லாது தேடல் மிகுந்த ஒரு தொல்லியல் ஆய்வாளராக வும் செயற்பட்டிருக்கிறார் எனலாம். “இந்நாவல் என் இரண்டரை வருட உழைப்பு” என என்னுரையில் அவர் கூறுவது அவரது அயராத முயற்சியினை சுட்டி நிற்கிறது.

போர் முற்றுப் பெற்ற பின்னர் போரால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஓர் சாராரின் அசைவியக்கத்தை இந் நாவல் சித்திரிக் கின்றது. போர் நிகழ்ந்த மண்ணில் பிறந்து வாழ்ந்து, அச்சமூகம் புலம் பெயர்ந்து செல்லும் மண்ணிலும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரால் அச் சித்திரிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதே இந் நாவலின் சிறப்பு. அந்த வகையில் வன்னி மக்களின் உணர்வுகளையும் உணர்ச்சி களையும் தன்வயப்படுத்தி படகு மாந்தரின் இப் புலப்பெயர்வுப் பதிவினைத் தாமரைச் செல்வி வெகு அற்புதமாகவே மேற் கொண்டுள்ளார் எனலாம். இத்தகு பதிவே சர்வதேசத்தின் கவனம் அவர் மீது குவியக் காரணமுமாயிற்று.

வாசிப்பதற்கு ஊறு விளைவிக்காத எளிய மொழி நடையும் ஈழத் தமிழருக்கு மிக நெருக்கமான உரையாடலின் வழி நின்று நாவ லினை நகர்த்தியமையும் நாவலின் வெற்றிக்கு வழி சமைந்துள்ளன. அவுஸ்திரேலியாவுக்கான படகுப் பயணம் பற்றி அறிய விளைவோரும் அது பற்றி எழுத விரும்புவோர் மட்டுமன்றி இலக்கியத்தை நேசிக்கும் அனைவரும் நிச்சயம் படித்துப் பார்க்க வேண்டிய நல்லதோர் நாவலாக “உயிர்வாசம்” திகழ்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

- தினக்குரல் : 01.02.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலவியல் இலக்கியத்திலோர் புதுவகைப் புனைவு
# எம்.கே.முருகானந்தனின்
# "டாக்குத்தரின் தொணதொணப்பு"

பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் நல்ல கருத்துகள் பலவும் பேராசிரியர், பண்டிதர், தமிழ்ப் புலமை மிக்கவர்கள் மட்டத் துடனேயே நின்றுவிடுகின்றன. அக்கருத்துகள் பண்டைய இலக்கியங் களுடன் பரீட்சய மற்றவர்களுக்கு எட்டாக்கனிகளாகி விடு கின்றன. இத்தகு நிலையில், அவற்றை எளிமைப்படுத்தி நாட்டின் கடைக்கோடியில், குக்கிராமத்தில் வசிக்கும் பாமரர்களும் புரியும் படி எடுத்துச் சொன்னதிலேயே கவிஞர் கண்ணதாசன், சகலராலும் "கவியரசராக" கிரீடம் சூட்டப்பட்டார்.

அதுபோலவே மருத்துவம் சார்ந்த தகவல்களும் பெரும்பாலும் ஆங்கிலத்திலும் இணைய வெளியிலும் இருப்பதால் அவற்றை அடையப் பெறுவதில் பெரும்பாலானோர் இடர்ப்படுவதுண்டு. இற்றைப்படுத்தப்பட்ட அத்தகவல்களை தம்வசமாக்கி சகலருக்கும் புரியத்தக்கதோர் மொழியில் எடுத்துரைத்த மையினாலேயே மருத்துவர் எம்.கே.முரு கானந்தன் போன்றோர் மிகவும் முக்கியத்து வம் பெறலாயினர். துறைசார்ந்த அறிவு, மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் அறிவியல், சமூகவியல், சீர்மியம் போன்றவற்றிலுள்ள பிரக்ஞை, பிராந்திய மக்களின் கலை, கலாசாரம் பற்றிய மிகு உணர்வு, மொழியாற்றல் போன்றன நலவியல் சார்ந்த இத்தகு புனைவுகளுக்கு மேலும் வலுச்சேர்த்து, அவற்றினை புதுவகை இலக்கியங்களாகப் பரிணமிக்கச் செய்தன. மிகவும் சிக்கலான விடயங்களைக் கூட தான் கையாளும் எளிமையான அணுகுமுறை மூலம் இலகுவாக்கி தனது நோயாளர்களை அல்லது வாசகர்களை அடையச் செய்யும் முருகானந்தனது திறன் வியத்தற்குரியது. நோயின் தன்மைகளை, அதன் தாக்கங்களை நோயாளிகள் அல்லது வாசகர்கள் விளங்கிப் பயனுறு வகையில் தன் துறைசார்ந்த பின்புலத்தில் நின்று கொண்டு உளவியல் தளத்தினூடு பரிகாரங்களை முன்வைப்பதிலேயே மக்களால் சிறந்த குடும்பநல மருத்துவராக முருகானந்தன் கொண்டா டப்படுகின்றார். அவரது நூல்களும் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

பாலியல் நோய்கள், போதைப்பொருள் பாவனையின் விபரீதங்கள், எயிட்ஸ் நோயின் கொடூரம் முதலானவை பற்றிய எம்.கே.முருகானந்தனின் விழிப்புணர்வு மிக்க முன்னைய பதிவுகள் அறிவியல் சார்ந்த அவரது எத்தனிப்புகளின் அத்திபாரங்கள் எனலாம் போதனைமிக்க போக்குடன் தனக்கே உரித்தான அறிவியல் சார்ந்த மொழியின் வழிநின்று இவர் இயற்றிய இம்முயற்சிகள் நலவியலில் எழுத முனையும் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் கவனக் குவிப்பிற் குள்ளாயிற்று.

இதன் தொடர்ச்சியாக முரசொலிப் பத்திரிகையில் மருத்துவர் முருகானந்தன் தொடராக எழுதிவந்த “வைத்திய கலசம்” எனும் அறிவியல் பத்தி மக்களிடையே இன்றும் மிகவும் பரபரப்பாக பேசப்படுவதொன்றாகும். அதுவே சில காலங்களின் பின்னர் அதே மகுடத்தில் நூலாகவும் வெளிவந்திருந்தது. அன்றாடம் தான் சந்திக்கின்ற தனது நோயாளர்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவற்றிற்கான பரிகாரங்களை முன்னிறுத்தி கேள்வி பதிலாகவே அப்பத்திகளை அவர் வடிவமைத்திருப்பார். அவர் கையாண்ட அத்தகு அணுகுமுறையானது வாசிக்கும் அவரது நோயாளர்களை அல்லது வாசகரை நேரடியாகவே சந்தித்து சிகிச்சை தரும் இயல்பு உடையன வாக அமைந்திருந்தன.

முருகானந்தன் எழுதிய அறிவியல் சார் நூல்களுள் “தாயாகப் போகும் உங்களுக்கு” மிகவும் பிரசித்தமானது. கருவுற்றது முதல் குழந்தைப் பேறு வரையும் அதற்கு அப்பாலும் நிகழும் உடலியல் மாற்றங்களையும் அவ்வேளைகளில் வீட்டிலிருந்தவாறே கைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்க பரிகாரங்களையும் உடனிருந்து சொல்வது போலவே அந்நூலினை அவர் யாத்திருப்பார். இளந் தாய்மார்கள் ஒரு கைநூலாகவே அதனைப் பயன்படுத்தி வரலாயினர். நான்கு பதிப்புகளைக் கண்டதோடு இலங்கை அரசின் தேசிய சாகித்ய விருதினை தனதாக்கிய பெருமையும் இந்நூலுக்கு உண்டு. கொழும்பு, மீரா பதிப்பகத்து வெளியீடான எம்.கே.முருகானந்தனின் "நீங்கள் நலமாக" எனும் நலவியல் சார் பனுவல் ஐந்து பதிப்புகளிற்குள்ளானது என்பதும் பதிவு செய்யத்தக்கது.

நீரிழிவு, கொலஸ்ட்ரோல், கண் நல விழிப்புணர்வு போன்றவை பற்றிய நூல்கள் உட்பட நலவியல் தொடர்பில் இதுவரை பதினான்கு புத்தகங்களை வெளிக்கொணர்ந்திருக்கும் மருத்துவர் முருகானந்தன் அண்மையில் ஜீவநதி பதிப்பகத்தினூடு "டாக்குத்தரின் தொண தொணப்பு" எனும் நூலினை அறுவடை செய்துள்ளார். இதே மகுடத்தில் "ஜீவநதி" சஞ்சிகையில் இவர் தொடராக எழுதிவந்த பதின்மூன்று பத்திகளும் சில வருடங்களின் முன்னர் (2000-2015) கொழும்பில் மருத்துவ பணியாற்றிய போது வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திரிகைகளில் எழுதிய பதினைந்து கட்டுரைகளுமாக மொத்தம் 28 ஆக்கங்கள் இந்நூலிற்கு அணிசேர்த்துள்ளன.

கேள்வி பதிலாக, டயறிக் குறிப்புகளாக, பத்தி எழுத்துகளாக, சிறு சிறு கட்டுரைகளாக மருத்துவக் கருத்துகளை வாசகர்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் முருகானந்தன் இந்நூலில் அங்கதத்தின் மூலம் தன் கருத்துகளை பதிவு செய்ய முற்படுகிறார். அங்கதம், எள்ளல்கள், நையாண்டிகள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளை பரப்புவதில் திரைவானில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அடைந்த வெற்றி இவ்விடத்து மனங்கொள்ளத்தக்கது. கடுமையான விடயங்களை மிக ஆழமாக மனதில் பதியவைக்க அங்கதம் அருமை யானதொரு தெரிவு என்பது இந்நூல் மூலமும் நிரூபணமாகிறது.

"டாக்குத்தரின் தொணதொணப்பு" என்ற நூலின் மகுடத்திலேயே அங்கதம் தொக்கி நிற்பது போல் மருத்துவர் கூற விளையும் ஒவ்வொரு அல்புனைவுகளிலும் மருத்துவக் குறிப்புகளுடன் அவரது நகையுணர்வும் நயத்தகு வகையில் கூடவே நகர்ந்திருக்கிறது. இப்பண்பு அண்மைக்காலங்களில் (2020-2021) சற்றுத் தூக்கலாகவே தெரிகிறது. மூச்சுத் திணறல், ஆஸ்துமா, மார்பகப் புற்றுநோய், வாய்வுக் கோளாறு, சல அடைப்பு, நீரிழிவு, மூல வியாதி உட் பட்ட ஏறத்தாழ மனிதனைப் பீடித்திருக்கும் அத்தனை பிணிகளுக்கும் தீர்வையும் ஆலோசனைகளையும் முன்வைக்கும் ஒரு மருத்துவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் சார்பில் அதீத கரிசனை கொண்டு விளங்கும் ஒரு சமூகவியலாளராகவும் உளவள ஆலோசனை நாடி நிற்போருக்கு நற்சீர்மியராகவும் திகழ்ந்து முருகானந்தன் இக்கட்டுரையைப் புனைந்திருப்பதாவது அறிவியல்சார் எழுத்துகளில் அவ் ஆளுமை அடைய இருக்கும் அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கான கட்டியம் எனலாம்.

"எனக்கு சாக ஏதும் மருந்து தாருங்கோ", "அம்மா வந்தாள் புதினமான கதையோடு" போன்ற அல்புனைவுகளில் எம்.கே.எம். எடுத்தியம்பிய விடயங்களுக்குமப்பால் சூசகமாய் கோடுகாட்டிச் சென்றிருக்கும் செய்திகள் ஏராளம் எனலாம். மேற்படி கட்டுரைகளிலும் மேலும் சிலவற்றிலும் மருத்துவர் முன்வைத்த அறிவியல் கருத்துக்களை விட சமூகம் தொடர்பிலான அவரது கவலையும் கரிசனையுமே அதிகாரப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. "அம்மா வந்தாள் புதினமான கதையோடு" எனும் சம்பவத்தினை குடாநாட்டில் மேற்கிளம்பி வருகின்ற கலாசார சீரழிவின் வழியே வெளிப்படும் ஓர் அடையாளமாகக் கொள்ளலாம். "நான் பேச மொழியின்றி வாயடைத்து நின்றேன்" என்கிறார் நூலாசிரியர். வாயடைத்து நின்றது வைத்தியர் மட்டுமல்ல, வாசகருந்தான்!

அந்தரங்க நோய்களை ஆபாசக் கலப்பின்றி அங்கதச் சுவையுடன் மருத்துவர் பதிவு செய்திருக்கும் முறைமை மேற்படி அல்புனைவுகளுக்கு புதிய பரிமாணங்களைத் தந்துள்ளன. வாலிபர்கள் பிரச்சினைகளாகட்டும், யுவதிகளின் மருத்துவச் சிக்கல்களாகட்டும் அவற்றினை கூறிய முறைமையில் நூலாசிரியர் கையாண்ட யுத்தியே இங்கு பிரதானமாகிறது. "மஹாத்மா தனது வார்த்தைகளுக்காக மீண்டும் சத்தியாக்கிரகம் செய்திருப்பார்", "நான் அப்பிடியான பொம்பிளை எண்டால்", "எலி எலியைக் கடித்துவிட்டது" போன்ற கட்டுரைகள் அத்தகு பண்புகளாலேயே வாசகர் கவனத்தை ஈர்ப்பனவாய் அமைகின்றன.

கொடுத்த மருந்துகளை ஒழுங்காகப்போடாது வைத்தியர்களுக்கே பாடம் எடுக்கும் மருத்துவ மேதாவிகளையும், இயலாத பெற்றோரை தனியாக மருந்தெடுக்க அனுப்பும் பிள்ளைகளையும் கண்ணுறுகையில் "தன் மொட்டந் தலையே பத்தி எரிவதாக" கடுஞ் சினமுற்று மருத்துவர் தொணதொணப்பதனை எவரும் இலகு வில் கடந்துசெல்ல முடியாதுள்ளது. "கடவுளிலும் மேலானவர்கள்", "தேவார மழை" போன்ற கட்டுரைகளில் மருந்து, மாத்திரைகளுக்கு அப்பால் மதம் சார்ந்த நம்பிக்கைகளும் நோயாளர்களை குணமாக்கும் அற்புதங்களை ஆணித்தரமாக எடுத்துப் பேசுகின்றார். "காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன வேட்பாளர்கள்", "இரவிரவாகப் படித்தும் பரீட்சையில் கோட்டை", "ஆஸ்துமாவும் மதுவும்" போன்ற சித்திரிப்புகள், நூலின் நுழைவாயிலில் நின்று நண்பர் இ.து.குலசிங்கம் கூறுவது போல் வெறுமனே கற்பனைப் புனைவுகள் அல்ல காத்திரமான அனுபவ வெளிப்பாடுகளே!

இவ்வாறாக ஒவ்வொரு "தொணதொணப்புகளும்" ஏதோ ஒரு வகையில் சகலரது வாழ்வியலுக்கு ஒப்ப இயைந்ததே. அந்தப் பொருத்தப்பாடுகள் வாசகர்களுக்கு அளிக்கவல்ல படிப்பினையே மருத்துவர் முருகானந்தனின் "தொணதொணப்பிற்கு" கிடைக்கும் வெற்றியெனலாம். பல புதிய முயற்சிகளை முன்னெடுக்க மருத்துவரின் மருந்து, மாத்திரைகள் மட்டுமல்ல இத்தகு தொணதொணப்புகளும் புத்தூக்கந் தரும். அறிவியல் கருத்துகளை புனைவுடன் கலந்து எடுத்துரைக்கும் இப்பண்பு அபாயம் மிகுந்த ஓர் அணுகுமுறையாகும். சமநிலை சற்றுத் தவறின் நடைச்சித்திரமாகிவிடும். ஆனால் மருத்துவர் முருகானந்தன் மருத்துவக் கருத்துகளை வெகு அற்புதமாகவே இலக்கியமாக்கியுள்ளார். அறிவியலும், புனைவும் இவரது படைப்பு களில் சரி நிகர் சமானமாய் அமைந்து புதுவகைப் புனைவொன்றிற்கு இவரை இட்டுச் சென்றிருக்கின்றன. அறிவியல் எழுத்துகளின், குறிப்பாக நலவியல் துறையில் ஒரு புதிய அத்தியாயத்திற்கான ஆரம்ப மாக டாக்டர் எம்.கே.முருகானந்தனின் இத்"தொண தொணப்பு" அமைந்துள்ளது என மிகத் தாராளமாகக் குறிப்பிடலாம்.

- தினக்குரல் : 30.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களின் அறிவியல் தேடலிற்கு அடித்தளமிடும் கோகிலா மகேந்திரனின் "அறிவியல் கதைகள்"

ஈழத்து கலை மற்றும் இலக்கியத் துறையில் தவிர்க்கப்பட முடியாத ஒரு ஆளுமையாக இன்று மிளிர்பவர் கோகிலா மகேந்திரன். ஏறத்தாழ கடந்த அரை நூற்றாண்டு காலமாக கலை, இலக்கியத் துறையில் அயராது ஈடுபட்டு வரும் இவர், தடம் பதித்த அனைத்துத் துறைகளிலும் உச்சநிலை எய்தியதோடு தனக்கென ஓர் தனித்துவத்தையும் பேணி அனைவரது கவனத்தையும் தன்பால் ஈர்த்து வைத்திருப்பவர். சிறுகதை, நாவல், நாடகம், அறிவியல், சீர்மியம், பெண்ணிய உளவியல், புனைவிலக்கியம், புனைவுசாரா இலக்கியம் என கோகிலா மகேந்திரனின் எத்தனிப்புகள் பன்முகத் தன்மை மிக்கவை, பரவலானவை.

எமது நாட்டில் அநேகமான எழுத்தாளர்கள் அறிமுகமாவது போலவே கோகிலாவின் இலக்கிய பிரவேசமும் ஒரு சிறு சஞ்சிகையினூடாகவே நிகழ்கிறது. 1972இல் "குயில்" எனும் சஞ்சிகையில் பிரசுரமான "அன்பிற்கு முன்னால்" எனும் சிறுகதையே இலக்கிய உலகிற்கு இவரை இனங்காட்டிற்று. பின்னர் "ஈழநாடு" பத்திரிகையும் "சுடர்" சஞ்சிகையும் ஏட்டிக்குப்போட்டியாக நின்று இவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடம் போட்டன என்றால் அது மிகையாகாது. கோகிலாவின் கணிசமான கதைகளை சுடர், "பரிசுக்கதை" மகுடமிட்டு பிரசுரிக்க பல குறு நாவல்களையும் ஈழநாடு தொடர்ச்சியாக பிரசுரித்து இவரது வளர்ச்சிக்கு உரமிட்டன.

இற்றைவரை கோகிலா எழுதிய **102** சிறுகதைகள், "மனித சொரூபங்கள்", "முரண்பாடுகளின் அறுவடைகள்", "பிரசவங்கள்", "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்", "முகங்களும் மூடி களும்", "வரிக்குயில்" போன்ற ஆறு தொகுதிகளில் அறுவடையாகி யுள்ளன. இவற்றுள் "பிரசவங்கள்", "வாழ்வு ஒருவலைப்பந்தாட்டம்" ஆகிய இரு தொகுதிகளும் தேசிய சாகித்திய விருதினைவென்றமை குறிப்பிடற்பாலது. "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்" வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருதினையும் பெற்றிருந்தது.

பல குறுநாவல்களையும் நாவல்களையும் கோகிலா எழுதி யிருப்பினும் "துயிலும் ஒருநாள் கலையும்"**(1986)**, "தூவானம் கவனம்"**(1989)**, "சந்தனச்சிதறல்கள்"**(2018)** ஆகிய மூன்றுமே நூலுருப் பெற்றுள்ளன. பெண்ணிய சிந்தனை கிளர்ந்தெழுந்து இலக்கியமாக்கப் படுவதற்கு ஒரு அடித்தளமாய் அமைந்த வகையில் இவரது "துயிலும் ஒருநாள் கலையும்" மிக முக்கியமானதொரு நாவலாகக் கருதப்படு கிறது. "தூவானம் கவனம்" நாவலானது புலப்பெயர்வினாலான பேர பாயங்களையும் பாதிப்புகளையும் பதிவு செய்திருந்தது. புலம்பெயர் இலக்கியம் முனைப்புற ஆரம்பித்த காலத்திலேயே அறிவுபூர்வமாக அமைந்த கோகிலாவின் அத்தகு எத்தனிப்பு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்ததெனலாம்.

கோகிலா மகேந்திரனை முற்றுமுழுதாக வெளிப்படுத்திய மற்றுமோர் துறையாக நாடகத்தினைக் கொள்ளலாம். கடந்த ஐம்ப தாண்டுகளில் அரங்கக் கலையில் இவரது வகிபாகம் வியத்தற்குரியது. தற்போது தொடராக முகநூலில் இவர் ஏற்றிவரும் பதிவுகளே அவற்றிற்கு சாட்சியமாகின்றன. நடிகையாக, நெறியாளராக நின்று இவர் ஆற்றிய அரங்கச் செயற்பாடுகள் தனியாக ஆய்வுக்குட்படுத்தப் பட வேண்டியன. குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு போன்றோரின் வழிகாட்டல்கள், நெறியாள்கையில் கோகிலாவை மேலும் மெரு கேற்றின. நடிப்பு, நெறியாள்கைக்கு அப்பால் அக்கலை பற்றிய பதிவுகளையும் "குயில்கள்", "கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு", "அரங்கக்கலையில் ஐம்பதாண்டு" போன்ற மகுடங்களில் அவ்வப்போது பனுவல்களாகவும் இவர் வெளிக் கொணர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன் உச்சந்தொட்ட நான்காவது பரிமாண மாகச் சீர்மியத்தைக் கொள்ளலாம். உளநலங் குன்றியோரின் உணர்வு களுடன் ஊடாடி அவர்களை நல்வழிப்படுத்தும் உளவள ஆலோசக ராக நின்று இவர் புரியும் பணியானது உண்மையில் நெருக்கீடுகள் நிறைந்த இன்றைய வாழ்வியலுக்கு மிகவும் இன்றியமையாத தொன்றாகும். இவருக்கு இணக்கமான இத்தகு சீர்மியச் சிந்தனைகளே இவரின் புனைகதைகளிலும் விரவி நின்று அப்படைப்புகளுக்கு ஓர் செம்மையை நல்கின்றதெனலாம். உளவள ஆலோசகராக அளப் பெரும் பணிபுரிவதோடு அது தொடர்பிலான பல கட்டுரைகளையும் கோகிலா எழுதியுள்ளார். அக்கட்டுரைகள் "எங்கே நிம்மதி?", "மனச்சோர்வு", "மனமெனும் தோணி", "உள்ளம் பெருங்கோயில்", "உள்ளத்துள் உறைதல்", "சீர்மியத்தில் சிறப்பு முறைகள்" எனும் நூல்களில் தொகுக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

இவை தவிர பெண்ணிய உளவியல் புனைவிலக்கியம், புனைவு சாரா இலக்கியம் போன்ற பரிமாணங்களிலும் முறையே "நேர் கொண்ட பார்வை", "புலச்சிதறல் நெஞ்சம்", "திருமனிதர் வாழ்வு" ஆகிய நூல்களை கோகிலா மகேந்திரன் வெளிக்கொணர்ந்துள்ளார். "விழிமுத்து", "விழிசைச்சிவம்", "தங்கத்தலைவி" போன்ற தனிமனித ஆளுமை நூல்களையும் இவர் அறுவடை செய்துள்ளார். தனது மணி விழாவை முன்னிட்டு "சோலைக்குயில்" எனும் மலரினை தெல்லிப் பழை கலை இலக்கிய களத்தினூடு இவ் ஆளுமை வெளிக்கொணர்ந் திருந்ததும் நினைவிற்கு வருகிறது.

அறிவியல் ஆற்றலையும் கற்பித்தல் அனுபவத்தினையும் அதீதமாகவே கொண்டிருக்கும் கோகிலா மகேந்திரன் அத்துறையிலும் நூல்களை எழுதித் தன் முத்திரையினை பதிக்கத் தவறவில்லை. அந்த வகையில், 2000ஆம் ஆண்டில் இவர் எழுதிய "விஞ்ஞானக்கதைகள்" மூன்று பதிப்புகளை கண்டுள்ளமை தமிழில் அறிவியல் கதைகள் சார்ந்த நூல்களுக்கான தேவையினை உணர்த்தி நிற்கின்றது. இதன் ஒரு தொடர்ச்சியாகவே சிறுவர்களுக்கான "அறிவியல் கதைகள்" எனும் இந்நூலினை அண்மையில் இவர் அறுவடை செய்துள்ளார். சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் இந்நூலை பதிப்பித்திருக்கிறது.

கோகிலா மகேந்திரனின் ஆசிரிய அனுபவமும் சீர்மிய செயற் பாடுகளும் "அறிவியல் கதைகள்" எனும் இந்நூலினுள் நுழைந்ததும் புலனாகிறது. 5 முதல் 7ஆம் தர மாணவர்களுக்கே இந்நூல் உகந்தது என்பதால் அப்பருவ மாணவர்களது உளவியலை நன்கு அறிந்து கொண்டு அவர்களுக்கு புரியும் வகையில் மிக்க இலகு நடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளை ஆசிரியை நகர்த்தியிருப்பது நயத்தற்குரியது.

தலைமுறை தலைமுறையாக எம்முன்னோர்கள் சொல்லி வந்த பாரம்பரியக் கதைகள் யாவுமே இக்காலச் சிறார்களது தேடலின் முன் காலாவதியாகிவிட்டன. அவர்கள் புதியதையே தேடுகின்றார்கள். புத்தம் புதிய தகவல்களை அவர்களுக்கு புதிய முறைமையிலேயே சொல்ல வேண்டியிருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளும் புத்தாக்கங்களுமே அவர்களை குதூகலிக்க வைக்கின்றன. அந்தவகையில் பாட்டியின் மடியிலிருந்து கதைகள் கேட்பதைவிட தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னமர்ந்து "டிஸ்கவரிச்சேனல்" பார்ப்பதிலேயே அவர்கள் நாட்டங் கொள்கின்றனர்.

அத்தகு "டிஸ்கவரிச்சேனல்" பார்க்கும் ஒரு புத்துணர்வினையே கோகிலாவின் அறிவியல் கதைகளெனும் நூல் ஏற்படுத்துகின்றது. டைனோசர், டொல்பின், முருங்கைக் கற்கள், பசுங்கிளி, நரி, குருவி போன்ற அறுவகை உயிரினங்களினூடாக கதாசிரியை இக்கதைகளை நகர்த்தியுள்ளார். ஒவ்வொரு கதையினையும் சொல்லும் முறைமையும் கையாண்ட வேறுபட்ட உத்திகளுமே சுவாரஸ்யமாக அமைந்து வாஞ்சையுடன் கதைகளை வாசிக்கத் தூண்டுகின்றன. இந்நூலில் இடம்பெற்றுள்ள சிறுவர்களை மகிழ்விக்க வல்ல உயிரினங்களின் அசாதாரண செயற்பாடுகள் குறிப்பாக டொல்பின் மீன்களின் சாகச விளையாட்டுக்கள் போன்றன அவர்களது உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்வினை நல்கி கல்விசார் தேடல்களில் அவர்களை உற்சாகத்துடன் ஈடுபட வைக்கின்றன.

சிறுவர்களுக்கு கதைகள் சொல்லும்போது அல்லது பாடங்களைப் புகட்டும் போது அவர்களது மனதில் பதியும் வண்ணமாக எடுத்துரைத்தலே நன்மை பயக்கவல்லது. இடது இதயவறையையும் இடது சோணையறையையும் தொடுக்கும் வால்வின் பெயரும் "இ"யிலேயே ஆரம்பிக்கிறது. அதன்பெயர் "இருகூர் வால்வு" என ஏறத்தாழ ஐம்பது வருடங்களின் முன்னர் விலங்கியல் பாடத்தில் சிவபாதசுந்தரம் சேரும், கனகசபாபதி சேரும் சொல்லிக்கொடுத்தது இன்றுவரை எம்மனதில் பசுமையாகவே உள்ளது. அது போலவே இங்கும் உயிரிகளின் சிறப்பியல்புகளை கூறும்போது கதையோடு கதையாக நூலாசிரியை சில தகவல்களையும் கூறிவிடுவது கவனத்திற்குரியது. "நான் உங்களை பார்த்துச் சிரிப்பேன். அப்போ என் நாற்பத்திரண்டு பல்லும் தெரியும்" என ஓரிடத்தில் நரி கூறுவதாக ஆசிரியை கதை சொல்லும்போது "நரியாரின்" பற்சூத்திரத்தையும் அருளாமலேயே மாணவர்களுக்கு போதித்து விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலவே "நூற்றைம்பது மில்லியன் வருடங்களுக்கு முதல் கூர்ப்புற்ற இந்த பைன் மரங்கள் கூட்டமாக நிற்பதும் ஓரழகுதான்". (பக்கம் 10) எனப் பைன் மரங்கள் கூறும்போதும் "மீன்கள் அருகில் வந்துவிட்டார்கள். நீரைச்சுற்றி ஒரு அடி அடித்தேன். அத்தனைபேரும் போய் நயனனின் வலையில் வீழ்ந்திருப்பார்கள். அல்லாவிட்டால் எனது உடலில் இருபது அடி நீளமும் ஆறுதொன் நிறையும் இருந்து என்ன பயன்? என டொல்பின் கூறுவதாக சொல்லும்போதும் (பக்கம் 16) முறையே அந்தந்த உயிரினங்கள் தோன்றிய காலகட்டம் மற்றும் அவற்றின் உடல்வாகு பற்றிய தகவல்களையும் மனதில் பதியும்படியாக சொல்லி விடுகிறார். ஏழாந்தர மாணவர்களுக்கு "கூர்ப்பு" எனும் பதம் புதியது. ஆனாலும் அதிலிருந்து அவர்கள் தமது அறிவியல்சார் தேடல்களை ஆரம்பிக்க இத்தகு போதனைக் கதைகள் வழிவகுக்கின்றன.

காட்டுத்தீயால் பெருநட்டம் என்பதே பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. ஆனால், "காட்டுத்தீயால் லாபமும் இருக்கிறது. அதன்போது தான் பைன் மரங்களின் வித்துகள் வெடித்துப் பரவும்" என்ற தகவல் சிறுவர்களுக்கு மட்டுமல்ல வளர்ந் தோருக்கும் புதியதொன்றாகவே விளங்குகிறது. இவ்வாறாக அறிவியலின் பல்வேறு கூறுகளிலும் கோகிலா மகேந்திரனுக்குள்ள அறிவும் ஆழ்ந்த தேடலும் ஆச்சரியப்பட வைக்கின்றன. அறிவிய லுடன் பல இடங்களில் சமூகவியலையும் வாழ்வியலையும் அரசியல் சார்ந்த பரிகாசங்களையும் இந்நூலில் ஆங்காங்கே சுவைபடவே நூலாசிரியர் தெறிக்க விட்டுள்ளார்.

சித்திரக் கதைகளும் சித்திரங்களுடன் கூடிய கதைகளும் சிறார்கள் மத்தியில் அதீத செல்வாக்கை செலுத்துகின்றன. அதிலும் குழந்தைகளுக்கு அவர்கள் கண்களால் இதுவரை காணாத புதியவகை உயிரினமொன்றினை அறிமுகப்படுத்தும்போது சித்திரங்கள் மிகமிக அவசியமாகின்றன. கற்பனையினை செழுமைப்படுத்தி விரைவாகவும் விளக்கமாகவும் விடயதானங்களை விளங்கிக்கொள்ள இத்தகு மாதிரிப்படங்கள் துணை புரிகின்றன. இந்நூலிலும் சித்திரங்கள் அவ்வாறானதோர் பங்கினையே ஆற்றுகின்றன. சிறார்களது நூலொன்றுக்கு ஒரு சிறுமியே தனது வர்ணப்படங்களினால் அணி சேர்த்திருப்பது மற்றுமோர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நூலின் ஓவியர் என பக்கம் இரண்டில் நூலாசிரியரின் முகச்சாயலுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அந்த அழகிய சிறுமி அவரது மரபணுக் களூடே வந்தவர் என்பது வாசகர்களை வியக்க வைக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மற்றும் மகேந்திரன் தம்பதியினரின் ஏக புதல்வன் கலாநிதி பிரவீணனின் மகள் நயனபாஷினி தான் அச்சிறுமியென டாக்டர் எம்.கே. முருகானந்தன் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் அறிவியல் எழுத்துக்களில் உச்சந்தொட்ட மருத்துவர் முருகானந்தனது அணிந் துரை நூலுக்கு ஒரு கனதியை தந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

சிறுவர் இலக்கியங்களில் சிறார்களின் பாத்திரங்களும் அவற்றின் பங்களிப்புகளும் மிக முக்கியமானவை. சிறுவர் இலக்கியங் களின் உள்நுட்பங்கள் சார்ந்த புரிதலுடன் சித்திரிக்கப்படும் இத்தரு பாத்திரங்கள் மிக்க அறிவுபூர்வமாக அமைந்திருந்தால் மட்டுமே அப்படைப்புகள் வாசகர் கவனத்தை குவிக்க வல்லனவாகின்றன. அந்த வகையில் விழிமொழி, பாஷினி, பாஷா, நயனன், நயனு, நயனி என ஆசிரியைக்கு மிக நெருக்கமாக விளங்கும் பாத்திரங்கள் யாவும் வாசகர்களோடும் ஒருப்பட்டு விடுவதில் இந்நூலின் படைப்புகளும் பெறுமதிமிக்கதாகின்றன. மேற்படி பாத்திரங்கள் ஆறும் அதன் பெயர்கள் உணர்த்தி நிற்பது போல ஒருவரையே சுட்டுகிறது. ஆசிரியையின் பேர்த்தி நயனபாஷினியே அப்பாத்திரம். தனது பேர்த்தி நயனியைப் போன்றவர்களுக்காக பாட்டி கோகிலா நடை முறைக்கு ஒவ்வாத பாரம்பரியக் கதைகள் எவற்றையுமே கூற எத்தனிக்காது முளையிலேயே அறிவியலைப் புகட்டி விட முனைவது முன்மாதிரியானது. அந்த இடத்திலேயே கோகிலா மகேந்திரன் தனது தனித்துவமான முத்திரையை பதித்து நிற்கின்றார், அனைவரது கவனத்தையும் பெறுகிறார்.

கோகிலாவின் தந்தையார் செல்லையா சிவசுப்பிரமணியம் சைவத்திலும் தமிழிலும் அதீத ஈடுபாடுடையவராக விளங்கியவர். இசை நாடக நடிகர், புராணப் படன வித்தகர். உரையாசிரியர், பண்ணிசைப் புலவர் என பல்துறை சார்ந்த அறிஞராக திகழ்ந்தவர். தனது நூலிற்கு தேசிய சாகித்திய விருது பெற்றவர். கோகிலாதேவி மற்றும் மகேந்திரராஜா தம்பதியரின் மகன் கலாநிதி பிரவீணன் தனது விடாமுயற்சியாலும் அதீத திறமையாலும் இளவயதிலேயே சாதனை கள் புரிந்தவர். கலை இலக்கியக் கள வெளியீடாக சில வருடங்களின் முன்னர் இவர் வெளிக்கொணர்ந்த "ஏலியன் கதைகள்" எனும் விஞ்ஞானப் புனைகதை நூல் வெகு பிரசித்தமானது. இத்தகு கலைப் பாரம்பரியம் மிக்க இந்தக் குடும்ப மரபணுக்களினூடே நான்காவது தலைமுறையில் வழிவந்த செல்வி நயன்பாஷினி பிரவீணனை ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியராக இந்நூலில் அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் கண்டிருக்கிறார் கோகிலா மகேந்திரன். அந்தவகையிலும் இந்நூல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

அறிவியலில் புதிய பாதைகளை திறக்கவல்ல இதையொத்த முயற்சிகளில் தொடர்ந்தும் இந் நூலாசிரியை ஈடுபடல் வேண்டும். உலகளாவிய அறிவியல் செய்திகளையும் இற்றைப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்ப மற்றும் கணினிசார் தகவல்களையும் விஞ்ஞான முன்னேற்றங்களையும் எமது சிறார்களுக்கு பேதிக்கத்தக்க வகையில் அந்நூல்கள் அமைய வேண்டும். கல்வியியல், அறிவியல், உளவியல் மற்றும் ஆங்கிலப்புலமை, தமிழ்ப்புலமை ஆகியவற்றை ஒருசேரப் பெற்றிருக்கும் கோகிலா மகேந்திரன் போன்றவர்களால் தான் இக்கலையினை சிதறாது முன்னெடுத்துச் செல்ல முடியும். இப்பெரு முயற்சிக்கு முன்னுதாரணமாக முடியும்.

- தினக்குரல் : 25.04.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் எழுத்துக்களின் சமகால செல்நெறிக்கான ஒரு சாட்சி : எஸ்.பேராசிரியனின் "மாசுறும் பூமி"

சர்வதேச ரீதியில் துரிதமாய் நிகழும் தொழில்நுட்ப வளர்ச்சியையும், விஞ்ஞான மாற்றங்களையும் அன்றாடம் இற்றைப் படுத்திக் கொள்ள வேண்டிய நவீன யுக மொன்றில் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம். உலகளாவிய அறிவியல் மொழியாகத் திகழும் ஆங்கில மொழிக்கு இத்தகு இற்றைப் படுத்தத்தக்க வல்லமை எளிதில் வசப்படினும் தமிழில் அறிவுலகம் சார்ந்த எழுத்துக்களின் பிரசன்னம் ஒரு தேவை நிர்ப்பந்தம் எனத் தாராளமாகவே கூறலாம்.

அந்த வகையில் தமிழில் அறிவியல் எழுத்துக்கான நீண்ட வரலாறே உண்டெனலாம். தமிழகத்தில் "கலைக்கதிர்" சஞ்சிகையின் ஆசிரியர் தாமோதரன், மற்றும் நவநீத கிருஷ்ணன் போன்றோரை இத்துறையின் பிதாமகர்களாக கொள்ளலாம். இவர்களை அடியொற்றி மணவை முஸ்தபா, நெல்லை க.முத்து போன்றோர் இத்துறையில் கோலோச்சினர்.

ஈழத்தைப் பொறுத்தமட்டில் தமிழில் அறிவியல் எழுத்துக்கான ஒரு ஆரோக்கிய மான பாரம்பரியமே பேணப்பட்டு வந் துள்ளது. குறிப்பாக 1960 களின் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறை துரித வளர்ச்சி கண்டது. பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களை இத்தகு எழுத்துக்களுக்கு முன்னோடியாக கொண்டால், டாக்டர் இந்திரகுமார், டாக்டர் எம்.கே.முருகானந்தன், டாக்டர் ச.முருகானந்தன் போன்றோரது கட்டுரைகளும், பனுவல் களும் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு அறிவியல் எழுத்துக்களை இட்டுச் சென்றன எனலாம். இந்த நீண்ட பாரம்பரியத்தின் இன்றைய தொடர்ச்சிகளில் ஒருவராக எஸ்.பேராசிரியனை இனங் காணலாம். அறிவியல் எழுத்துக்களின் சமகால செல் நெறிக்கான சாட்சியாக இவரது ஆக்கங்கள் விளங்குகின்றன.

யாழ்.வடமராட்சி தென் புலோலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் பேராசிரியன், புலோலி புற்றளை மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஷ்வராக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி போன்ற புகழ் பூத்த கல்விக் கூடங்களில் தனது கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி (B.Sc Hons) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். எவ்.ஆர்.எஸ்.சி. (இலண்டன், இலங்கை) பட்டப்பின் படிப்பினையும் நிறைவு செய்த பேராசிரியன் இலண்டன், றோயல் இரசாயனக் கழகத்தின் பட்டய இரசாயனவியலாளர் எனும் பட்டத்தினையும் தனதாக்கிக் கொண்டவர். இலங்கை மின்சார சபையில் பிரதான இரசாயினியாகப் பணிபுரிந்து இளைப்பாறிய பின்னர் வீரகேசரிப் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் இணைந்து “ஜீனியஸ்” பத்திரிகைக்குப் பொறுப்பாசிரியராக விளங்கினார்.

கடந்த நான்கு தசாப்தங்களாக இலங்கையில் வெளிவரும் ஞாயிறு வார வெளியீடுகளுக்கு பேராசிரியன் விஞ்ஞான தொழில் நுட்பக்கட்டுரைகளை எழுதி வருகின்றார். அறிவியல் வளர்ச்சிகளை உள்வாங்கியும், ஆங்கிலத்தில் தான் வாசித்தவற்றை மொழி பெயர்த் தும், தன் தொழிலனுபவங்களில் பெற்றவற்றினைத் தொகுத்தும் இற்றைவரை இருநூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை இவ்வகையில் இவர் எழுதியுள்ளார். அதிகம் படிக்காதவர்களும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க இலகு தமிழில், சரள நடையில் இலக்கணம் வழுவாது கட்டுரைகளை எழுதும் முறைமையே ஈழத்தின் தலைசிறந்த விஞ்ஞான எழுத்தாளர்களுள் ஒருவராக இவரை உயர்த்தியுள்ளது எனலாம்.

இலகு வாசிப்பினூடாக தினமும் உலகளாவிய ரீதியில் நிகழும் அறிவியல் வளர்ச்சிகளையும் விஞ்ஞான முன்னேற்றங்களையும் அறிந்து கொள்வதற்கு பேராசிரியனது அறிவியல் கட்டுரைகள் பெரிதும் உதவத் தக்கன. வாசகர்களால் எளிதில் உள்வாங்கத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் தெளிவுடனும், ஆகர்ஷிக்கத்தக்க வகையினும் அவை எழுதப்பட்டுள்ளமையே அதற்கான அடிப்படையாகும். இத்தகு பண்புகளை தன் எழுத்தில் தக்கவைத்திருப்பதால் தான் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்திடமிருந்து விஞ்ஞான எழுத்தாளர் எனும் உயர் விருதினை **1993** இலும் **2006** இலுமாக இருதடவைகள் பேராசிரியனால் இலகுவில் பெறமுடிந்தது.

பேராசிரியன் தன் கட்டுரைகளில் கையாளும் திருத்தமான மொழிநடைக்கு மரபு வழி வந்த அவரது தமிழ்ப் புலமையும் ஒரு காரண மாகின்றது. தென்புலோலியூரின் பெயர் பெற்ற பண்டிதர் க.சுப்பிர மணியம் அவர்களே பேராசிரியனின் தந்தையார் என்பதும் பேரறிஞர் கந்த முருகேசனார் போதித்த புற்றளை மகாவித்தியால யத்திலேயே இவர் தனது அரிச்சுவடி உட்பட்ட ஆரம்ப கல்வியைப் பெற்றார் என்பதும் இவ்விடத்தே குறிப்பிடற்பாலது.

**1980** கள் முதல் வார வெளியீடுகளுக்குத் தானெழுதிய கட்டுரைகளைப் புதுக்கியும், மெருகூட்டியும் அவ்வப்போது நூல் களாக பேராசிரியன் அறுவடை செய்துள்ளார். அந்த வகையில் முறையே **2001, 2002** மற்றும் **2004** ஆம் ஆண்டுகளில் கொழும்பு மீராபதிப்பகத்தினூடு இவர் வெளிக்கொணர்ந்த "வளரும் தொழில் நுட்பம்", "கருகும் பசுமை", "கலைச்சோலை" போன்ற நூல்கள் மிகவும் பிரசித்தமானவை. "அறிவியலின் பயன்பாட்டை அகண்ட மக்கள் மட்டத்தில் பரப்ப வேண்டும் என்ற ஓர் இயக்கத்தில் (அறிவியல் மேம்பாட்டுக்கான இலங்கைக் கழகம் நடத்தும் அறிவியற் பரப்புகை இயக்கத்தில்) நண்பர் பேராசிரியனுக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு" என இந்நூல்கள் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி ஓரிடத்தில் கூறியது ஈண்டு மனங்கொள்ளத்தக்கது.

மேற்படி மூன்று நூல்களுள் "கருகும் பசுமை" **2002** இல் வடக்கு, கிழக்கு மாகாண சாகித்ய விழாவில் அறிவியலுக்கான விருதினை தன் வசமாக்கிக் கொண்டது என்பதனை இவ்விடத்தே பதிவு செய்தல் பொருத்தமானதே. **2006** இல் "மாசடையும் உலகமும் நம் கடமையும்" எனும் பேராசிரியனது நான்காவது அறிவியல் நூல் சென்னை, மணிமேகலைப் பிரசுரமாக வெளியானது. மிக நீண்ட பதினான்கு ஆண்டு கால இடைவெளியின் பின்னர் "மாசுறும் பூமி" எனும் பேராசிரியனது ஐந்தாவது நூல், ஜீவநதியின் **146** ஆவது வெளியீடாக **2020** ஆம் ஆண்டில் அறுவடையாகியுள்ளது.

அதிமுன்னேற்றமடைந்த நவீன தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அதன் பக்க விளைவாக சூழல் மாசடைந்து வருவதில் அவதானம் செலுத்த ஆரம்பத்திலிருந்தே அசிரத்தையாகி விட்டான் என்ற ஆதங்கத்தில் எழுதப்பட்ட பேராசிரியனின் 22 கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. "ஏற்கனவே பூமியில் வாழும் உயிரினங் களில் 50 சதவீதம் அழிந்து விட்டன என ஐ.நா அறிக்கை ஒன்று கூறுகிறது. இதே வேகத்தில் பூமி அழுக்கடைந்து வருமாயின் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் பூமி ஓர் இறந்த கிரகமாக மாறிவிடும். எனவே இந்தக் காத்திரமான பிரச்சினையையிட்டு சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டாயத்துள் நாம் இருக்கிறோம்." இது போன்ற விழிப்புணர்வு மிக்க செய்திகளை பதிவு செய்திருக்கும் ஆசிரியர் அதற்கான பரிகாரங்களை யும் பெரும்பாலான கட்டுரைகளில் தந்திருப்பது திருப்தி தருகின்றது.

காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் பேரழிவுகள் பற்றி நூலின் நான்கிற்கும் மேற்பட்ட அத்தியாயங்கள் பேசுகின்றன. இன்னும் பத்து ஆண்டுகளுள் புவி மேலும் இரண்டு பாகை செல்சியஸால் வெப்ப மடைந்து அதன் விளைவால் கடல் மட்டம் உயர்ந்து சிறிய தீவுகள் மற்றும் கரையோரப் பிரதேசங்கள் யாவும் மூழ்கடிக்கப்படும் என்ற விஞ்ஞானி நோர்த் ஹாஸின் எதிர்வு கூறலை முன் வைத்து அதன் பின்னணிகளை ஆராய்ந்து தன் கருத்துக்களையும் சிபார்சுகளையும் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியிருக்கும் பேராசிரியன். பேராபத்து ஒன்றிலிருந்து விட்டுபட்டு விடலாம் என வாசகர்கள் நம்பிக்கையுடன் நிம்மதிப் பெருமூச்சு விடுமளவிற்கு தனது கட்டுரை யினை முடித்திருக்கும் முறைமை மனசார மெச்சத்தக்கது. "காலநிலை மாற்றத்திற்கு பூமியைச் சுற்றி வளிமண்டல எல்லையில் இருக்கும் ஓசோன் வாயுப்படலமும் ஒரு முக்கிய காரணம். இந்த வாயு சூரியக் கதிர்களில் நச்சுக் கதிர்களை அகற்றி நல்ல கதிர்களையே பூமிக்கு அனுப்பி வருகிறது. இருப்பினும் இந்தவாயுப் படலத்தில் ஓட்டைகள் விழுந்து நேரடியாக சூரியக்கதிர்கள் பூமிக்கு வந்து பூமியை வெப்பமாக்குகின்றன. எனவே ஓசோன் படலத்தை அழிக்கும் குளோரோ புளோரோ காபன் போன்ற வாயுக்களைத் தடை செய்தல் மிக முக்கியமாகும்," போன்ற பேராசிரியனின் காத்திரமான கருத்துக்கள் கட்டுரைகளுக்கு கனதியைக் கொடுத்துள்ளன.

காலநிலை மாற்றத்தினால் கடல் உணவு நஞ்சாக மாறும் ஆபத்தினையும், குழந்தை பிறப்பு விகிதத்தில் ஏற்படும் பாதிப்பினை யும், வேளாண்மையில் நிகழும் வீழ்ச்சியினையும் விபரித்துச் சொல்லும் ஆசிரியர் காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளங்களை உபயோகித்து ஆடம்பர வாழ்க்கை வாழும் செல்வந்த நாடுகள் பயனடைந்து வருவது மிகவும் விசனத்துக்குரியது எனும் தனது கண்டனத்தையும் கட்டுரையினூடு தெரிவித்திருப்பது கவனத்திற்குரியது.

"சூரியன் ஒளி இழக்கப் போகிறது", "வாழவே முடியாத இடமாக இந்தப் பூமி மாறும்", "செவ்வாய் கிரகத்திற்கு குடி பெயரத் தயாராகுங்கள்" போன்ற கட்டுரைகளும் விழிப்புணர்வினை ஏற்படுத்தவல்ல நல்ல பல தகவல்களைத் தந்திருப்பதோடு, சிந்திக்கவும் வைத்திருக்கின்றன. "கோழி முட்டையில் நச்சு மாசுக்கள்" எனும் அத்தியாயம் வாசகர்களை பதகளிப்பிற்குள்ளாக்கி மேலும் ஆர்வத்துடன் கட்டுரையை வாசிக்க வைக்கின்றது. மெலிலமின் எனும் நச்சுப் பொருள் கலந்த குழந்தை களுக்கான பால்மா, மெதமோல் மற்றும் குளோரோபோம் கலந்த மது வகைகள் போன்று விப்றோனிஸ் நஞ்சு சேர்ந்த கோழி முட்டைகளும் பேரழிவினை ஏற்படுத்துவன. இப்பேர்ப்பட்ட பொருட்களை கொள்முதல் செய்யும் போது மிகுந்த அவதானமும் பகுப்பாராய்ந்து கொள்வனவு செய்யும் பக்குவமும் தேவை என்பதனை பேராசிரியன் இக்கட்டுரை வாயிலாக வலியுறுத்திக் கூறுகின்றார்.

"நெடுங்காலம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான இரகசியங்கள்" எனும் மகுடத்திலும் ஓர் அத்தியாயத்தினை ஆசிரியர் இந்நூலில் சேர்த்துள்ளார். அறிவியல் விடயங்களை சுவாரஸியத்துடனும் பேராசிரியன் சொல்லவல்லவர் என்பதற்கு சான்றாக அமைகின்றது. இக்கட்டுரை. கடைசி நான்கு கட்டுரைகளிலும் பேசுபொருளாகத் திகழ்வது ஏலியன்ஸ். செவ்வாய்க் கிரகத்தில் குடியேறும் இலட்சியக் கனவில் மனிதன் தனது செயற்திட்டங்களை முன்னெடுக்கும் இத்தறுவாயில் செவ்வாய்க் கிரகத்தில் ஏற்கனவே ஏலியன்ஸ் குடியேறியிருந்தால் மனிதன் அங்கு செல்ல முற்படுவது பேராபத்தில் முடியாதா? என்ற கேள்வியினை முடிவில் நூலாசிரியர் முன்வைத்திருக்கிறார்.

தமிழ் மொழி மூலம் இணையத்தில் தேடக் கிடைக்காத சில அரிய தகவல்கள், ஆங்கில மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததன் விளைவால் இந்நூலில் உள்ளடக்கம் பெற்றிருப்பதும், சூழல் மாசுறல் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுத விரும்பும் உயர்தர வகுப்பு மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உசாத்துணைக்குரிய நூலாக விளங்க வல்லதாக இந்நூல் வடிவமைக்கப் பட்டிருப்பதும் பேராசிரியனுக்குப் பெருமை சேர்க்கத்தக்கன.

- தினக்குரல் : 30.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகவுலகில் புதுயுகத் தடங்கள் விதித்திடும் பற்றுதலுடன் பயணிக்கும் "எங்கட புத்தகங்கள்"

குலசிங்கம் வசீகரனின் "எங்கட புத்தகங்கள்" கண்காட்சி மற்றும் காலாண்டிதழ் செயற்பாடுகள் பற்றிய ஒரு புரிதல்

இன்னும் இரு தசாப்த காலத்தில் ஈழத்தில் சிற்றிதழ்கள் மலர ஆரம்பித்து இரு நூற்றாண்டுகள் நிறைவுறுகிறது. 1841 இல் உதித்த "உதயதாரகையே" எம்மகத்து இதழியல் முயற்சிக்கு கால் கோளிட்டது எனலாம். இவ்விதழ் இன்றளவும் வெளிவந்து கொண்டிருப்பது என்பதும் சாதனைக்குரியதொன்றாகவே நோக்கத்தக்கது. "உதயதாரகை"யைத் தொடர்ந்து "உதயாதித்தன்" எனும் சஞ்சிகையும் அதே ஆண்டிலேயே அறுவடையானதாக ஆய்வாளர்களின் அறிக்கைகள் மூலம் அறியக் கிடைக்கின்றது. அதன் பின்னரும் பல சிற்றிதழ்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில் ஊற்றெடுத்து இதழியல் வளர்ச்சிக்கு அணி சேர்க்கலாயின. அந்த வகையில் "இலங்காபிமானி"(1863), "இலங்கை நேசன்"(1877) போன்ற இதழ்களுடன் முதன் முதலாக சிறார்களுக்காக விரிந்த "பாலியர் நேசன்"(1859) என்ற சிற்றிதழும் அவற்றுள் பேசத்தக்கதாய்த் திகழ்ந்தன. இவ்விதழ்களுள் கணிசமானவை மதம் சார்ந்த அமைப்புக்களின் வெளிக் கொணர்வுகளாகவே அமைந்திருந்தமை கவனத்திற்குரியது.

இலக்கியச் சிற்றேடுகள் இருபதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் நடுக்கூற்றிலேயே ஈழத்தில் முகிழ்ந்தன எனலாம். 1946 இல் வரதரின் முயற்சியால் இலக்கிய உலகிற்கு கிடைத்த ஓர் அரிய சஞ்சிகையாக "மறுமலர்ச்சி" மிளிர்கிறது. அதனைத் தொடர்ந்து "ஆனந்தன்", "வெள்ளி", "புதினம்" என ஏழெட்டு ஏடுகளை வரதர் வெளியிட்டார். இவற்றினை அடியொற்றிப் பல இலக்கிய சஞ்சிகைகள் இதழியல் அரங்கில் முகைவிடலாயின. இவற்றுள் "பாரதி" "கலைச்செல்வி"(1958), "வீவேகி"(1960), "மல்லிகை"(1966-2012), "தேனருவ", "தமிழ் அமுது"(1970), "மலர்"(1970), "அஞ்சலி", "குமரன்", "தாயகம்", "அலை", "சமர்", "புதுசு", "பூம்பொழில்", "அமிர்த கங்கை", "சுடர்", "மாணிக்கம்", "கதம்பம்", "சிரித்திரன்", "தாரகை", "மேகம்", "கலகலப்பு", "கலாவல்லி" போன்றன இதழியல் வரலாற்றில் தடம் பதித்தன.

இந்நூற்றாண்டில் மேலும் பல சஞ்சிகைகள் மிகுந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் வாசகர் வசமாகியுள்ளன. இவற்றுள் "ஞானம்", "ஜீவநதி" ஆகிய இரண்டும் சாதனைகள் பல இயற்றி முன்னகர்ந்து செல்கின்றன. இவை தவிர "கலைமுகம்", "நீங்களும் எழுதலாம்", "தாயகம்", "படிகள்", "தென்றல்", "வியூகம்", "புதிய சொல்", "மகுடம்", "மறுபாதி", "நடுகை", "ஆயகலைகள்", "நடு", "எங்கள் முற்றம்", "வேடதாரி", "சிறுகதை மஞ்சரி", "அறிந்திரன்" போன்ற இதழ்களும் கவனிப்பிற் குள்ளாகியுள்ளன.

இப்பட்டியலில் இயைத்துக் கொள்ளத்தக்க வகையில் "எழுத்து - பதிப்பு - வாசிப்பு" என்ற இலக்கினைக் கருத்திற் கொண்டு 2020 ஆம் ஆண்டு ஒக்டோபரிலிருந்து "எங்கட புத்தகங்கள்" எனும் இன்னுமொரு சஞ்சிகை காலாண்டிதழாக யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி இலக்கம் 206/23 இலிருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு தைத்திங்கள் யாழ்ப்பாணம், முற்றவெளியில் நடைபெற்ற "எங்கட புத்தகங்கள்" எனும் சர்வதேச நூல் கண்காட்சி மற்றும் விற்பனை செயற்திட்டத்தின் ஒரு பரிணமிப்பே இச்சஞ்சிகையின் பிரசன்னம் எனலாம். மூன்று நாட்கள் நடைபெற்ற அக்கண்காட்சியில் 125க்கும் மேற்பட்ட எழுத்தாளர் களின் 350க்கும் அதிகமான புத்தகங்களில் ஏறத்தாழ 3500 பிரதிகள் காட்சிப்படுத்தப்பட்டன என அறிய முடிகிறது. அதில் 1500 வரையிலான பிரதிகள் விற்பனை செய்யப்பட்ட வகையில் ஈழவர் வாசிப்பு ஆர்வம் இன்னும் குறையவில்லை என்பதற்கும் அப்பால் எங்கட புத்தகங்களையும் எம்மவர்கள் ஆர்வத்துடன் வாங்குவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனையும் வெற்றிகரமான இக்கண்காட்சி நிரூபித்து நின்றதெனலாம். மேலும் புத்தகங்கள் பற்றிய விபரங்களும் அவற்றினைப் பெறத்தக்க இடங்கள் பற்றிய தகவல்களும் மக்களிடம் இல்லாமையே பொதுவில் புத்தக விற்பனை மந்த கதியில் இருப்பதன் காரணம் என்பதனையும் இக்கண்காட்சி உணர்த்தத் தலைப் பட்டுள்ளது எனலாம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் புத்தகங்கள் பற்றிய தகவல்களை மக்களிடத்தே எடுத்துச் செல்லத்தக்கதொரு கையேடாக எங்கட புத்தகங்களின் வரவானது அமைகின்றது. ஒரு பனுவல், படைப் பாளியால் படைக்கப்பட்டு, பதிப்பகத்தாரால் பதிவு செய்யப்பட்டு, வாசகனால் வாசிக்கப்படுகிறது. அந்த வகையில் "எழுத்து - பதிப்பு - வாசிப்பு" எனும் எண்ணக்கருவோடு, எழுத்துத்துறை, பதிப்புத்துறை, வாசிப்பு சார்ந்த விடயங்களைத் தாங்கி, ஈழத்து எழுத்துப் பரப்பின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறியக் கூடியவகையில் ஒரு தகவல் பெட்டகமாக இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இத்தகு எண்ணக்கருவே இதழியலின் புதியதொரு பரிமாணத்திற்கு அதனை இட்டுச் சென்ற தோடன்றி பிரத்தியேகமாக அது பற்றிப் பேசவும் வைத்திருக்கிறது.

வட இலங்கை இலக்கிய வெளியில் மட்டுமன்றி இன்று சர்வதேச ரீதியாகவும் அதிகம் அறியப்பட்டிருக்கும் "எங்கட புத்தகங்கள்" நூல் கண்காட்சி வேலைத்திட்டத்தின் காரணனாக. பிரதான ஒழுங்கமைப்பாளராக, மூலவிசையாக விளங்குபவர் குலசிங்கம் வசீகரன் ஆவார். இவரே இச்சஞ்சிகையின் பிரதம ஆசிரிய ராகவும் செயலாற்றுகிறார். நூலகவியாலாளர் என்.செல்வராஜா, சற்குணம் சத்தியதேவன் முதலானோரையும் இணைக்கழைத்து எங்கட புத்தகங்கள் காலாண்டிதழினை வெளிக்கொணரும் வசீகரன் "மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை மட்டுமல்லாமல் எழுத் தாற்றலை ஊக்குவிப்பதும் எமது எண்ணம். இச்சஞ்சிகையைப் பயன் படுத்துவதும், வளர்த்தெடுப்பதும் எழுத்தாளர்கள், மதிப்பகத்தார் மற்றும் வாசகர்களது கைகளிலேயே உள்ளது. ஊர் கூடித் தேரிழுப் போம், எம்மோடு தோள் கொடுப்பீர்!" என 2020 அக்டோபரில் வெளி யான சஞ்சிகையின் முதலாவது இதழில் ஆசிரிய தலையங்கத்தில் அறைகூவியுள்ளார்.

வசீகரன் கூறுவது போலவே வாசிப்புக் கலாசாரமானது எமது சமூகத்தில் மீண்டும் வளர்த் தெடுக்கப்பட வேண்டுமாயின் அதற்கான அடித்தளம் முதலில் மாணவர் மத்தியிலேயே இடப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையில் மாணவர்களுக்கான படைப்புக்களுடன் வாசிப்பதற்காக அவ் ஆக்கங்களை அவர்களிடமே கொண்டு சேர்ப்பிப்பதற்காக தன் விற்பனை வலையமைப்பினை பாடசாலைகள் ஊடாகவும் செயற்படுத்த முனைகிறது இச் சஞ்சிகை. பாடசாலை நூலகங்களை மட்டுமே இலக்கு வைத்து இன்றளவும் இயங்கி வந்த எமது பதிப்பகங்களிற்கு வசீகரனின் இச் செயற்திட்டம் முன் மாதிரியாக அமைய வல்லது.

"எங்கட புத்தகங்கள்" எனும் இக்காலாண்டுச் சஞ்சிகை இது வரை நான்கு இதழ்களை வெளிக்கொணர்ந்துள்ளது. "மல்லிகை" சஞ்சிகை வெளிவந்த அளவில் 68 பக்கங்களில் மலர்ந்துள்ள முதலாவது இதழில் கிரிஷாந், என்.செல்வராஜா, வசீகரன், மாதவி சிவலீலன், எஸ்.பி.பாலமுருகன், தில்லைநாதன் கோபிநாத், சப்னா இக்பால், சத்தியதேவன் சற்குணம், மைக்கல் கொலின் முதலானோரின் படைப்புகள் பிரதேச வேறுபாடுகளைக் கடந்து பிரசுரமாகியிருக் கின்றன. வாசிப்பினை வலியுறுத்தி நிற்கும் அர்த்தமுள்ள அட்டைப் படம் இதழிற்கு அணிசேர்ந்துள்ளது. ஓவியர் ஆசை இராசையாவை நினைவுகூரும் அஞ்சலிக் கவிதை முற்புறத்து உள்ளட்டையினை கனதிப்படுத்தியுள்ளது. 2020 இல் வெளிவந்த நூல்களின் தொகுப்பும் கவனிக்கத்தக்கது.

புத்தகங்கள் தேங்கிவிட்டால் நூலகங்கள் நூதனசாலைகளா கவே மாறும். அவற்றை அசையக் கூடியவையாக நாம் மாற்றுவதன் மூலமே அவற்றின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த முடியும் எனக் கூறி நிற்கும் "அசையும் நூலகங்களை உருவாக்குதல்" எனும் கிரிசாந்தின் கட்டுரை மூலம் பல தகவல்களைப் பெறமுடிகிறது. எங்கட நூலக அறிமுகம் தொடரில் இணுவில் பொது நூலகம் பற்றிய வசீகரனின் பதிவுகள் பிற நூலகங்களின் மேம்பாட்டிற்கும் உதவத்தக்கன. இவ்வாறாக வாசிப்பு, எழுத்து மற்றும் நூல் பதிப்பு துறையோடு தொடர்புடைய அனைவருக்கும் பயன்தரத்தக்க இதழாக இது திகழ்கிறது.

அகிலினி, என்.செல்வராஜா, முருகபூபதி, க.வசீகரன், சௌம்யன், சத்தியதேவன், சப்னா இக்பால், வசந்தி தயாபரன், றஜனி நரேந்திரா, வேல் நந்தகுமார், மாதவி உமாசுதசர்மா ஆகியோரது எழுத்துக்கள் ஜனவரி 2021 இல் மலர்ந்த இரண்டாவது இதழினை அலங்கரித்துள்ளன. "மின் நூல்களின் வரவும், சமூக ஊடகங்களின் பெருக்கமும் நூல் வாசிப்பில் தேக்க நிலையை உண்டு பண்ணும் என்ற எதிர்வுகூறல் மேலைத்தேய நாடுகளில் கூட பொய்த்துப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. இக்கருத்தியலை எமது தேசத்திலும் பூண்டோடழித்து புத்தகக் கலாசாரத்தை நிலை நாட்டுவோம்," என்ற ஆசிரிய தலையங் கத்தினூடு இதழ் விரிந்து செல்கிறது. 2007 இல் இளையதம்பி தயானந்தாவால் வெளிக்கொணரப்பட்ட "இருக்கிறம்" சஞ்சிகை பற்றிய வசீகரனின் கட்டுரையும் "சிரித்திரன்" சுந்தர் பற்றி எழுதப்பட்ட சௌம்யனது கட்டுரையும் கவனத்தை ஈர்பனவாக அமைந்துள்ளன. எங்கட நூலக அறிமுகம் எனும் தலைப்பில் ஆசிரியர் எழுதும் பத்தியில், கிளிநொச்சி பாலுமகேந்திரா நூலகம் பறிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

"இன்றைய எமது சிறார்களுக்கு வாசிக்க கூடியதாக எவற்றை நாம் வைத்திருக்கிறோம் எம்மிடம்? என்ற கேள்வியை முன் வைத்திருக்கும் வேல் நந்தகுமாரின் கட்டுரையும் இலங்கையில் கட்டிளம் பருவத்தினருக் கான இலக்கியங்களின் தேவை எதுவென ஆராயும் வசந்தி தயாபரனின் கட்டுரையும் சிந்திக்கத் தூண்டுவனவா யுள்ளன. 2020இல் வெளியான மேலும் ஒரு தொகுதி நூல்கள் நடுப்பக்கங்களில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இடையிடையே நிகழ்வுகளின் பட்டியல்களும், அறிமுகங்களும், விமர்சனங்களும் இடம்பெற்று இதழினை மேலும் மெருகூட்டுகின்றன.

ஏப்ரல் 2021 இல் மூன்றாவது இதழ் அறுவடையாகியுள்ளது. என்.சரவணன், திருமலை சுந்தா, வசீகரன், கேதாரநாதன், சப்னா இக்பால், வேதநாயகம் தபேந்திரன், என்.செல்வராஜா, சந்திரா ரவீந்திரன், த.சித்தி அமரசிங்கம், ஆதிலட்சுமி சிவகுமார், பா.இரகுவரன், பி.மாணிக்கவாசகம் முதலானோர் தமது படைப்புக் களை இவ்விதழில் பதிவு செய்துள்ளனர். "திசைக்கொன்றாக சிறு தீவுகளாகப் பிரிந்திருக்கும் இலக்கியம் சார்ந்த அமைப்புக்கள் அனைத்தும் தங்கள் கலை இலக்கியக் கொள்கைகள் எதுவான போதிலும் விநியோகம் எனும் ஒரு குடையின் கீழ் ஒன்று திரள்வது காலத்தின் கட்டாயமாகும். ஈழத்தின் நூலகங்களுக்கானதொரு நூல் விநியோகத் திட்டத்தை இதன் மூலம் உருவாக்கலாம்", என்கிறார் ஆசிரிய தலையங்கத்தில் ஆசிரியர் வசீகரன். நூலைத் தேடும் வாசகனுக்கு அந்த நூலை அடைய வழிசெய்வதோடு நூல்களுக்கான வாசகனிடம் நூல்களைச் சேர்ப்பிக்கவும் வசீகரனின் இவ்வுத்தேசத் திட்டம் நிச்சயம் வழிவகுக்க வல்லது.

சீன எழுத்தாளர் லூசுன் 1927 ஏப்ரல் 8 இல் சீனாவின் ஹாங்பு இராணுவக் கல்வி நிலையத்தில் ஆற்றிய உரையின் தமிழ்வடிவம் கேதாரநாதனின் மொழிபெயர்ப்பில் இவ்விதழில் இடம் பெற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. சமர் சஞ்சிகை உட்பட இக்கட்டுரை இதுவரை ஏழு தடவைகள் பல்வேறு சஞ்சிகைகளினும் மறுபிரசுரமாகியுள்ளமை "கேதாரி"யின் மொழிபெயர்ப்பு ஆற்றலுக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகக் கொள்ளலாம். வேதநாயகம் தபேந்திரன் யாழ்ப்பாண நினைவுகளை மீட்டுவதில் வல்லவர். "அக்காலங்கள் மீண்டும் வராதோ?" எனும் ஏக்கத்தை தன் எழுத்துக்களால் எழ வைப்பவர். அந்த நாட்களில் யாழ்ப்பாணத்துச் சுருட்டுக் கொட்டில்களில் நிலவிய வாசிப்புக் கலாசாரம் பற்றி மிக்க சுவாரசியத்துடன் இவ்விதழில் அவர் ஓர் கட்டுரையை எழுதியுள்ளார். எங்கட சஞ்சிகைகள் பற்றிய நூலகவிய லாளர் செல்வராஜாவின் கட்டுரை பயன்மிகு பல தகவல்களைத் தந்துள்ளது. பங்கர், உங்கள் குழந்தையின் நலமான வளர்ச்சியும் சில பிரச்சினைகளும் போன்ற நூல்கள் பற்றிய முறையே பி.மாணிக்க வாசகம், பா.இரகுவரன் ஆகியோரின் அறிமுகக் கட்டுரைகளும் கவன ஈர்ப்பைக் கோரத்தக்கவை. எங்கட நூலக அறிமுகம் எனும் ஆசிரியரின் பத்தியில் சுன்னாகம் பொதுநூலகம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இறுதியில் திருமறைக் கலாமன்றத்தின் தந்தை வண. மரிய சேவியர் அவர்களுக்கான அஞ்சலியுடன் மூன்றாவது இதழ் முற்றுப் பெறுகிறது.

ஜூலை **2021** இல் மலரின் நான்காவது இதழ் விரிந்திருக்கிறது. என்.செல்வராஜா, கிரிஷாந், மணிமொழி, வசீகரன், அஷ்வினி வையந்தி, முருகபூபதி, என்.சரவணன், ஸ்ரீரஞ்சனி, சப்னா இக்பால், யதார்த்தன், சண்முகலிங்கம் சஜீவன், விவேகானந்தனூர் சதீஸ் போன்ற பலர் தங்களது பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். "கோவிட் **19** சுகாதார கெடுபிகளுக்கும் ஊரடங்குகளுக்குமிடையே எமது வேலைத்திட்டங்களை மீண்டும் முடக்கிவிடத் தயாராகவுள்ளோம் என சூளுரைத்து ஆசிரிய தலையங்கத்தைத் தீட்டியுள்ளார் ஆசிரியர் வசீகரன்.

இவ்விதழில் இடம் பெற்றிருக்கும் பெரும்பாலான கட்டுரைகள் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியே பேசுகின்றன. நூலகங்களை முன்னிறுத்தி எழுதப்பட்டிருக்கும் கட்டுரைகளாகட்டும் நூல் அறிமுகம் எனும் மகுடத்தில் வரையப்பட்டிருக்கும். விமர்சனம் சார்ந்த பத்திகளாகட்டும் சகல எழுத்துக்களும் வாசிப்பையே வலியுறுத்து வனவாகவே உள்ளன. இதழாசிரியர் எழுதிவரும் எங்கட நூலக அறிமுகத்தில் ஏழாலை சித்திவிநாயகர் நூல் நிலையம் பற்றிய சில குறிப்புகளை பதிவு செய்துள்ளார். "வாழ்வின் எல்லா செயற்பாடுகளி லிருந்தும் நாம் வாசிப்பவற்றை, அதனூடாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்ட அறிவை நடைமுறைப்படுத்துவதே வாசிப்பின் செயல்விளைவு" என்ற கருத்தினை முன் வைக்கும் கிரிசாந்தின் கட்டுரை முதற் கொண்டு குப்பைத் தொட்டியில் சீரழிந்து சிறுகடதாசித் துண்டைக் கூட எழுத்துவேலைகளுக்குப் பயன்படுத்த முடியாது திணறும் தமிழ்க் கைதிகளின் நிலையினை எடுத்தியம்பும் சதீஸின் கட்டுரை வரை யிலான சகல படைப்புகளும் இவ்விதழினை கனதிக்குள்காக்கியுள்ளன எனில் அது மிகையாகாது.

காலாண்டிதழினை வெளிக்கொணர்வதற்கும் அப்பால் இருபத்தாறு கதைஞர்களின் "பங்கர்" என்.செல்வராஜாவின் "நமக்கென்றொரு பெட்டகம்" ஆசி கந்தராஜாவின் "பணச்சடங்கு" போன்ற பனுவல் களையும் எங்கட புத்தகங்கள் வாயிலாக பதிப்பித்து வெளியிட்டிருக்கும் குலசிங்கம் வசீகரன் வெகுவிரைவில் எங்கட சஞ்சிகையின் ஐந்தாவது இதழினையும் வாசகர் வசமாக்கவுள்ளார்.

வெற்றிகரமாயமைந்த புத்தகக் கண்காட்சியின் ஒரு தொடர்ச்சியாக பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிலிருந்து ஆரம்பித்து புத்தகசாலைகளினூடாக வாசகர்கள் வரை வியாபிக்கத் தக்க வகையில் பரந்தளவிலானதொரு நூல் விற்பனை வலையமைப்பினை ஈழத்தில் உருவாக்க வல்ல சிறந்ததொரு செயற்திட்டத்தை குலசிங்கம் வசீகரன் முன்வைத்துள்ளார்.

தமிழ்ப் புத்தக விற்பனைச் சந்தையில் உச்ச பலனைத் தரவல்ல மிக அற்புதமானதோர் செயற்திட்டம் இது. எங்கட புத்தகங்களை சந்தைப்படுத்துவதற்கு வசீகரன் அறிமுகப்படுத்தியிருக்கும் இப் பெருந்திட்டம் வெற்றி பெற எழுத்தாளர்கள், பதிப்பகத்தினர், வாசகர்கள் அனைவரும் ஒருமித்து செயற்படல் வேண்டும். அவ்வாறு செயற்படின் புத்தக உலகில் புதுத்தடங்கள் பதித்தல் திண்ணம்!

- தினக்குரல் :10.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவல் ஆய்வாளர்களுக்கு உசாத்துணையாக வல்ல "ஈழத்து நாவல் விமர்சனச் சிறப்பிதழ்"

**பரணீதரனின் ஜீவநதி 150 ஆவது இதழினை முன்வைத்து சிலகுறிப்புகள்**

ஈழத்துப் புனைகதைத் துறைக்குப் புத்தூக்கத்தினை அளித்த சஞ்சிகைகள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. வரதரின் "மறுமலர்ச்சி"(1946-1948), "ஆனந்தன்"(1952-1953), "புதினம்"(1960-1961), சிற்பியின் "கலைச்செல்வி"(1958), டொமினிக் ஜீவாவின் "மல்லிகை"(1966), அ.யேசுராசாவின் "அலை" (1975-1990) போன்ற யாழ் சஞ்சிகைகள் இலக்கிய பண்ணைகளாகவும் திகழ்ந்து காத்திரமான கலைஞர்கள் பலர் உருவாக அடித்தளங்களாயின. இதன் ஓர் நீட்சி யாக நோக்கத்தக்கதாக ஈழப்போராட்டம் உச்ச நிலை எய்தியிருந்த இரண்டாயிரமாம் ஆண்டு களின் இறுதிக் கூற்றில் ஒரு இலக்கிய அருவி யாக வடமராட்சிப் பகுதியிலிருந்து ஊற் றெடுக்க ஆரம்பித்தது "ஜீவநதி" எனும் இன்னோர் இலக்கிய இதழ். யாழ்.பல்கலைக் கழக நுழைவினை எதிர் நோக்கியிருந்த மாணவன் கலாமணி பரணீதரனை ஆசிரிய ராகக் கொண்டு ஆவணி 2007இல் ஜீவநதி வெளியாயிற்று. மாணவன் ஒருவன் இதழ் ஒன்றிற்கு ஆசிரியராக இருந்தமைக்கும் அப்பால் கனதிமிக்கதாகவும் அச்சஞ்சிகை வலம் வந்தமை பேராசிரியர்கள் மற்றும் விமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகர்களைத் திரும்பிப் பார்க்க வைத்த தெனலாம்.

கையெழுத்துப் பிரதியாக வெளிவந்து கொண்டிருந்த மறுமலர்ச்சியினை 1946இல் அச்சில் ஏற்றியபோது வரதருக்கு வயது 22. அதே அகவை 22லேயே பரணீதரனும் ஜீவநதியை வெளிக் கொணர்ந்திருந்தார். இருவருக்கும் இயல்பாகவே இருந்த இலக்கிய தாகமும் இடைவிடாத தேடலுமே இளவயதிலேயே அவர்கள் இலக்கிய அங்கீகாரம் பெற வழி சமைத்ததெனலாம். இலக்கிய உத்வேக வளர்ச்சியின்போது தமது படைப்பாளுமையையும் சிறந்த சிறுகதை கள் வாயிலாகவும் இவர்கள் அவ்வப்போது பதிவு செய்துள்ளமையும் இருவரிலும் குறிப்பிட்டுக் கூறத்தக்க மற்றுமோர் உடன்பாடாகும்.

ஆவணி 2007இலிருந்து வைகாசி 2021வரை ஜீவநதியில் மொத்தமாக 152 இதழ்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் 14ஆண்டு மலர்களும் உள்ளடங்குகின்றன. மலையக சிறப்பிதழ், திருகோண மலை சிறப்பிதழ் போன்ற பிரதேசம் சார்ந்த சிறப்பிதழ்களையும் கனடா, அவுஸ்தி ரேலியா போன்ற புலம்பெயர் நாட்டில் வதியும் தமிழர்களுக்காக இரு சிறப்பிதழ்களையும் ஜீவநதி அவ்வப்போது வெளிக்கொணர்ந் துள்ளது. செங்கை ஆழியான், தெணியான், க.சட்டநாதன், கே.எஸ்.சிவகுமாரன், கே.ஆர்.டேவிட், குழந்தை ம.சண்முகலிங்கம் போன்ற இலக்கிய முன்னோடிகளின் பவள விழாவினை ஒட்டிய சிறப்பிதழ்களும் ஜீவநதிக்கு அவ்வப்போது அணிசேர்த்தன என்றால் அது மிகையாகாது.

இவை தவிர, பயனுள்ள பல தகவல்களுடன் பல்துறை சார்ந்த சிறப்பிதழ்களையும் ஜீவநதி வெளிக்கொணர்ந்ததும் நினைவில் கொள்ளத்தக்கது. அந்த வகையில் கவிதை, சிறுகதை, ஈழத்துக் கவிதை, ஹைக்கூ போன்ற பரிமாணங்களுக்காக பரணீதரன் முன்னெடுத்த சிறப்பிதழ்கள் இலக்கிய உலகில் பெரிதும் பேசப்படலாயிற்று. ஈழத்துப் பெண் எழுத்தாளர்களுக்காகவும், இளம் எழுத்தாளர்களுக் காகவும், சிறுவர்களுக்காகவும் அறுவடையான சிறப்பிதழ்களும் அனைவரது கவனத்தினையும் பெற்றிருந்தன. இவை தவிர, பரணீதரன் தன்துறையான உளவியலுக்கெனவும் ஒரு சிறப்பிதழினைப் பதிவு செய்யத் தவறவில்லை. எழுத்தாளர் மாநாட்டின் போது வெளிக் கொணரப்பட்ட இதழும் பெண்ணியம் தொடர்பான சிறப்பிதழும் ஜீவநதியின் சிறப்பிதழ்களில் கனதி பெற்றிருந்தமை கவனத்திற்குரியது.

இலக்கியப் பரிமாணங்கள் பெரும்பாலானவற்றில் சிறப்பிதழ் களினை வெளிக்கொணர்ந்திருப்பினும் நாவல்துறையிலும் சிறப்பி தழினை வெளிக்கொணர்ந்தாலே அது முழுமையுற்றது போலிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் எண்ணக்கருவினை எழுத்தாளரும், விமர்சகருமான சி.ரமேஷ் பரணீயிடம் இரண்டு வருடங்களின் முன்னர் முன்வைக்கவே தொடர்ச்சியாய் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பரணீதரனுக்கு அது ஒரு புத்துணர்வினைக் கொடுக்கலாயிற்று. எவ்வகையிலும் 150ஆவது இதழினை நாவல் சிறப்பிதழாகவே வெளியிடுவது எனும் எண்ணத் தினை அத்தருணத்தில் இருந்தே அவர் தன் மனத்திரையில் ஆழப் பதித்துக் கொண்டார்.

புத்தாயிரமாம் ஆண்டின் முதல் இரு தசாப்த காலங்களில் (2000-2020) வெளிவந்த நாவல்கள் பற்றிய விமர்சன சிறப்பிதழாக 150ஆவது இதழ் அமைய வேண்டுமென எண்ணி அல்லும் பகலுமாக பரணீதரன் முடிந்தவரை முயற்சிகளில் இறங்கலானார். அதன் விளைவே 474 பக்கங்களில் அவர் வெளிக்கொணர்ந்திருக்கும் "ஈழத்து நாவல் விமர்சன சிறப்பிதழ்" எனும் பெருநூல். இவ்விதழில் 105 படைப் பாளர்களது 400இற்கும் மேற்பட்ட நாவல்கள் பற்றிய விமர்சனங்கள் இடம்பெற்றுள்ளன. கனதியும், ஆழமும் மிக்க கணிசமான கட்டுரை களைத் தாங்கி வெளிவரும் சிறப்பு மலர் என்ற வகையிலும் 1856இல் முதன்முதலில் தமிழில் வெளிவந்த நாவலாகக் கருதப்படும் "காவலப் பன்" கதையிலிருந்து 2020 இல் வெளியான "குமிழி" போன்ற நாவல்கள் வரையிலான 160ஆண்டுகால ஈழத்து நாவல் வரலாற்றைப் பற்றிப் பேசு வதனாலும் இந்நூல் மிக முக்கியமானதொன்றாக ஈழத்து இதழியல் வரலாற்றில் வியந்துரைக்கப்படுகிறது. கொண்டாடப் படுகிறது.

ஈழத்து நாவல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டவர் களுக்கு சில்லையூர் செல்வராசனின் "ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி" நா.சுப்பிரமணியத்தின் "ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம்" செங்கை ஆழியானின் "ஈழத்துத் தமிழ் நாவல்கள்" போன்ற நூல்களே இன்று வரை உசாத்துணைக்குரியனவாக திகழ்ந்தன. ஆனால், ஆர்ப்பாட்ட மில்லாது எந்த சலசலப்புக்கும் ஆட்படாது அமைதியாகவே இருந்து பரணீதரன் வெளிக்கொணர்ந்திருக்கும் இவ்விதழ், இனி நாவல் பற்றிய ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு முதல் தரமான உசாத்துணை ஆவணமாக அமையும் என்பதில் இரு கருத்திருக்க முடியாது.

ஈழத்து நாவல்கள் குறித்து சி.ரமேஷ் எழுதிய அறிமுகக் குறிப்பு நுழைவாயிலில் முகவுரை போலமைந்து இம்மலரிற்கு அணி சேர்த் திருக்கிறது. "விரித்து எழுதப்படவேண்டியதொன்றிது" எனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடினும், உண்மையில் அவர் தந்த தரவுகளும் அவை சார்ந்த திறனாய்வுக் குறிப்புகளுமே போதுமானதாய் அமைந்து வாசகரை வேறுபட்ட காலங்களுக்கும், தளங்களுக்கும் இட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றன. தனக்கே உரித்தான மொழி வழி நின்று தான் வாசித்து நுகர்ந்த நாவல்களை முன்வைத்து ரமேஷ் இக்கட்டுரையினை நகர்த்தியுள்ள முறைமை நயத்தற்குரியது. நாவல்கள் தோன்றிய ஆரம்ப காலம் முதல் சமுதாய சீர்த்திருத்த காலத்தில் ஒரு வடிவமாக அது வளர்ந்ததனைத் தொடர்ந்து முற்போக்குக் காலம் புத்தெழுச்சிக் காலங்களினூடு தமிழ்த் தேசிய உணர்வுக்காலம் வரை அதன் செல்நெறிகள் எவ்வாறிருந்தன என்பதற்கும் அப்பால் சமகாலத்தில் ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அது எங்ஙனம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பது வரையிலான ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு கால ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றினை 65 பக்கங்களில் அடக்கித் தந்திருக்கும் அவரது ஆற்றல் வியத்தற்குரியது. இதுவரை எமது நாட்டில் எந்தக் கட்டுரையாளனுமே தொட்டிராத உயரமிது.

கல்வி, சமூக முதலீடு ஆவது போன்று இலக்கியங்களும் நாவல்களும் சமூக முதலீடுகள் ஆகின்றன என்ற கருத்தினை முன் வைத்திருக்கும் பேராசிரியர் சபா ஜெயராசாவின் கட்டுரையுடன் பேராசிரியர் செ.யோகராசா, பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா ஆகியோரின் கட்டுரைகளும் கவனத்துக்குரியதாகின்றன. மற்றும் இம் மலரில் நாவல்களை நயந்தெழுதிய கட்டுரையாளர்களையும் அவர்கள் முன்னிறுத்திய நாவல்களையும் குறைந்த பட்சம் பட்டிய லிட்டுக் காட்டுவதென்பதும் இப்பத்தியில் அசாத்தியமானதொன்றாகும்.

மலரில் இடம்பெற்றிருக்கும் நூற்றுக்கு அணித்தான ஏனைய கட்டுரைகள் ஒவ்வொன்றும் தத்தம் அளவில் தனித்துவத்துடன் விளங்குகின்றன. திறனாய்வு சார்ந்தவைகளாகவும் நயந்ததை நவில் பவையாகவும் நாவலாசிரியர் மீதான புகழ்ச்சிகளாகவும் வெறுமனே அறிமுகக் கட்டுரைகளாகவும் அவை மாறுபட்ட வடிவங்களில் விரிவடைகின்றன. செ.கணேசலிங்கன், செங்கை ஆழியான், எஸ்.பொன்னுத்துரை, தெணியான், சுபைர் இளங்கீரன், மு.தளைய சிங்கம், க.அருள் சுப்பிரமணியம், முல்லைமணி, வ.அ.இராச ரத்தினம், தி.ஞானசேகரன், தெளிவத்தை ஜோசப், திக்குவல்லை கமால், அ.முத்துலிங்கம், கோகிலா மகேந்திரன், குறமகள், இராஜேஸ்வரி பால சுப்பிரமணியம் போன்ற நன்கறியப்பட்ட ஈழத்து எழுத்தாளுமைகள் பற்றிய கட்டுரைகள் பூரண ஈடுபாட்டுடன் அவர்களது நாவல்கள் மீள் வாசிப்பிற்குட்படுத்தப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்து வனவாக உள்ளன. ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் கனதிக்குரிய எடைக் கற்களாய் விளங்கும் இவர்களை அடியொற்றி எழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்த புதிய தலைமுறையினரின் வருகையினையும் அவர்களது முயற்சிகள் ஈழத்து இலக்கியத்தினை கணிசமான அளவுக்கு உயர்த்தி இருப்பதனையும் அடுத்தடுத்து இடம்பெற்றிருக்கும் கட்டுரைகள் கூற முயல்கின்றன. புலம்பெயர் மற்றும் போர்க்கால நாவல்கள் தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்வினையும் அவர்களது வலியினையும் எடுத்தியம்பி நிற்ப தற்கும் அப்பால் அந்நாவல்களின் கதைசொல் முறைமையும் ஈழத்து நாவலினை புதிய எல்லை ஒன்றினை நோக்கி நகர்த்துவனவாயு முள்ளன என்பதே பெரும்பாலான கட்டுரைகளின் பேசுபொருளாயு முள்ளன.

விமர்சனங்களின் புதிய செல்நெறி பற்றிய பூரண பிரக்ஞை யுடன் சில கட்டுரையாளர்கள் தமது கட்டுரைகளை நகர்த்தியுள்ள முறைமையினையும் இம்மலரில் நோக்கத்தக்கதாயுள்ளது. வழமை யான விமர்சன முறைக்கு அப்பாற்பட்டதாக விமர்சனப் போக்கின் நிலை மாற்ற நகர் வொன்றிற்கு கால்கோளிடுவதாக அவர்களது திறனாய்வு சார்ந்த கட்டுரைகள் அமைந்திருப்பது நம்பிக்கை தருவதாகவுள்ளது. உதாரணத்திற்கு கோகிலா மகேந்திரனின் நாவல் முயற்சிகள் பற்றி கூறவிளைந்த பேராசிரியர் செ.யோகராசாவின் அணுகுமுறையானது அத்தகையதொன்றே. எஸ்.பொவின் "மாயினி" பற்றிய தேவகாந்தனது நோக்கும் ஷோபா சக்தியின் நாவல்கள் பற்றியதான இ.சி.முரளி தரனின் பார்வையும் பேராசிரியர் செ.யோகராசாவின் கட்டுரைப் போக்கின் தொடர்ச்சிகள் அல்லது அவ்வகையறாக்கள் எனலாம்.

வடக்கு கிழக்கு பகுதிகளைச் சார்ந்த எழுத்தாளர்களது நாவல் களுக்கு மட்டுமன்றி, மலையக எழுத்தாளர்களது நாவல் களுக்கும் விமர்சகர்களுக்கும் போதிய முக்கியத்துவம் கொடுத்து மலரினை பரிவர்த்தனை செய்திருக்கும் பரணீதரன், அனந்தராஜ், ஆனந்தி, ஆனந்தமயில், சுஜந்தன் போன்றோரது குறுநாவல்களையும் என்.கே.ரகுநாதன், சிவா சின்னப்பொடி, வ.ந.கிரிதரன் முதலானோரின் தன்னிலை சார்ந்த தன் வரலாறு பேசும் நூல்களையும் இப்பெரு முயற்சியில் உள்வாங்கியிருப்பது ஆசிரியரின் இதழியல் சமநிலையைப் பேணும் பண்பினை உணர்த்தி நிற்பதுடன் அகண்டாகாரமாக இம் மலரினை வெளிக்கொணர வேண்டும் என்ற அவரது பேராதங்கத்தின் வெளிப்பாடாகவும் அமைகிறது.

இவ்வாறாக சிறப்பு மலர்கள் ஒவ்வொன்றினையும் அதிசிரத்தை யுடன் வெளியிடும் பரணீதரன், இதழியலுக்கான மூன்று விருதுகளை யும் வென்றிருக்கின்றார். அவற்றுள் சிறந்த சஞ்சிகைக்காக கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு.சின்னப்பபாரதி விருது குறிப்பிடற்பாலது. தமிழ் சிற்றிதழ்கள் சங்கம் மற்றும் பூவரசி அறக்கட்டளை முதலானவற்றின் சிறந்த இதழுக்கான விருதுகளையும் ஜீவநதி வென்றிருப்பது கவனத்திற்குரியது. இவை யாவும் பரணீதரனின் இதழியல் முயற்சிகளுக்கு கிடைத்த அங்கீகார மெனில்; அது மிகையாகாது.

ஈழத்து நூல்களுக்கு குறைந்தளவு வாசகப் பரப்பே உள்ளது. ஆயிரக்கணக்கில் நூல்களை அச்சிட்ட எழுத்தாளர்களும் பதிப்பகங் களும் சில நூறு பிரதிகளையே தற்போது நூலாக வெளிக்கொணர் கிறார்கள். "கோவிட் 19" அச்சுறுத்தல் நிலைமையினை மேலும் மோச மடையச் செய்துவிட்டது. அச்சில் வெளிவந்தவற்றையே சந்தைப் படுத்த முடியாது திணறிக்கொண்டிருக்கும் இந்நாட்களில், பரணீ தரனின் முயற்சிகளும் ஜீவநதி வெளியீட்டகத்தினால் சற்றேனும் சளைக்காது அவர் நூல்களை வெளிக்கொணர்வதும் வியகக் வைக்கிறது. பரணீதரனின் திட்டமிடுதலும், கடின உழைப்பும், விடாமுயற்சியுமே ஜீவநதியின் வெற்றிக்கு காரணமெனலாம். ஜீவநதியின் 150 இதழ் களுடன் ஜீவநதி பதிப்பகத்தினூடு இவர் இதுவரை 185 நூல்களையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். இது பாராட்டப்பட வேண்டிய ஒரு அசுர சாதனைதான்.

இலக்கிய செயற்பாடுகளிலும் பரணீதரன் சளைத்தவரல்ல. இதுவரை எண்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய கூட்டங்களையும் நூல் வெளியீடுகளையும் இவர் முன்னின்று நடத்தியுள்ளார் என அறிய முடிகிறது. இவைதவிர, கல்வி, உளவியல், சமூகவியல் சஞ்சிகையாகிய "கடல்" எனும் காலாண்டிதழின் ஆசிரியராகவும் அரங்க இதழான "நடி" எனும் மற்றுமோர் காலாண்டிதழின் ஆசிரியராகவும் ஆண்டிற்கு ஒருமுறை மலரும் ஆன்மீக இதழான "காத்தவராயர் மான்மியத்தின்" ஆசிரியராகவும் அல்வாய் மனோகரா கிராம ஆவணப்படுத்தல் நிறுவகத்தின் மாதாந்த பத்திரிகையான "நாங்கள்" என்ற பத்திரிகை யின் ஆசிரியராகவும் பரணீதரன் செயற்பட்டு வருகின்றார் என்பதும் பெருமையுடன் இங்கு பதிவுசெய்யத்தக்கது. ஈழத்தில் ஒரே நேரத்தில் அதுவும் இவ் இளவயதில் ஐந்து அங்கீகரிக்கப்பட்ட சஞ்சிகைகளின் ஆசிரியராக இருக்கும் ஒரேயொருவர் கலாமணி பரணீதரனாகத்தான் இருக்க முடியும். ஜீவநதியூடும், ஜீவநதி பதிப்பகத்தினூடும் இன்னும் பல சிறப்பிதழ்களினையும், பனுவல்களையும் பரணீதரன் வெளிக் கொணர்ந்து ஈழத்து இதழியல் துறைக்கும் இலக்கியத்துறைக்கும் மென்மேலும் வளம் சேர்க்க வேண்டும். சாதனைகளாய் அவை யாவும் அமைய வேண்டும்.

– தினக்குரல் : 23.05.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறனாய்தலின் அடுத்தகட்ட நகர்விற்கு படிக்கட்டுக்களாக அமையும் பனுவல்கள்

**2020 இல் வெளிவந்த இ.இராஜேஸ்கண்ணனின் இரு திறனாய்வு நூல்களை முன்னிறுத்தி சில குறிப்புகள்**

**பு**னைவாற்றல், திறனாய்வு ஆகிய இரண்டு துறைகளிலும் ஆழத் தடம் பதித்த எழுத்தாளர்களுள் இ.இராஜேஸ்கண்ணன் தனித்துவம் மிக்கவர். புனைகதைகளில் இவர் வெளியிட்ட "முதுசொமாக" (தூண்டி வெளியீடு: 2002), "தொலையும் பொக்கிசங்கள்" (கொழும்பு, மீரா பதிப்பகம்: 2009), வட மாகாண இலக்கிய நூல் பரிசினை வென்ற "இரகசியமாய் கொல்லும் இருள்" (சாத்வீக சுருதி வெளியீடு: 2015) போன்ற சிறுகதைத் தொகுதிகள் மறக்கமுடியாதன. அதுபோலவே இராஜேஸ்கண்ணனது திறனாய்வுக் கட்டுரைகளும் இலக்கிய அந்தஸ்து மிகுந்தவை. இந்த வகையில் சாத்வீக சுருதி வெளியீடுகளான "சமூகவியல் கோட்பாட்டுத் தடங்கள்"(2005), "கிராமியம் - கல்வி - மேம்பாடு: சமூகவியல் பார்வைகள்" (2013), ஜீவநதி வெளியீட்டகம் தனது 34 ஆவது நூலாக வெளிக்கொணர்ந்த "இலக்கியத்தில் சமூகம் பார்வைகளும் பதிவுகளும்" போன்ற அவரது கட்டுரை நூல்கள் நெஞ்சை விட்ட கலாதவை. இவற்றுள் "இலக்கியத்தில் சமூகமெனும்" பனுவல் 2014 ஆம் ஆண்டில் வட மாகாண இலக்கிய நூல் பரிசினைப் பெற்றிருந்ததும் உடன் நினைவுக்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆழமான வாசிப்பின் வழியாகவும், புதிய சிந்தனைகளின் ஊடாகவும் இராஜேஸ்கண்ணன் விடயங்களை வெளிப்படுத்தும் பாங்கு மெச்சுதற்குரியது. உன்னதங்களை அவர் அண்மித்து நிற்பதற்கு அவரது இத்தகு பிரத்தியேக பண்பே காரணமாயிற்று எனலாம். இராஜேஸ்கண்ணனது பலம் என்பது அவரது புனைகதைகள் மற்றும் திறனாய்வுகளில்தான் தோன்றி நின்றாலும் கவிதை புனைவதில் அவர் எடுத்து வரும் முயற்சிகளும் தடம் பதித்தவை. இவ்வகையில் 2007 இல் சாத்வீக சுருதி வெளியீடாக வெளிவந்த "போர்வைக்குள் வாழ்வு" எனும் இவரது கவிதைத் தொகுதி மிக்க கவனிப்பைப் பெற்றிருந்தமையினை ஈண்டு மனங்கொள்ளல் தகும்.

இவை தவிர இராஜேஸ் கண்ணன் நல்லதொரு மேடைப் பேச்சாளன் என்பதும் குறிப்பிடற்பாலது. எனது "புதிய பயணம்" (இரண்டாம் பதிப்பு), "காவியமாய் நெஞ்சின் ஓவியமாய்" போன்ற சிறுகதைத் தொகுதிகளின் அறிமுக விழாக்கள் வடமராட்சியில் நிகழ்ந்த போது அந்நூல்களை முன்னிறுத்தி புதிய சிந்தனைகளுக்கு கால்கோளிடத்தக்க வகையில் அறிவியல் அணுகுமுறையுடன் அவர் ஆற்றிய உரைகள் மறக்கவொண்ணாதவை. முறையான திறனாய்வு என்பதன் உண்மையான அர்த்தத்தினை அவரது உரைகள் எனக்கு உணர்த்தி நின்றன. நூலில் தான் நயந்தவற்றை, நயவுரையாகவன்றி அறிவியல் பூர்வமாக, சிந்தனைகளைக் கிளறத்தக்க வகையில், கோவைகளாக அவை முன் அவர் வைத்த பாங்கு எனை மிக வியப்பிலாழ்த்தியது.

சமூகவியல் தளத்தில் நின்று இராஜேஸ்கண்ணன் திறனாய்வு செய்ய விளைவதே அவரது வெற்றிக்கான அடித்தளமெனலாம். கல்வியியலில் அவர் சார்ந்த துறையும் அதுவாகவே விளங்குவதால் திறனாய்வுத் துறையில் அவர் பதிக்கும் தடம் துல்லியமாகவே பதிவாகிறது. மேலும் கோட்பாட்டு விமர்சனம், செயல்முறை விமர்சனம் போன்றவற்றில் போதிய பிரக்ஞையுடன் அவர் விளங்குவதும் அவரது ஆய்வுகளை வலுமிக்கதாக்குகின்றன.

திறனாய்தல் தொடர்பில் இராஜேஸ்கண்ணன் 2020இல் வெளிக்கொணர்ந்திருக்கும் மேலும் இரு நூல்கள் ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு புதிய வரவுகளாக மட்டுமன்றி திறனாய்வுத் துறையில் புதிய பரிமாணங்களை இனங்காட்டி நிற்கும் பனுவல்களாகவும் திகழ்கின்றன. வதிரி இ.இராஜேஸ்கண்ணனின் நூல்கள் வரிசையில் எட்டாவதாக இடம் பிடித்திருக்கும் "இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புகள், தூண்டி வெளியீடாகவும், அவரது நூல் பட்டியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவதாகப் பதிவாகியிருக்கும் "நயம்பட" ஜீவநதி வெளியீடாக வும் அறுவடையாகியுள்ளன.

"இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புகள்" நூலில் இராஜேஸ் கண்ணன் அவ்வப்போது எழுதிய ஒன்பது கட்டுரைகள் பிரசுரமாகி யுள்ளன. இவற்றுள் "பின் நவீனத்துவப் பாணியிலான ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகள்", "துட்டுக்கு உதவாதா சொட்டைக் கவி?" எனும் இரு கட்டுரைகளும் வடமேல் மாகாண கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அரச இலக்கிய ஆலோசனைக் குழுவினால் வெளியிடப் பட்டுவரும் "இலக்கியம்" எனும் விசேட மலரில் (2017, 2018) வெளி வந்தவை. முதலாவது கட்டுரை கோட்பாட்டு ரீதியிலான அடை யாளப்படுத்தலாக விளங்க, மற்றைய கட்டுரை அங்கதமாய் நிகழ்ந்த பாரதி கவிதைச் சமர் குறித்து நினைவிலெழும் மீட்டலாக அமை கின்றது. ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளர்களின் பின் நவீனத்துவப் பாணியிலமைந்த சிறுகதைகளில் கதைகள் வெளிப்படுத்தும் பொருள்கள், பின்நவீனத்துவ சமூகத்தின் விவகாரங்களாக அமை கின்றதா எனும் கேள்வியை தன் முதற் கட்டுரையில் எழுப்பும் கட்டுரை யாசிரியர், பின்நவீனத்துவம் அபத்தமாகக் காணும் விடயங்கள் எங்கள் உண்மையான அபத்தங்கள்தானா என்பது குறித்த சரியான புரிதலும் ஆய்வுகளும் படைப்பாளிகளிடத்தில் கூட அவசியமாகின்றது எனும் கருத்தினை முடிவில் முன்வைக்கின்றார். சமூகவியல் தளத்தில் நின்று ஆய்ந்து ஆசிரியர் இக்கட்டுரையை வடிவமைத்திருப்பது கட்டுரைக் கோர் பெறுமதியை நல்கியுள்ளது.

"இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளில் நிலை மாற்றத்துக்கான நகர்வுகள்", "இலக்கியத்தில் சிறுவர்களுக்கான சமூகநீதி" ஆகிய இரு கட்டுரைகளும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அத்திணைக் களம் தொகுத்த ஆய்வடங்கல்களில் வெளியானவை. ஈழத்தமிழ் சிறுகதை களில் நிகழ்ந்து வரும் நிலைமாற்றங்கள் உலகளாவிய மாற்றங்களின் போக்கிற்கேற்ப துரிதப்படுத்தப்படல் வேண்டும் என இடித்துரைக்கும் இராஜேஸ்கண்ணன், இந்த நிலைமாற்றங்களுக்கான பொருத்தமான தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான வழித்தடத்தினைச் செப்பனிட வேண்டியவர்களாக இலக்கிய விமர்சகர்களும் ஆய்வாளர் களும் அமைகின்றனர் எனும் தன் கவனத்தினையும், எண்ணத்தினை யும் ஆணித்தரமாகவே முன் வைத்துள்ளார். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை "குறிப்பாக சிறுவர் கதைகளை" மையமாக வைத்து இலக்கிய சமூகவியல் நோக்கில் எழுதப்பட்டிருக்கும் இலக்கியத்தில் சிறுவர்களுக்கான "சமூகநீதி" எனும் கட்டுரையில் சிறுவர் இலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் உளவியல் ரீதியாக செல்வாக்குச் செலுத்தி நிற்கும் சிறுவர் சார்ந்த விடயங்களை ஆசிரியர் ஆய்ந்துள்ளார். இத்தொகுதிக்கு இக் கட்டுரை மிக்க கனதி சேர்த்துள்ளது எனில் அது மிகையான கூற்றன்று.

"ஜனநாயக வகுப்பறை", "பெண்ணியக் கவிதைகள்" போன்ற கட்டுரைகள் ஏலவே ஜீவநதியில் பிரசுரமாகியிருந்த காலையில் விமர்சகர்கள் பலரினதும் பாராட்டினைப் பெற்றிருந்தது. பெண்ணிய நோக்கு நிலைகளின் வளர்ச்சிக்குச் சமாந்தரமாக தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம் தொடர்பான வெளிப்படுத்தல் நிகழ்த்தப்பட்டிருப்பதை அனார், ஆகர்ஷிகா, பஹீமா ஜெகான், பெண்ணியா, மைத்ரேயி போன்ற பெண் கவிஞர்களின் சில கவிதைகளினூடாக ஆசிரியர் நிறுவ முற்படுகிறார். பெண் நிலை வாதத்தினை முன்வைத்துக் கவிபுனைந்த ஆண்கள் பற்றியும் பெண்ணியக் கவிதைகளில் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புலம்பெயர் கவிஞர்களின் வகிபாகம் பற்றியும் இப்புனைந்துரை கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

கலைமுகம் சஞ்சிகையில் பிரசுரமான "பின்னைப் போர்க்கால கவிதைகள் எனும் கட்டுரை, தூண்டி இலக்கிய வட்டம் யாழ்ப் பாணத்தில் நடாத்திய ஆய்வரங்கொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மு.தளையசிங்கத்தின் மெய்யுள்: காலவெளி கடந்த கருத்து நிலை பற்றிய ஒரு மறுவாசிப்பு" எனும் கட்டுரை, யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடாத்திய திருக்குறள் பற்றிய ஆய்வரங்கொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட "முகாமைத்துவத்தில் வழிநடத்தல்: திருக்குறள் வழியே எண்ணக் கருக்களைத் தேடல்" என்ற கட்டுரை ஆகியனவே இந்நூலிற்கு அணி சேர்த்திருக்கும் ஏனைய கட்டுரைகளாகும். இவற்றுள் மு.தளைய சிங்கத்தின் மெய்யுள் பற்றிய கட்டுரை குறிப்பிடக்கூடியது. மு.த.வின் கருத்தியலையும், வாழ்வியலையும் ஆழமாகவே ஆய்ந்திருக்கிறது இக் கட்டுரை. மெய்யுள் பற்றிய உசாத்துணைக்கு இக்கட்டுரையொன்றே போதுமானது என்பேன்.

மொத்தத்தில் "இலக்கியவாதியான இராஜேஸ்கண்ணன், சமூக ஆய்வாளராகத் தன் மனதைத் தானே கேள்வி கேட்டு ஆராய்ந்து எடுத்த கருத்துக்களின் வடிவங்களே இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புகள் எனும் இந்நூலின் கட்டுரைகள்" என நூலின் பதிப்புரையில் தி.செல்வமனோகரன் கூறிய கூற்று முற்றிலும் நிதர்சனமானது.

"நயம் பட... : படைப்பு - படைப்பாளி - படிப்பு" எனும் நூல் இராஜேஸ்கண்ணனது பதினைந்து கட்டுரைகளை உள்வாங்கி வெளி வந்துள்ளது. தெணியான், வி.ஜீவகுமாரன், ஞானம் பாலச்சந்திரன், க.சட்டநாதன், கே.ஆர்.டேவிட், உடுவில் அரவிந்தன், க.பரணீதரன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபா, த.அஜந்த குமார், மயூரரூபன், த.ஜெயசீலன், இதயராசன், வண.செபமாலை அன்புராசா ஆகியோரின் நூல்களை முன்வைத்து எழுதிய 14 விமர்சனக் கட்டுரைகளுடன் புலோலியூர் ஆ.இரத்தின வேலோனின் மணிவிழாவையொட்டி (2018 மார்கழி) ஜீவநதியில் இ.இராஜேஸ்கண்ணன் எழுதிய கட்டுரையும் இயைந்து இந்நூலிற்கு அணி சேர்த்துள்ளன.

"சமூக வரலாற்றாசிரியனாக நாவலாசிரியன்: தெணியானின் நாவல்களை முன்வைத்த புரிதல்" எனும் கட்டுரை இத்தொகுதியில் மிக முக்கியமானதொரு பதிவெனலாம். யாழ்.சமூகத்தில் நிலவி வரும் சாதிய அடிப்படையிலான மேலாண்மைகள், சுரண்டல்களால் நலிந் தோர் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் வனப்பான வாழ்வை மேற்கொண்ட வடமராட்சி மக்களின் வாழ்வியலையே புரட்டிப் போட்ட யுத்தத்தினாலான இழப்புகள், இடிபாடுகள் போன்றவற்றை மட்டுமே தெணியானின் நாவல்கள் சித்திரித்திருக்கவில்லை. அன்பு, பாசம், உறவு, பிரிவு போன்ற மென்னுணர்வுகளையும் அதனாலான விளைவுகள், சிக்கல்களையும் அவரது நாவல்கள் மையப்படுத்தி நின்றன. அதனால் சமூக வரலாற்றாசிரியன் எனும் தூக்கலான பரி மாணத்துடன் குடும்ப, சமூக நுண்ணிலை அலகினை அடித்தளமாய்க் கொண்ட தெணியானின் மற்றொரு பக்கமும் பார்க்கப்படல் வேண்டும். அதாவது தெணியானை ஒற்றைப் பரிமாணத்தில் பார்க்கும் விமர்சனப் போக்கு மாற்றியமைக்கப்படல் வேண்டும் எனும் கருத்தினை கட்டுரை யாசிரியர் மிக்க ஆதங்கத்துடன் இக்கட்டுரையில் பதிவு செய்கிறார்.

ஒரு சமூக வரலாற்றாசிரியரின் அணுகு முறைகளுடன் பல் பரிமாணத் தன்மையுடன் நோக்குங்கால் யாழ்ப்பாணத்துச் சமூக மாற்றம் தொடர்பான புதிய புரிதல்கள் ஜீவகுமாரனின் குதிரை வாகனத்தின் மூலம் சாத்தியமாகும் என்ற இராஜேஸ்கண்ணனின் அறிக்கை அவரது இலக்கிய முதிர்ச்சியின் வெளிப்பாடெனலாம். இவ்வாறாக இராஜேஸ்கண்ணனின் நயம்பட நூலில் நயக்கத்தக்க அம்சங்கள் அநேகம் இருப்பினும் விரிவஞ்சி கீழ்க்காணும் ஒரு சிலவற்றை மட்டுமே கோடிட்டுக் காட்ட விழைகிறேன். இங் கெல்லாம் அவர் தன் கருத்தினை தர்க்கரீதியாகவே வெளிப்படுத்தி யிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

நிருபாவின் "சுணைக்கிது" சிறுகதைத் தொகுதியை முன்வைத்த தேடலில் ஆசிரியரின் அறிக்கை இவ்வாறாக அமைகிறது. "நிருபாவின் மொழியின் இலாவகம், சினேகமான கிராமிய மொழிவழக்கு என்பன வாழ்வு பற்றிய தேடலை செய்ய வைக்கும் படைப்புகளாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபாவின் பிள்ளை உளவியல் பெண்பிள்ளைகளின் உளவியலாகவே அமைந்து விடுகின்றன." மயூரரூபனின் கட்டுரைகளின் மொழி தளர்வுடைய தாகும் போது கோட்பாடு ரீதியான உள்ளடக்கங்கள் வாசக நிலையில் மேலும் தெளிவு பெறும் என மயூரரூபனின் "புனைவின் நிழல்" குறித்த புரிதலை ஆசிரியர் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

த.ஜெயசீலனின் "புயல் மழைக்குப் பின்னான பொழுது" கவிதைத் தொகுதியை முன்வைத்த பார்வையும் மிகப் பக்குவமானதே. அப்பதிவின் சாராம்சமானது வெகு கச்சிதமாக கீழ்க்கண்டவாறு அமை கிறது." முறையான மரபுப் பரிச்சயம், புதிய வடிவங்களைக் கையாளுந் திறன் எனும் இருவகைத் தடத்திலும் பயணிக்கவல்ல கவிஞராகவும் வாசகனுக்கு மிக அணுக்கமான மொழியில் பாடுபவராகவும் ஜெயசீலன் இந்தொகுதியில் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார்.

மொத்தத்தில் "ஈழத்தமிழ் இலக்கியத்தில் பார்க்கப்படாத அல்லது புரட்ட மறுத்த பக்கங்களை இராஜேஸ்கண்ணனின் இந்நூல் நுண்ணாய்வு செய்கிறது. கற்ற சமூகத்தால் புறந்தள்ளப்பட்டவர்களின் தனித்துவத்தையும் அவர்களது இலக்கிய வகிபாகத்தையும் ஈழத்து இலக்கியத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய இடத்தையும் இராஜேஸ்கண்ணனின் கட்டுரைகள் கற்பித மற்றும் நிதர்சனபூர்வமாக சாட்சியப் படுத்துகின்றன" என நூலின் பின்னுரையில் கூறுகிறார் இலக்கியத் திறனாய்வாளரும், தமிழியல் ஆய்வாளருமான சி.ரமேஷ். ஏறத்தாழ இந்நூல் பற்றிய எனது கருத்தும் இதுவேயாகின்றது.

விமர்சன வெளியில் இன்று அறிமுகமாகியிருக்கும் பல புதிய கோட்பாடுகளுடனான பரிச்சயமும், மிகப் பரந்த அறிவும், ஆழ்ந்த வாசிப்பும், ஒப்பிடுந்திறனும், விமர்சன நோக்கும் கொண்டிருப்பவர் களாலேயே முறையான விமர்சனத்தினை முன்வைக்க முடியும். இன்று ஈழத்தில் இத்துறையில் ஈடுபடுபவர்களுள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இத்தகு தகுதியினைக் கொண்டு விளங்குகின்றனர். அத்தகை யவர்களுள் ஒருவராக சிரேஷ்ட விரிவுரையாளரான வதிரி இ.இராஜேஸ்கண்ணன் திகழ்வது உண்மையில் மகிழ்வைத் தரு கின்றது. மேற்படி தகைமைகளுடன் சமூகவியல், உளவியல் உள்பட்ட துறைகளுடன் கூடிய பல்துறைப் பரிச்சயமும் இராஜேஸ்கண்ணனுக்கு வாய்த்திருக்கின்றது. இத்தகையவர்களாலேயே திறனாய்வுத்துறையில் அடுத்த கட்ட நகர்விற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இராஜேஸ்கண்ணனின் இவ்விரு நூல்களும் அத்தகையதோர் நகர்விற் கான படிக்கட்டுகளாகவே அமைந்திருக்கின்றன என மிகத் தாராளமா கவே கூறலாம்.

- தினக்குரல் : 08.08.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தி எழுத்தில் ஒரு புதிய பாய்ச்சல் பாரிர், வைத்தியர் தி.ஞானசேகரனின் "யாவரும் கேளிர்"

**ஞா**னசேகரன் நவீன இலக்கியத் திற்கும் இதழியலிற்கும் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினை பதிவு செய்யாத எந்தவொரு தமிழ் இலக்கிய ஆய்வோ அல்லது வரலாறோ ஒருபோதும் முழுமையுறாது. அந்தளவிற்கு இவ்விரு பெருந்துறைகளிலும் அவர் ஆழத் தடம் பதித்துள்ளார். "குருதி மலை" நாவலும் ஞானம் இதழும் வைத்தியர் தி.ஞான சேகரனின் இலக்கிய உச்சங்கள் எனலாம். அத் துடன் தனது ஞானம் இலக்கியப் பண்ணை யில் உருவாக்கி இன்று இலங்கையிலும் மற்றும் உலகெங்கும் அவர்களை உணர்திறன் மிகு எழுத்தாளர்களாக ஜொலிக்க வைத்த வகையிலும் தமிழ் இலக்கியப் பரப்பில் ஞான சேகரனின் வகிபாகம் வியந்துரைக்கற்பாலது.

மருத்துவராக பணிநிலை கொண்டி ருந்தும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே வெளிவாரி மாணவனாகத் தன்னைப் பதிவு செய்து கல்வியை மேற்கொண்டு இளங்கலை மாணிப் பட்டத்தையும் தனதாக்கிக் கொண்ட ஞானசேகரன் **1964**இல் "சிற்பி"யால் சிறுகதை யாசிரியராகச் செதுக்கப்பட்டவர். இற்றை வரை இவர் எழுதிய கதைகள் "கால தரிசனம்", "அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தி.ஞானசேகரன் சிறுகதைகள்" எனும் மூன்று தொகுதிகளில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் "அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்" எனும் பனுவல் தற்போது இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பாடநெறிக்கான பாடநூலாக விளங்கி வருவது சிறுகதையில் இவர் எய்திய உன்னதத்தின் இலக்கு எனலாம்.

இதுகாலவரையில் ஈழத்தில் வெளியான நாவல்களை தரத்தின் அடிப்படையில் பட்டியலிடுகையில் முதற் சிலவற்றுள் வரத்தக்கதான "குருதிமலை" மற்றும் "புதிய சுவடுகள்" "எரிமலை", "லயத்துச் சிறைகள்", "கவ்வாத்து" போன்ற ஞானசேகரனின் 5 நாவல்களில் முன்னிரண்டும் தேசிய சாகித்ய விருதினையும் பின்னிரண்டும் மாகாண சாகித்ய விருதினையும் "எரிமலை" கரிகாலன் விருதினையும் தமதாக்கி கொண்டமை நாவல் இலக்கியத்தில் ஞானசேகரன் பதித்த ஆழமான தடத்திற்கான அடையாளம் எனலாம். புனைவுகளில் மட்டுமன்றி டாக்டர் ஞானசேகரன் அல் புனைவுகளிலும் அர்ப்பணிப்புடன் ஈடு பட்டு வந்தார். இவரது "அவுஸ்திரேலிய பயணக்கதை", "வட இந்திய பயண அனுபவங்கள்", "லண்டன் பயண அனுபவங்கள்" போன்ற நூல்கள் வாசகரை வெவ்வேறு தளங்களுக்கும் முடிவற்று இழுத்துச் செல்வதாய் அமைந்திருந்தன.

உன்னதம் மிக்க தன் பனுவல்களால் வாசகர்களை ஆகர்ஷித்த ஞானசேகரன் பகிர்தலின் மூலமும் ஆழ்ந்த தரிசனத்தையும் தருவதற்காய் புத்தாயிரமாம் ஆண்டுடன் ஞானம் சஞ்சிகையினை ஆரம்பித்தார். 2000 ஆம் ஆண்டு ஆனி மாதம் முதல் வெளி வரும் ஞானம் இற்றை வரை மாதந் தவறாது வெளியாகியது என்பது மிக முக்கியமானது. 2022 மார்ச் வரையில் "ஞானத்தில்" 262 இதழ்கள் வெளியாகியுள்ளன. இந்த வகையில் ஞானம் சிற்றிதழ் தனது நூறாவது இதழினை "ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாகவும்" 150 ஆவது இதழினை "போரிலக்கிய சிறப்பிதழாகவும்" 175ஆவது இதழினை "புலம்பெயரிலக்கியச் சிறப்பிதழாகவும்" 200ஆவது இதழினை "நேர்காணல்களின் ஒரு தொகுப்பாகவும்" 250 ஆவது இதழினை "பரிசுச் சிறுகதைகளின் தொகுப்பாகவும்" வெளிக் கொணர்ந்து இதழியல் துறையில் இனி எவருமே இலகுவில் எட்ட முடியாத சாதனையை நிகழ்த்திக் காட்டியது. இச் சிறப்பிதழ்கள் யாவும் ஈழத்து இலக்கியச் செல்நெறியினை முழுமையாக அறியத்தக்க பொக்கிஷங் களாகத் திகழ வல்லன என்றால் அது மிகையாகாது.

ஞானம் பதிப்பகத்தின் ஊடான ஞானசேகரனின் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு முயற்சிகள் மேலும் ஒரு பரிமாணமாக நோக்கத்தக்கது. தமிழ் நூல்களுக்கான விநியோக வலையமைப்பென்பது அறவே இல்லாத நமது நாட்டில் 78 நூல்களை இற்றைவரை வெளிக் கொணர்ந்து மேலும் அத்துறையில் சளைக்காது பயணிக்க எத்தனிப்பது வியத்தகு சாதனையாகவே கொள்ளப்பட வேண்டியது. அச்சுத்தாள்களின் விலையேற்றம், மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் இவற்றின் மத்தியிலும் நூல்களை காலந் தவறாது வெளிக் கொணர்வதென்பது உண்மையில் அசுர சாதனை தான்!

தனது நோயாளர்களுக்கான மருத்துவ சேவை, ஞானம் இதழில் பிரதம ஆசிரியருக்கான பணிகள், இலக்கியச் செயற்பாடுகள் முதலான மிகுந்த வேலைப்பளுக்கள் மத்தியிலும் அவ்வப்போது தேசியப் பத்திரிகைகளில் பத்திகள் எழுதுவதையும் டாக்டர் ஞானசேகரன் வழக்கத்தில் கொண்டிருந்தார். இந்த வகையில் தினக்குரல் பத்திரிகையில் இவர் தொடர்ச்சியாக எழுதிவந்த "சரித்திரம் பேசும் சாஹித்ய ரத்னா", "அந்த நாள் ஞாபகம்" போன்ற பத்திகள் மிகவும் பிரசித்தமானவை. தன்னுடன் நெருங்கிப் பழகியவர்கள் உயிர் நீத்த வேளைகளில் அவ் ஆளுமைகளுடனான தனது இலக்கிய நினைவுகளை மீட்டி டாக்டர் ஞானசேகரன் எழுதி வந்த "அந்தநாள் ஞாபகம்" தொடர் இன்றளவும் மனதில் நீக்கமற நிறைந்துள்ளது. நூலுருப் பெற்ற "சரித்திரம் பேசும் சாஹித்ய ரத்னா" எனும் பத்தி இலக்கிய ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பத்தி எழுத்தாளர்களுக்கும் நல்லதோர் உசாத்துணையாக அமைந் திருந்தது.

பத்தி எழுத்துக்களின் தொடர்ச்சியாக அண்மைக் காலங்களாக தினகரன் பத்திரிகையில் வாரந்தவறாது டாக்டர் தி.ஞானசேகரன் எழுதி வந்த "யாவரும் கேளிர்" தொடர், வாசகர்களை வெகுவாக ஆகர்ஷித்து வந்ததெனலாம். "கொவிட் 19" பெருந்தொற்று இடர் காலப்பகுதியிலும் இப்பத்தியை இடைவிடாது இவர் எழுதி வந்தமை இங்கு பிரதானமாகக் குறிப்பிடத்தக்கது. இத் தொடர் பத்திரிகையில் வெளிவந்ததும் முகநூல் மற்றும் இணைய இதழ்களில் மீள்பிரசுரிக்கப் பட்ட தருணங்களில் பதிவு செய்யப்பட்ட பின்னூட்டங்களிலிருந்து இப்பத்திக்கு வாசகர் மத்தியிலிருந்த வரவேற்பினை அறிந்து கொள்ள முடிந்தது. இத்தகு சிறப்புமிக்க பத்தியை "யாவரும் கேளிர்" எனும் அதே மகுடத்தில் தற்போது ஞானம் பதிப்பகம் பெரு நூலாக்கி தனது 78ஆவது பதிப்பாக வெளிக் கொணர்ந்துள்ளது. கண்ணைக் கவரும் அட்டைப்படத்துடன் நானூறு பக்கங்களில் அறுவடையாகியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பனுவலுக்கு தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் அளிந்திருக்கும் முன்னுரை மேலும் அணிசேர்ப்பதாய் அமைந் துள்ளது.

வாசகனின் அறிவுப்பரப்பு குறித்த தெளிவுடன், அவனுக்குப் புரிகின்ற மொழிநடையில் புரியத்தக்க விடயங்களைப் பற்றி மட்டும் பேசுவதே உண்மையான பத்தி எழுத்தாகும். பத்தி எழுத்துக்களின் நோக்கமும் அதுவாகவே அமைகின்றது. அந்த வகையில் கூறப்படும் விடயங்களை பத்தி எழுத்துக்கள் மிகத் தெளிவாக முன்வைத்தல் வேண்டும். பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து தனித் தன்மை யான வாக்கிய அமைப்புகளை உருவாக்கி எழுதப்படும் பத்தி எழுத்துக்களே தனித்தன்மை கொண்டு விளங்கவல்லன. தன்னிலை வாக்கியங்கள் குறைவாக அமைதல் பத்திக்கு எப்போதும் அவசியமான தொன்றாகும். டாக்டர் தி.ஞானசேகரனின் பத்திகள் இத்தகு தன்மை களைக் கொண்டு விளங்குவதாலேயே அவை வாசகர்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்படுகின்றன, பொது ஜனங்களிடையே பெரிதும் பிரபலமாகின்றன. சுய அனுபவங்களையும் ஆங்காங்கே பெய்து தனது பத்திகளை ஞானசேகரன் வடிவமைப்பதாலேயே அவை சுவாரசிய மிக்கவைகளாக அமைகின்றன.

கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பற்றிய அவசியமான குறிப்புகளையும், நூல் அறிமுகங்களையும், உலக நடப்புக்களையும், நாட்டில் நடைபெறுகின்ற கலை, கலாசாரம், பாரம் பரிய பண்பாடு சார்ந்த விடயங்களையும் உள்வாங்கியதாக "யாவரும் கேளிர்" பத்தியை மிகவும் செம்மையாக வாராவாரமும் ஞானசேகரன் வடிவமைத்திருப்பார். வார முற்பகுதியில் நிகழ்ந்த விடயங்கள் அவ்வார ஞாயிறு பதிப்பில் வெளிவரும் பத்தியில் நிச்சயம் இடம் பெறும் வகையில் தனது பத்தியை அவர் ஒருங்கமைத்திருப்பார்.

இந்த வகையில் "யாவரும் கேளிர்" பத்தியில் பத்மா சோமகாந்தன், கோவை ஞானி, ஓவியர் ஆசை இராசையா, பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், மா.பா.சி, க்ரியா ராம கிருஷ்ணன், கி.ராஜநாராயணன், மு.பஷீர், மாத்தளை கார்த்திகேசு கவிஞர். த.துரைசிங்கம், நந்தினி சேவியர் போன்ற கலைஞர்களின் மறைவின் போது அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஞான சேகரன் வரைந்த குறிப்புகள் யாவும் மனதை நெகிழ வைத்த அற்புத மான பதிவுகள் எனலாம். அக் கலைஞர்களின் தோற்றம் முதல் மறைவு வரையிலான தகவல்களுடன் வாழ்நாள் சாதனைகளையும் ஆசிரியர் மனதைவிட்டகலா முறையில் எடுத்துக் கூறியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களை அவர்களது நினைவு நாளன்றோ அல்லது பிறந்த தினத்தன்றோ நினைவு கூர்ந்து எழுதிய பத்திகள் அவ் ஆளுமைகள் பற்றிய அறியாத பல தகவல்களைத் தருவதாக அமைந்திருந்தன. இந்த வகையில் டொமினிக் ஜீவா, தேசபந்து சிறிசுமன கொடகே, சிற்பி சிவ சரவணபவன், இரசிகமணி கனக செந்திநாதன், எஸ்.அகஸ்தியர், அன்புமணி, வரதர், செங்கை ஆழியான், கே.கணேஷ், பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் க.கைலாசபதி, தேவன் - யாழ்ப்பாணம், வ.அ.இராசரத்தினம், பேராசிரியர் நந்தி துரைவி, நீர்வை பொன்னையன், லஷ்மண ஐயர், டாக்டர் புலோலியூர் க.சதாசிவம், கே.விஜயன், எஸ்.டி.சிவநாயகம், ராஜ ஸ்ரீகாந்தன், பேராசிரியர் க.அருணாசலம், சு.வே, செம்பியன் செல்வன், எஸ்.பொ., உதயணன், சக்தி அ.பாலஐயா, ஏ.இக்பால், உபாலி லீலாரட்ன, திருச்செந்தூரன், நா.சோமகாந்தன், சொக்கன், ஜுனைதா ஷெரீப், சைவப்புலவர் சு.செல்லத்துரை, தங்கம்மா அப்பாக்குட்டி முதலானோர் பற்றி ஞானசேகரன் தந்த தகவல்கள் அவரது அர்ப் பணிப்பு மிக்க தேடலை உணர்த்தி நிற்கின்றது. இக் கட்டுரைகளில் எல்லாம் அவ் ஆளுமைகள் பற்றிய தரவுகளை சுருக்கமாக ஆசிரியர் கூறி நின்றாலும் அவர்களை முழுமையாக உணர வைக்க முடிந்தமை அவரின் நுண்ணறிவின் வெளிப்பாடெனலாம்.

உலக தமிழ்சங்கத்தின் இலக்கண விருதினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றமை, **2021**ற்கான சாகித்ய ரத்னா விருதினை மு.சிவலிங்கம் தனதாக்கியமை, யாழ் விருதிற்கு கவிஞர் சோ.ப. உரித்தானமை, யாழ் சர்வதேச திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனை யாளராக கே.எஸ் சிவகுமாரன் கௌரவிக்கப்பட்டமை, கொடகே தேசிய சாகித்திய விழாவில் எஸ்.முத்துமீரானுக்கு வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கப்பட்டமை போன்ற நிகழ்வுகளையெல்லாம் கண்முன் கொணரும் கட்டுரையாளர் பயன்மிகு பல தகவல்களையும் அந் நிகழ்வுகளினூடு முன்னிறுத்தியுள்ளார் எனலாம். இந்நூலில் சமரபாகு சீனா உதயகுமார், மல்லியப்புசந்தி திலகர், பாலமுனை பாறுக் என ஆரம்பித்து முப்பதிற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள் பற்றிய குறிப்புகள் உண்டு. விரிவஞ்சி அந் நூலாசிரியர்கள் பற்றியோ அந் நூல்கள் பற்றியோ ஈண்டு குறிப்பிடுவதைத் தவிர்த்துள்ளேன்.

இலக்கிய ஆளுமைகளின் பெயரிற்கு முன்னால் பிரயோகிக்கப் பட்ட அடைமொழிகளும் அவ் ஆளுமைகளுக்கு மேலும் அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ப்பதாய் அமைந்துள்ளமை நோக்கற்பாலது. "பத்திரிகையுலகில் ஒப்பாரும் மிக்காருமற்றவராகத் திகழ்ந்த எஸ்.டி.சிவநாயகம்", தமிழியலில் தலைமைப் பேராசிரியராக விளங்கிய பேராசான் கா.சிவத்தம்பி "மலையக நவீன இலக்கிய எழுச்சியின் முதல்வர் எனப்போற்றப்படும் திருச்செந்தூரன்", "கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் கடைசிவரை வாழ்ந்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன்", "ஈழத்து எழுத்தாளர்களுள் அதிக படைப்புகளைத் தந்த செங்கை ஆழியான்" போன்ற மகுடங்களை இவ்வகையில் நயந்து கூறலாம்.

வெகுஜனங்களை வெகுவாகக் கவரவல்ல உலக தரிசனங்கள் பலவற்றை இந்நூலில் ஆசிரியர் திரட்டித் தந்திருப்பது வரவேற்கத் தக்கது. சர்வாதிகாரி ஹிட்லரின் மற்றுமொரு முகம், பிரித்தானிய அருங்காட்சியகத்தில் எமது நாட்டின் தொல்பொருள், நவீன உலகின் பொறியியல் அற்புதங்களில் ஒன்றான ஈபெல் கோபுரம், இலண்டனில் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் போன்ற பல உலக தரிசனங் களும் தகவல்களும் வாசகர்களுக்கு இலகு வாசிப்பிற்குரியனவாக அமைந்திருப்பதோடு சுவாரசியமிக்க புதிய பல செய்திகளையும் சொல்வனவாக உள்ளன.

இலக்கியத்தையும், உலக நடப்புகளையும் ஒரு சேர தரிசிக்க வைத்ததற்கும் அப்பால் சுவாரசியமிக்க இலகுவாசிப்பு ஒன்றிற்கான அத்திபாரத்தை அமைத்த வகையிலும் யாவரும் கேளிர் ஈழத்து இலக்கிய வெளியில் ஒரு முக்கிய மைல்கல் ஆகின்றது. இதுபோன்ற முயற்சி களை வைத்தியர் ஞானசேகரன் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்! தினக்குரலில் தொடராய் அவர் எழுதிவந்த "அந்த நாள் ஞாபகம்" எனும் ஆரோக்கியமான பத்தியினையும் பனுவலாக்க அவர் ஆவன செய்ய வேண்டும்!

"யாவரும் கேளிர்" எனும் இந்நூலின் வெளியீட்டு விழாவும், தனது அமுத விழாவையொட்டி வைத்தியர் ஞானசேகரன் நடாத்திய மாபெரும் இலக்கிய போட்டியின் பரிசளிப்பு விழாவும் ஒருசேர கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் **19.03.2022** காலை **9.00** மணிக்கு நிகழ்ந்தது என்பதும் ஈண்டு பதிவு செய்யத்தக்கது. வைத்தியர் ஞானசேகரன் அவர்களது இலக்கிய மற்றும் இதழியல் சேவைகள் தொடரவும், அவர் நீடு வாழவும் மனதார வாழ்த்துவோமாக!

- தினக்குரல் : 20.03.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுரிமை தொடர்பில் மற்றுமொரு ஆய்வு நூல் இரகுவரனின் "தும்பளை மேற்கு சந்திரப்பரமானந்தர் வம்சம்"

கல்லூரிக் காலங்களில் இருந்தே கல்வி மற்றும் தடகள விளையாட்டுத் துறைகளில் மட்டுமன்றி கலைகளிலும் மிக்க ஆர்வம் காட்டி வந்த இரகுவரன், அந்நாட்களில் தும்பளை மேற்கு சனசமூக நிலையத்து இளைஞர்களால் வெளிக்கொணரப்பட்ட "குயிலோசை" எனும் சஞ்சிகை வெளிவர பெரிதும் உறுதுணையுடன் செயற்பட்டு வந்தமை நினைவில் கொள்ளத்தக்கது. உடன் பயின்ற இலக்கிய நண்பர்களின் தொடர்புகளுக்கும் அப்பால், தெணியான், கலாமணி, எம்.கே.முருகானந்தன் போன்ற வடமராட்சி எழுத்தாளர்கள், து.குலசிங்கம் போன்ற இலக்கியச் செயற்பாட்டாளர்களுடன் இருந்த ஈர்ப்பும் வழிகாட்டலும் இவரது ஆளுமையைப் புடம் போட்டது எனலாம். இன்று பல் துறைகளிலும் இரகுவரன் சிறந்து விளங்கினும் சிறுகதையே இவரது இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் அத்திபாரமாய் அமைந்திருந்தது. இந்தவகையில் 80களின் முற்கூற்றில் சிரித்திரனில் வெளிவந்த "காக்கை குருவி எங்கள் சாதி" எனும் சிறுகதையே இலக்கியப் பரப்பில் இவர் பதித்த முதல் தடம் எனலாம். பாரதி நூற்றாண்டு சிறுகதைப் போட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சிறுகதை இரண்டாம் இடத்தினைவென்றிருந்தது.

ஆறு அல்லது ஏழுவரையிலான புனைகதைகள் எழுதியதன் பின்னர் இரகுவரனின் ஆர்வமும் சிந்தனையும் சுற்றுச் சூழலியல், நாடகமும் அரங்கியலும், மரபுரிமைகள் மீதான ஆராய்ச்சி என முற்றிலும் திசைமாறலாயிற்று. இரகுவரன் மேற் கொண்ட அரங்கியல் சார்ந்த பட்டப் படிப்பும் இதற்கு ஓர் காரணமெனலாம். மேற்படி முத்துறைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு காத்திரமான முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவால் ஏலவே ஒன்பது நூல்களை இவர் அறுவடை செய்துள்ளார்.

மரபுரிமைகள் தொடர்பில் தும்பளை மேற்கு, கலட்டிக் கிராமம் பற்றி இரகுவரன் எழுதிய முதலிரு நூல்களும் முறையே "ஊரும் வாழ்வும்" (2001), "பிராமண தெரு சரிதம்" (2009) ஆகிய மகுடங்களில் வெளியாகி மிக்க கவனம் பெற்றிருந்தன. "ஊரும் வாழ்வும்" எனும் நூலானது முற்றுமுழுவதுமாய் தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணமாய் அமைந்திருந்தது. சமூகப் பண்பாட்டு வாழ்வியல் பற்றிய அக்காலத்து நடைமுறைகளின் தொகுப்பாக இரகுவரன் அந்நூலினை வடிவமைத்திருப்பார். "பிராமண தெரு சரிதம்" என்ற சிறு நூலில் தும்பளை மேற்கு பிராமண வீதியை முன்னிறுத்தி தனதூர் தொடர்பிலான அரிய பல தகவல்களை இரகுவரன் பதிவு செய்திருந் தார். தனது தாயாரின் நினைவாக அந்நூலினை அவர் வெளிக் கொணர்ந்திருந்தார் என்பதும் என நினைவில் உண்டு.

மரபுரிமைகள் சார்ந்த நூல்களின் தொடர்ச்சியாக தற்போது "தும்பளை மேற்கு சந்திரப் பரமானந்தர் வம்சம்" எனும் தனதாய்வினை பனுவலாக இரகுவரன் வெளிக்கொணர்ந்துள்ளார். அகண்டதொரு பார்வையில் ஆழமான உள்ளடக்கத்துடன் நூல் அமைந்திருப்பது கவனத்திற்குரியது. புலோலி, துன்னாலை, அல்வாய், சுப்பர்மடம், வல்வெட்டித்துறை போன்ற அயற் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் அம்பன், குடத்தனை முதல் செம்பியன்பற்று வரை பரந்திருக்கும் வடமராட்சி கிழக்குப் பகுதியினைச் சேர்ந்தவர்களும் சித்த ஆயுர்வேத வைத்தியத்திற்காக தும்பளைக் கிராமத்தை நோக்கிப் பயணித்த காலகட்டம் இன்னும் நினைவில் கொள்ளத்தக்கது. சித்த ஆயுர்வேத வைத்தியர், சோதிடர், பஞ்சாங்கம் கணிக்கும் வானியலாளர்களின் மரபிலவதரித்தவர்கள் கோலோச்சிய பொற்காலம் அது எனலாம்.

சந்திரப்பரமானந்தர் வம்சத்தினர் தனதூரில் வேரூன்றிய வரலாற்றினை இரகுவரன் மிக்க சுவாரசியத்துடன் நூலின் நுழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலில் பதிவு செய்துள்ளார். அவரது நீண்ட வரலாற்றுப் பதிவினை பின்வருமாறு சுருக்கிப் பார்க்கலாம். "யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் இரண்டாம் சங்கிலியனுக்கும் (சங்கிலிகுமாரன்) போர்த்துக்கேயருக்குமான இறுதி யுத்தத்தில் தோல்வியைத் தழுவிய சங்கிலிகுமாரன் தும்பளை மேற்கு கிராமத்தினுள் வாழ்ந்து வந்த வைத்திய சோதிடர்களின் பராமரிப்பில் சந்திரபானு என்ற பெயருடன் கரைந்துறைந்திருந்ததாகவும் அக்காலகட்டங்களில் தும்பளையைச் சேர்ந்த வைத்திய சோதிடர்கள் சங்கிலிகுமாரனுடன் வைத்திய சோதிடம் பற்றிக் கலந்துரையாடியும், தர்க்கித்தும் பரஸ்பரமாக வைத்திய சோதிட அறிவையும் நுணுக்கங்களையும் வளர்த்துக் கொண்டதாக வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது. மேலும் இதே காலத்தில் தென்னிந்தியாவின் கேரள நாட்டிலிருந்து மலையாள மன்னன் ஒருவன் பகைவருக்கு அஞ்சி அங்கிருந்து தப்பிவந்து தும்பளையில் தஞ்சம் புகுந்து கரைந்துறைந்திருந்த காலையில் அவனிடமிருந்து வடநாட்டு சோதிட நுட்பங்களை தும்பளை சோதிடர் கேட்டறிந்து தம் ஆயுர்வேத அறிவைப் பெருக்கிக் கொண்டதாகவும் கூறுவர்."

இத்தகு வரலாறுகளினூடாக தனது விடயதானங்களை முன்வைக்க முயலும் ஆசிரியர் ஒவ்வொரு அத்தியாயத்திலும் தனது ஆகக்கூடுதலான உழைப்பினையும் தேடலினையும் அர்ப்பணிப்புடன் முன்வைத்திருப்பது புலனாகிறது. மேலும் ஆய்வுகளை ஆசிரியர் நகர்த்திச் சென்றிருக்கும் முறைமை வாசகர்களுக்கு நூலின்பால் மிகுந்த ஈடுபாட்டினையும் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற ஓர் ஆர்வத்தினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

கிருஷ்ணபிள்ளை குமாரசாமி பரியாரியார் (1923-1982) முதற் கொண்டு ஆசிப்பரியாரியார் என அழைக்கப்பட்ட ஆறுமுகம் சிவப் பிரகாசம் (1912-1944) வரையிலான 24 சித்த ஆயுர்வேத வைத்தியர் களின் வரலாற்றுக் குறிப்புகளை இரகுவரன் நூலின் முதற் பகுதியில் ஆய்வு ரீதியாகத் தந்துள்ளார். எளிமையான மொழிநடையில் ஆசிரியரே நேரில் வந்து நின்று விவரிக்கும் தன்மை கொண்டனவாக இவை விளங்குகின்றன. இத்தகு ஆய்வுக்காக இரகுவரன் ஏறி, இறங்கிய படிகள், வரலாற்று உண்மையினை ஆராய்ந்து அறிந்து ஆவணமாக்க அவர் கரைத்த பொன்னான பொழுதுகள், காத்திருப்புகள் யாவுமே அவரை வெற்றிப்பாதைக்கே இட்டுச் சென்றுள்ளன எனலாம். "பரியாரியார் வளவில் பரம்பரை மருத்துவ ஏடுகள் பலவற்றை கறையான் தின்றுவிட்டது", என்ற செய்தியை மனதைக் கௌவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் ஒருவித பதகளிப்புடன் இரகுவரன் பதிவு செய்திருக்கும் பாங்கு சிலிர்க்க வைத்தது எனலாம்.

இதுபோலவே சோதிட மரபிலும் சந்திரப் பரமானந்தர் (1750) முதல் பரமானந்தன் மகேந்திரன் (1959) வரை 11 சோதிடர்களது வாழ்க்கைக் குறிப்புகளை வம்சாவழியினூடு இரகுவரன் விளக்கி யுள்ளார். ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்திலிருந்தே வைத்திய சோதிடர் கள் புகழ்பெற்று விளங்கினர். ஒல்லாந்த ஆள்பதியின் நோயினையே தீர்த்து வைத்து, அவர்களது கௌரவத்தினைப் பெற்றனர் போன்ற தகவல்கள் உண்மையிலேயே வாசிப் போரை வியப்பில் ஆழ்த்துவன.

வானியலாளர் மரபானது தும்பளையைச் சேர்ந்த பிராமணர் பிரம்ம ஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் பரம்பரையினராலும் பண்டிதர் க.சச்சிதானந்தனின் தந்தையார் வழிப் பரம்பரையினராலும் பேணப்பட்டு வந்தது. இவர்கள் முதலில் ஏட்டுப் பஞ்சாங்கத்தினையும் பின்னர் அச்சு வடிவில் பஞ்சாங்கத்தினையும் வெளியிட்டு வந்தனர் போன்ற தகவல்கள் கவனத்தை ஈர்க்க வல்லன. இன்றுவரை தும்பளை யில் சித்த ஆயுர்வேத வைத்திய மரபும் சோதிட மரபும் தொடர்ந்து வருகின்றது. ஆனால் பண்டிதர் க.சச்சிதானந்தனின் மறைவுடன் (2008) பஞ்சாங்கம் கணிக்கும் வானியல் நிபுணத்துவ மரபு தற்காலிகமாக அற்றுப் போயுள்ளது என்ற ஆசிரியர் இரகுவரனின் ஆதங்கம் அர்த்த பூர்வமானது.

ஈழத்து இலக்கியத்தில் குறிப்பாக நவீன புனைகதை இலக்கி யத்தில் சிறுகதை மூலவர் எனக்கொள்ளப்படும் இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தன் போன்றோருடன் ஒட்டியிருக்கத்தக்கவர் ஈழகேசரியில் 8 சிறுகதைகளை எழுதிய "தண்ணீர்த்தாகம்" புகழ் ஆனந்தன் என்பவராவர். இலங்கையில் இலக்கிய சேவைக்காக வழங்கப்படும் அதியுயர் விருதான "சாகித்யரத்னா" விருதினை 1999இல் தனதாக்கிய பெருமையும் ஆனந்தனுக்கு உண்டு. அந்த ஆனந்தனே தும்பளையில் வானியல் சாஸ்திர நிபுணராக விளங்கிய பண்டிதர் க.சச்சிதானந்தன் எனும் தகவலையும் இரகுவரன் தன் நூலில் தவறாது இணைத்திருப்பது அவருள் ஒளிந்துகொண்டிருக்கும் புனைகதைஞனை வெளிக்கொணர்வதாய் உள்ளது.

மேற்படி 37 ஆளுமைகளது வாழ்வியலையும் அவர்களது பெருமைகளையும் அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தையும் அதன் பின்னணிகளையெல்லாம் இரகுவரன் தனது எழுத்தின் வழியாகக் கொண்டுவந்து சேர்ப்பித்திருப்பது வாசகர்களுக்கு அவர்கள் முன் அருகமர்ந்து அறிந்துகொள்வது போன்ற ஒரு உணர்வினை ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறது. இதுவே, இத்தகு எழுத்துகளில் இரகுவரன் பெறும் முக்கியத்துவமும் ஆகின்றது.

மருத்துவ மூலிகைகளிலிருந்து குழம்பு, எண்ணெய் போன்றவற்றையும் செந்தூரத்திலிருந்து குளிகை, தூள் முதலான வற்றையும் தயாரிக்கும் செய்முறைகளையும் மூலிகைத் தாவரங்களின் பெரும் பட்டியலையும் அதனால் நீக்கப்படும் நோய்களது விபரங்களையும் இரகுவரன் நூலில் உள்வாங்கியிருப்பது நூலினை மேலும் பெறுமதியாக்கியுள்ளது எனலாம்.

இவ்வாறாக, சித்த ஆயுர்வேத வைத்தியம், சோதிடம், வானியல் நிபுணத்துவம் முதலானவற்றின் தொடக்க நிலைகளையும் அதன் நீட்சிகளையும் சான்றாதாரங்களுடன் இந் நூலில் பா.இரகுவரன் பதிவு செய்துள்ளார். தும்பளை மேற்கின் தொன்மை மிகு இத்தகு கலாசாரம் இன்று அருகிவருவது பற்றியும் எதிர்காலத்தில் அற்றுப்போய்விடுமோ எனும் தனது ஐயப்பாட்டினையும் கூடவே இரகுவரன் இங்கு முன்னிறுத்தியிருப்பது குறித்து மிக ஆழமாகவே சிந்திக்கவேண்டியுள்ளது. சிலம்பாட்டம், கூத்துக்கலை, வில்லுப் பாட்டு, கரகாட்டம் போன்ற எமது பாரம்பரியம் மிக்க கலைகளுடன் இரகுவரன் இங்கு குறிப்பிடும் இத்தகு மரபு ரீதியான செயற்பாடு களெல்லாம் அடுத்த தலைமுறையினர் வசமும் எடுத்துச் செல்லப்பட, ஏற்றுக்கொள்ளத்தக்க உரிய வழி முறை ஒன்றினைத் தேர்வு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இரகுவரன் போன்ற மரபியல் சார்ந்த ஆய்வாளர்கள் மட்டுமன்றி ஆர்வலர்கள் அனைவரும் ஒருசேரச் செயற்பட்டால் மட்டுமே இக்கலைகள் அடுத்தடுத்த தலை முறையினரையும் சென்றடைய வாய்ப்பு உண்டு.

- தினக்குரல் : 12.06.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் இலக்கியத்தில் ஒரு முன்னகர்வு
## வண செபமாலை அன்புராசா அடிகளாரின்
## "அண்ணன் ஆமையும் தம்பி முயலும்"

தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுவர் இலக்கியம் என்பது தனித்துவமானதொரு துறையாகக் கொள்ளத்தக்கது. மழலைகள், குழந்தைகள், சிறுவர்கள் என சிறார்களின் வளர்ச்சிப் படிநிலைகளை மூன்றாக வகுக்க லாம். இத்தகு படிநிலைகளுக்கு ஏற்ற பிரக்ஞை யுடன் சிறுவர் இலக்கியம் ஆரம்ப காலங்களி லிருந்து வளர்த்தெடுக்கப்பட்டு வந்தனவா என்பது இன்றளவும் ஆய்வுக்குரிய விடய மாகவே உள்ளது. ஆனாலும் பெரும் பாலானவை சிறுவர்களது அறிவிற்கும், உணர் விற்கும், இரசனைக்கும் பொருந்தும் படியா கவே படைக்கப்பட்டிருப்பது அவதானிக்கத் தக்கது.

கதைகளாக, பாடல்களாக, நாடகங் களாக சிறுவர் இலக்கியங்கள் மாறுபட்ட வடிவங்களில் புனையப்பட்டிருப்பினும் அப்படைப்புகள் சிறுவர்களுக்கான சிறந்த படிப்பினைகளையும், முன்மாதிரிகளையும் உள்ளடக்கியிருந்தன என்பது கண்கூடு. சிறுவர்களது வாசிப்புத்திறன், படைப்பாற்றல், புத்தாக்கதிறன், கற்பனை வளம் போன்ற வற்றின் மேம்பாட்டிற்கு இத்தகு இலக்கியங் கள் பெரிதும் துணை போவனவாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தன. இந்தவகையில் எழுத்தாளர்கள் சிறுவர்களது வயதுக்கும், அறிவிற்கும், உணர்விற்கும் உள்ளத்தால் பொருந்தும்படி இறங்கி வந்தே அவர்களுக்கான இலக்கியங்களைப் படைக்க வேண்டியவர்கள் ஆகின்றனர். மேலும் சிறுவர் உளவியல் மற்றும் அவர்களது மொழிகள் முதலானவற்றில் போதிய பிரக்ஞை உள்ளவர்களாகவும் அவர்கள் இருப்பது அவசியமானதொன்றா கின்றது.

சிறுவர் பாடல்களைப் பொறுத்தமட்டில் பெரும்பாலும் அவை நாட்டார் பாடல்களை அடியொற்றியே எழுதப்பட்டன எனலாம். ஓசை நயம், சந்தம் முதலானவை சிறுவர்களது இரசனைக்கு ஏற்றதாக அமையும் பட்சத்திலேயே அவை நிலையாய் நிற்கும் வல்லமை பெறுகின்றன. இந்த வகையில் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரது பாடல்கள் உடன் நினைவுக்கு வருகின்றன. வித்துவான் வேந்தனார், கல்வயல் குமாரசாமி போன்றோரையும் தயக்கமேதுமின்றி இப்பட்டியலில் இயைத்துக் கொள்ளலாம். குழந்தைகளின் அகவுலகம் பற்றிய தெளிவான புரிதல் உள்ளவர் களாலேயே இத்துறையில் வெற்றி பெற முடியும். புறவுலகு பற்றிய குழந்தைகளின் தரிசனம் எத்தகையதென்பதை இக்கவிஞர்கள் நன்கு உணர்ந்திருந்ததும், சிறுவர்களது மொழியிலேயே அவற்றினை அவர்கள் வெளிப்படுத்தியமையுமே அவர்களது வெற்றிக்கான மூல காரணமெனலாம். எமது நாட்டில் அவ்வப்போது இத்துறையில் பலர் தமது முன்னெடுப்புகளை மேற்கொண்டிருப்பினும் தகவம் வ.இராசையா, த.துரைசிங்கம், கேணிப்பித்தன் ச.அருளானந்தம், ஷெல்லிதாசன், வண.செ.அன்புராசா அடிகளார், கவிஞர் நந்தினி, ராணி சீதரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

சிறுவர் மனதில் எதிர்மறையான கேள்விகளை எழுப்பாது, அவர்களை நல்வழிப்படுத்தத் தக்கவகையில் இயற்கைக்கும், நடைமுறைக்கும் ஒன்றியதாக சிறுவர் நாடகங்களில் காட்சிகள் அமைதல் வேண்டும். கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு, கோகிலா மகேந்திரன் போன்றோர் இத்துறையில் அடைந்த வெற்றிக்கு சிறுவர் நாடகம் பற்றி அவர்கள் கொண்டிருந்த பூரண பிரக்ஞையும், துறை சார்ந்த ஆளுமையுமே காரணங்களாயிற்று. அண்மைக்காலங்களில் இத்துறையில் ஈடுபடுபவர்களுள் ஜோன்சன் ராஜ்குமார், பால இரகுவரன், க.ஸ்ரீகந்த வேள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

மழலைகளாய், குழந்தைகளாய், வளருங்காலை, தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையர் அல்லது பாட்டன், பாட்டியரது வாய்மொழி மூலமும், வளர்ந்ததும் தம் வாசிப்பின் வழியாகவும் சிறார்களால் உள்வாங்கப் படும் கதைகளானது அவர்களது பராயத்தினை மிகக் களிப்பூட்டு பனவாகவும் நிறைவானதாகவும் ஆக்கிக்கொள்ள வழிசமைக்கின்றது. அவர்கள் வளர்ந்து வாலிப வயதினை எய்தியதும் மிக்க ஆளுமை கொண்டவர்களாகவும் விழுமியம் மிக்கவர்களாகவும் விளங்கு வதற்கும் இத்தகைய இலக்கியங்கள் கால்கோளிடுகின்றன. ஈழத்தில் சிறுவர்களுக்கான கதைகள் எழுதுவதில் பலர் ஈடுபாடு காட்டி வருகின்றனர். அவர்களுள் மாவை நித்தியானந்தன், டாக்டர் ஓ.கே.குணநாதன், பஸீலா அமீர், மொஹமட் ராசூக், உ.நிஸார், ரூபாராணி ஜோசப் போன்றோர் உடன் நினைவிற்கு வருகின்றனர். சிறுவர்களுக்கான அறிவியல் கதைகள் புனைவதில் அண்மைக் காலங்களில் கோகிலா மகேந்திரன் காட்டிவரும் ஈடுபாடும் மனங்கொள்ளத்தக்கது. சிறுவர்களுக்கு கதை சொல்வதில் மாஸ்டர் சிவலிங்கம் பதித்த தடமும் மிக ஆழமானது. இதன் தொடர்ச்சியாக சிறுவர்களுக்கான இலக்கியம் படைப்பதில் வணக்கத்திற்குரிய செபமாலை அன்புராசா அடிகளார் கடந்த சில காலங்களாகக் காட்டி வரும் ஈடுபாடு கவனத்தை ஈர்ப்பதாய் அமைகின்றது.

அன்புராசா அடிகளார் இலக்கியத்தின் பல பரிமாணங்களிலும் தமது காத்திரமான படைப்புகளால் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர். நாட்டுக் கூத்துக் கலையில் இவர் நடாத்தி வரும் ஆய்வுகளும் இலக்கிய ஆய்வு அரங்குகளிலும் மாநாடுகளிலும் காட்டி வரும் ஈடுபாடுகளும் பிரமிக்க வைப்பன. இத்தனை இலக்கிய செயற்பாடுகளையும் தனது திருச்சபை சார்ந்த பணிகளுடனேயே அடிகளார் முன்னெடுத்து வருகிறார் என்பது உண்மையில் வியத்தற்குரியது. இவைகள் அனைத்திற்கும் மேலாக இளைஞர்களின் எதிர்கால நலன் நிமிர்த்தம் பயிற்சிப்பட்டறைகளையும் அடிகளார் ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றார் எனவும் அறியக்கிடைக்கின்றது.

தற்போது ஈழத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் அனைத்து அச்சு ஊடகங்களிலும் எழுதி வரும் அடிகளாரின் முதல் அறுவடை யாக **2001** இல் வெளியாகிய "மறைப்பணி புரிந்த மாமேதை" அமை கிறது. தொடர்ந்து தன் சமூக விமர்சனம் தொடர்பான கட்டுரை களைத் தொகுத்து "திருப்பத்திற்கான தேடல்கள்"*(2013)*, "அதிர்வுகள்-*01*"*(2014)*, "அதிர்வுகள்-*02*"*(2018)*, "அதிர்வுகள்-*03*"*(2020)* ஆகிய மகுடங் களில் பனுவல்களாக ஆவணப்படுத்தினார். சிறுவர் இலக்கியம் என்ற வகைமையில் இவரது முதலாவது வெளிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணர்வாக "சிறகடிக்கும் சிட்டுகள்"(2016) அமைகிறது. இந் நூலுடன் அதற்கான இறுவட்டையும் அவர் இணைத்திருந்தார். 2016 ஆம் வருடத்திற்கான வடக்கு மாகாணத்தின் இலக்கிய விருதினையும் அந்நூல் வென்றிருந்தமை ஈண்டு பதிவு செய்யத்தக்கது. இந்நூலின் நீட்சியாக அடுத்த ஆண்டிலேயே "வாழத்துடிக்கும் வடலிகள்"(2017) எனும் தொகுதியினையும் அரங்கேற்றினார் அன்புராசா அடிகளாரின் பரந்த பார்வைக்குச் சாட்சியாக 2018 இல் வெளியான "மனுவுக்கு மனு" கவிதைத் தொகுதி திகழ்கிறது.

குழந்தைகள் கட்புல தரிசனத்துடன் கூடிய கதைகளையே கூடிய விரைவில் கிரகித்துக் கொள்வர். வர்ணப் படங்களுடன் கூடிய வித்தியாசமான கதைகளிலேயே அதிக நாட்டங் கொள்கின்றனர். புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் புத்தாக்கங்களையுமே அவர்களது புலன்கள் தேடுகின்றன. அந்த வகையில் சிறுவர்களின் உளவியல் அறிந்து அவர்களது எதிர்பார்ப்பிற்கு அமைவாக அடிகளார் தமது அடுத்தடுத்த நூல்களை வெளிக்கொணரலானார். இம்முயற்சி யில் முதலாவதாக "அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்" எனும் நூலைப் படைத்தார். 2018 இல் வர்ணப்படங்களுடன் வெளியான இந்நூல் சிறார்களின் கட்புலத்திற்கு பெரு விருந்தாய் அமைந்தது இதன் ஒரு தொடர்ச்சியாக "கொடுத்து மகிழ்வோம் பாதுகாத்துக் கொள்வோம்" நூல் 2019 இல் வெளியாயிற்று.

இவ்வாறாக, குழந்தைகளை வாசிக்க, சிந்திக்க தூண்டத்தக்க இலக்கியப் படைப்புகளை வர்ணக்காட்சிகளுடன் கூடிய நூலாக வெளிக்கொணரும் அன்புராசா அடிகளார் அண்மையில் அறுவடை செய்த நூலே "அண்ணன் ஆமையும் தம்பி முயலும்" என்பதாகும். சிறு வயதில் சகலரும் கேட்டுக் களிப்புற்ற இப்பாராம்பரியம் மிக்க கதை யினை மீள் வாசிப்பிற்கு உட்படுத்தி, மாற்றி யோசித்து அதன் முடிவை, சிறுவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாற்றியமைத்ததிலேயே தான்; அடிகளார் எடுத்துப் பேசத்தக்கவராகிறார். வண.அன்புராசா உதாராணப்படுத்தி நிற்கும் இத்தகு நிலைமாற்றமானது முற்றிலும் சிறுவர்களின் இரசனை மாற்றம் சார்ந்தது எனலாம்.

அடிகளாரின் மறுவாசிப்பிற்குள்ளாகி மாற்றம் பெற்றிருக்கும் கதை பின்வருமாறு அமைகிறது; அன்றொருநாள், ஓட்டப்பந்தயத் துக்கு முயல் ஆமையை அழைத்தது. "உன்னோடு ஓட என்னால் முடியுமா? நீ தான் மிக விரைவாய் ஓடி, முதலில் வருவாய்!" என ஆமை முயலிடம் கூறியது. "எதற்கும் ஓடிப்பார்ப்போம் வா!" என முயல் மீண்டும் அழைத்தது. "அப்படியானால், நீச்சல் போட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் நீ வர வேண்டும்!" என ஆமை தன் எண்ணத்தை முயல் முன் வைத்தது. நீச்சல் போட்டிக்கு முயலும் சம்மதித்தது. முதலில், ஓட்டப் பந்தயம் தொடங்கியது. முயல் மிக வேகமாக ஓட ஆரம்பித்தது. சில நிமிடங்களில் குறித்த இலக்கினை அது அடைந்தது. வெற்றி பெற்ற மகிழ்வில் மர நிழலின் கீழே அது படுத்து ஓய்வு எடுத்தது. பல மணித்தியாலங்களின் பின்னே, ஆமை அவ்விடம் வந்து சேர்ந்தது. ஆமையால் தன்னை வெற்றி கொள்ள முடியாது என்ற மனநிலையில் முயல் இருந்தது. "என் பாராட்டுக்கள் தம்பி முயல். நீ ஓடுவதில் வல்லவன் சரி, இப்போது நீச்சல் போட்டியைத் தொடங்குவோமா?" என அண்ணன் ஆமை, தம்பி முயலை அழைத்தது.

சம்மதித்த தம்பி முயல், அண்ணன் ஆமையுடன் கடற்கரைக் குச் சென்றது. கடலின் அலைகளைப் பார்த்த தம்பி முயல் பயந்து போனது. "இந்தக் கடலில் என்னால் நீந்த முடியாது" எனத் தன் இயலாமையைத் தம்பி முயல் ஒப்புக் கொண்டது. கடலில் இறங்கிய அண்ணன் ஆமை நீந்தி, நீராடிச் சுழியோடி மகிழ்ந்தது. கரையை அடைந்த அண்ணன் ஆமை, "உணர்ந்தாயா தம்பி? ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு திறமைகள் உண்டென்பதைத் தெரிந்து கொள்வோம். நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு துறைகளில் கெட்டித்தனம் உடையவர்கள். பறப்பதற்குப் பாம்பையும் ஊர்ந்து செல்லப் பறவையையும் நடப்பதற்கு மீனையும் கேட்கலாமா?" என்றது அண்ணன் ஆமையின் நல்ல மனதினையும் பரந்த அறிவையும் அனுபவத்தையும் உயர்ந்த எண்ணத்தையும் தம்பி முயல் பாராட்டியது.

ஆமையை விட முயல் கெட்டித்தனமானது அல்லது ஆமையிடம் முயல் தோற்றுப்போனது போன்ற பார்வையில் மாற்றத்தை வேண்டிப் புனையப்பட்ட புதிய கதை இது. ஆமையை விட முயல் கெட்டித்தனம் மிக்க தாய் இருந்தாலும் ஆமையிடமும் அபாரமிக்க ஆற்றல்கள் உண்டு. ஆதலால் "எவரிடமும் எவரும் தோற்றுப்போவது கிடையாது" என்பதனை குழந்தைகள் மனதில் விதைக்க வைக்கும் அற்புதமான புனைவு இது. "எல்லோரிடமும் தனித்துவமான ஆற்றல்கள் உண்டு. அதனை அந்தந்த துறைகளில் வல்லவராக அவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். உன்னதங்களை வெளிப்படுத்த முயலவேண்டும்!" என சிறுவர்களின் உள்ளங்களில் பசு மரத்தாணிபோல் பதிய வைக்கிறது. இப்புதிய நோக்கு. மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களை இலக்கு வைத்தே இந் நூல் எழுதப்பட்டி ருப்பினும் அனைத்துச் சிறார்களுக்கும் உகந்ததொன்றாகவே திகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. பாரம்பரியமாக பாட்டன், பாட்டி சொல்லி வந்த கதைகளை சிறுவர்களின் சிந்தனையைக் கிளறத்தக்க வகையில், அதனைப் புதியதோர் கதையாக மாற்றியமைத்த முறைமை அடிகளாரின் பிரக்ஞை வழி வெளிப்பட்டு நிற்பதிலேயே இக்கதை முக்கியத்துவம் மிக்கதொன்றாகின்றது. சிறார்களது இலக்கியத்தில் நிகழ்ந்ததொரு பாய்ச்சலாகவும் இதனைக் கொள்ள முடிகிறது. சிறுவர்களது மனோ பாவத்தை தம்முன் உள்ளகப்படுத்தி, அதிலிருந்து அவர்களுக்கு இசைவானதை வெளிக்கொணர்வதென்பது பாரியதொரு சவால் எனலாம். உளவியல் பற்றிய பிரக்ஞை மிக்கவராக இருப்பதற்கும் மேலாக அன்பே உருவாகவும் அடிகளார் விளங்குவதாலேயே அத்தகு பாரிய சவால்களையெல்லாம் எளிதில் அவரால் எதிர்கொள்ள முடிகிறது.

அதற்கும் அப்பால் சிறுவர் மனதை விட்டகலா வண்ணம் அவர்களுக்கு அவ்விலக்கியங்களை எடுத்துக்கூறவும், புதிய சிந்தனை களுடன் அமரத்துவமுடையனவாக இலக்கியங்களைப் படைக்கவும் முடிகிறது. அழகிய, வண்ணச் சித்திரங்கள், சின்னச் சின்ன வசனங்களில் சிறுவர்களுக்குப் புரியும் வகையில் கதையினை எடுத்துச் சொல்லும் முறைமை, கைக்கடக்கமான நூலின் அமைப்பும் முதலானவற்றுடன் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் வீச்சான அணிந்துரையாவும் நூலிற்கு பெறுமதி சேர்த்துள்ளன.

சின்னஞ் சிறுவர்களுக்கு மிக உகந்த நூல் இதெனலாம். சிறுவர் தொடர்பான இத்தகு புத்திலக்கியங்களைத் தொடர்ந்தும் வண செபமாலை அன்புராசா அடிகளார் படைத்து வெளிக்கொணரல் வேண்டும். அவையாவும் எமது சிறார்களைக் களிப்பூட்டுவதற்கும் அப்பால் அவர்களது சிந்தனைகளை வளப்படுத்தத் தக்கனவாகவும் அமைதல் வேண்டும்.

- தினக்குரல் : 05.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீட்சணமாக ஒலித்திருக்கும் தாட்சாயணியின் "ஒன்பதாவது குரல்"

உதவி அரச அதிபர்களாக, பிரதேச செயலர்களாக, அரச அதிபர்களாக இலங்கை அரச நிர்வாக சேவையில் அங்கம் வகித்து, ஈழத்தமிழ் இலக்கியத்தில் ஈடுபட்ட ஆளுமைகள் ஏராளமானோர் உளர். இவ் வகையில் இலங்கையர் கோன் எனும் சிவஞானசுந்தரத்திலிருந்து ஆரம்பித்தால் செங்கை ஆழியான், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன், உடுவை எஸ்.தில்லை நடராஜா, து.வைத்திலிங்கம், ஜுனைதா ஷெரீப், வை.அகமது, நற்பிட்டிமுனை பளீல், சிதம்பரபத்தினி என இவர்களைப் பெரும் பட்டியலேயிடலாம். இந்த முறைமையின் ஒரு கனமிகு தொடர்ச்சியாக வலி.மேற்கு சங்கானைப் பகுதியின் பிரதேச செயலராகப் பணிபுரியும் தாட்சாயணி எனும் புனை பெயரில் புகழ் பெற்ற திருமதி பிரேமினி பொன்னம்பலத்தினையும் (முன்னர் சபாரத் தினம்) தற்போது இயைத்துக் கொள்ளலாம்.

தனது பதின்ம வயதிலிருந்தே அசாதாரணமான ஆற்றலுடன் இலக்கிய ஊழியம் புரிந்து வரும் தாட்சாயணி இற்றை வரை எண்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். "ரங்கநாதனும் ரஞ்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரேராவும்", இலண்டன் பூபாளராகங்கள் போட்டியில் முதல் பரிசு பெற்ற "பொறி" போன்றன ஆரம்ப நாட்களில் இவரை உயர்த்திப் பிடித்த கதைகள் எனலாம். ஞானம் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற "ஒரு மரணமும் சில மனிதர்களும்"(2005), "இளவேனில் மீண்டும் வரும்"(2007), "தூரப்போகும் நாரைகள்"(2008), "அங்கையற் கண்ணியும் அவள் அழகிய உலகமும்"(2011) போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் "கடவுளோடு பேசுதல்"(2009) எனும் ஆன்மீகம் சார்ந்த உரைநடை நூலொன்றுமாக மொத்தம் ஐந்து நூல்களை ஏலவே தாட்சாயணி அறுவடை செய்துள்ளார். இவற்றுள் பின்னைய நான்கு நூல்களம் கொழும்பு, மீரா பதிப்பக வெளியீடுகளாகும்.

"இளவேனில் மீண்டும் வரும்" எனும் இவரது நூல் வட மாகாண சாகித்ய விருதினைத் தனதாக்கிக் கொண்டது. "அங்கையற் கண்ணியும் அவள் அழகிய உலகமும்" தேசிய சாகித்ய விருதின் இறுதிச் சுற்றிற்குத் தேர்வானது. இவ்வாறாக 2005 முதல் 2011 வரையிலான ஏழாண்டுகளில் இவர் ஏற்படுத்திய அதிர்வானது தமிழில் எழுதும் முதல் தர எழுத்தாளர்களுள் இவருக்கு அதிமுக்கிய இடத்தைப் பெற்றுக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

எட்டுவருட இடைவெளியின் பின்னர் தனது ஆறாவது நூலாக "ஒன்பதாவது குரலினை" அண்மையில் ஜீவநதி பதிப்பகத்தினூடு வெளிக் கொணர்ந்திருக்கும் தாட்சாயணி, நூலின் முன்னுரையில் "இத்தகு மிக நீண்ட மௌனம் எழுத்தின் காத்திரத் தன்மைக்கு வழி வகுக்க வல்லது" என்கிறார். அவர் கூறியதை மெய்ப்படுத்தி பல வழிகளிலும் நினைவுகளைக் கிளறத்தக்க பதினைந்து படைப்புகளைத் தாங்கி தீட்சணமாகவே ஒலித்திருக்கிறது அவரது ஒன்பதாவது நூல். இத்தொகுதியின் பெரும்பாலான கதைகள் 2011, 2012 இல் எழுதப்பட்டு அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகை களில் பிரசுரங் கண்டவை. போர் முடிவுக்கு வந்த ஓர் சில ஆண்டுகளில் எழுதப்பட்டதால் போரின் உக்கிரத்தினையும், அதனை எதிர் கொண்ட மக்களின் இன்னல், இடிபாடுகளையும் இக்கதைகளின் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆளில்லா வீடுகளில் மதிலுக்கு மேல் மூன்றடி உயரத்திற்கு தகரங்கள் அடிக்கப்பட்டு கேற் அருகில் மண் அணை கட்டி காவலரண் ஏற்பட்டு உள்ளே பெரிய வேலைப்பாடுகள் நிகழ்ந்து வீடே உருமாறிப் போகும் போராளிகள் காலத்து நிகழ்வு களையும், பொழுது விடிந்ததும் இன்றைய நாளுக்கான பலி யார் யாரோ என ஏங்கிய அகோர ஷெல்லடிக் கணங்களையும், பிள்ளக்கு நிகழ்ந்த கதி தெரியாது, "அவன் இப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பு முகாமிலை" என்ற நம்பிக்கையில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது கோயிலுக்குச் சென்று கற்பூரம் கொழுத்திச் சுற்றிக் கும்பிடும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளையும் மீள் வாசிப்பினூடாக மீண்டும் ஒரு முறை காட்சிப்படுத்தியுள்ளார் தாட்சாயணி.

தனிமனித எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள், மௌன ஓலங்கள் பற்றிப் பேசும் எஞ்சிய கதைகளிலும் களத்தையும், கதை மாந்தரையும் நேர்மையுடனும், இயற் பண்பு குன்றாமலும் இயக்க பூர்வமாக எடுத்துக் காட்டும் தாட்சாயணியின் பண்பு மலைக்க வைக்கின்றது.

"ஒரு பிள்ளையாரின் கதை" எனும் முதற்கதை பிள்ளையார் சுழியாக அமைந்து தொகுதிக் கதைகளைத் தரிசிக்க வழிவிடுகின்றது. கண்டி வீதிக்கு அண்மையில் கைதடியில் பனை வள ஆராய்ச்சி நிலையத்தி ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்து, ஆடியசையும் திரைச்சீலையூடாக வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பிள்ளையாருக்கு, ஊர் நடப்புகள், நிகழ்வுகள் எவையுமே தெரியவில்லை. எல்லாவற்றையும் அறிவதற்கு ஊரை ஒரு சுற்று சுற்றிவர வேண்டும் போலிருக்கிறது பிள்ளையாருக்கு. "எல்லாரையும் விடுவித்த பிள்ளையாரை விடுவிக்கப்போவது யார்?" என தாட்சாயணி இறுதியில் கேட்கும் கேள்வியில், அவர் சொல்ல மறைத்த பல கதைகளும் உண்டு.

"ஒன்பதாவது குரல்" எனும் இந்நூலின் மகுடக் கதையே உச்சந்தொட்டு இந்நூலிற்கு அணி சேர்த்திருக்கிறது எனலாம்.

"என்ரை மூத்தவன் சந்திரன் இந்தியாவிலை, அடுத்தது பொடிச்சி வசந்தா வவுனியாவிலை, இன்னொருத்தி பவிதா கிளிநொச்சியிலை. இவை எல்லாரும் கட்டிக் குடும்பமா இருக்கீனை. அடுத்தவன் கோகுலன் முள்ளி வாய்க்காலிலை மோசம் போட்டான். இன்னொருத்தன் கண்ணன் மூண்டு "ஏ" எடுத்தவன், இரணைப் பாலையிலை அவனைச் சாகக்குடுத்தன். மற்றவன் இளங்கோ தடுப்பிலை இருக்கிறான். இஞ்சை என்னோடை நிரூபன், நித்யா, புவனா எண்டு மூண்டு பிள்ளையள் படிக்குதுகள்" என குடும்ப விபரம் கேட்டு வந்த வெளிநாட்டு நிறுவனக்காரருக்கு பதிலளித்துக் கொண்டிருந்தாள் முள்ளிவாய்க்காலிலிருந்து மீண்டு வந்த பாக்கியலட்சுமி.

"உங்களுக்கு எத்தனை பிள்ளையளம்மா? முதல்ல எட்டு எண்டியள். இப்ப ஒன்பது பேற்றை கணக்குச் சொல்லுறியள்" எனக் குறுக்கிட்டாள் வந்தவர்களுள் வாட்டசாட்டமான ஒருத்தி

"ஒன்பது" அவளுக்கென்ன மனக்குழப்பமோ எனத் தோன்றிற்று அவர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப எட்டெண்டியள்"

"நான் பெத்தது எட்டுத்தான். பெத்தா மட்டுமே பிள்ளை? வளர்த்தாப் பிள்ளையில்லையே? என்ரை மனிசன் என்னை விட்டுட்டுப்போனவுடனை நான் 'அவங்கட' சமையல் அறையிலை கொஞ்சநாள் வேலைக்குப் போனனான். அப்ப அங்கை அவன் அதுதான் இளங்கோ நிண்டான் கிழிஞ்ச சாரத்தோட. பாவம் பொடியன் ஏதோ பசியிலை களவெடுத்துப் போட்டான் எண்டு பணிஷ்மெண்டாம். தாய் தேப்பன் இல்லாத பொடி வேறை என்ன செய்யும்? என்னோடை வாறியோ எண்டன் வந்திட்டான். அதுக்குப் பிறகு அவனும் என்ரை பிள்ளைதான். எட்டுப் பிள்ளையளின்ரை குரல் எனக்கு எப்பிடிக்கேட்குதோ அப்பிடித்தான் அவன்ரை குரலும் எனக்கு ஒன்பதாவதாக் கேட்குது"

"இப்ப அவன் எங்கை?"

"அதுதான் அப்பவே சொன்னனே. அவன் தான் இளங்கோ, இப்ப தடுப்பு முகாமிலை. அவன் விடுபட்டு சுகமா வரோணுமெண்டு தான் இப்பவும் கோயிலுக்குப் போய் கும்பிட்டுட்டு வந்தனான்"

என்ற வரிகளுடன் கதையினை முடிக்கிறார் தாட்சாயணி. அக் கணத்திலிருந்துதான் ஆயிரமாயிரம் கதைகள் வாசகர் நெஞ்சத்தி லிருந்து கிளர்ந்தெழுகின்றன. தான் பெற்ற பிள்ளைகளுக்கே அடுத்த வேளை சோற்றுக்கு அல்லாடும் ஒரு அபலை இன்னொரு பிள்ளை யையும் தத்தெடுத்த தோடு, தடுப்பிலிருக்கும் அந்தப் பிள்ளையின் விடுதலைக்காக அல்லும், பகலும் கடவுளிடம் வேண்டித் திரியும் பாந்தம் மெய் சிலிர்க்க வைக்கின்றது.

தெய்வத்தாயாக உயர்ந்து நிற்கும் பாக்கிய லட்சுமி எனும் பாத்திரப் படைப்பும் போராளிகளையோ அல்லது எதிர்த்தரப் பினரையோ சாராது நடுவுநிலை நின்று கதையினை தாட்சாயணி நகர்த்திய முறைமையும், கையாண்ட மொழிநடையும் புதியதோர் உணர்திறனைத் தந்து தொகுதியின் மகுடக்கதையாக மட்டு மன்றி உச்சம் பெற்ற கதையாகவுந் திகழ்ந்து ஒன்பதாவது குரலினை ஓங்க வைத்திருக்கின்றது.

தொகுதியில் குறிப்பிடத்தக்க மற்றுமோர் கதையாக "எல்லாப் பாதையிலும் முட்கள்" திகழ்கிறது. அண்ணன்கள் இருவரும் பிரான்சுக்கும், சுவிசுக்கும் புலம் பெயர்ந்து போனதில் அக்காவை ஊருக்குள் கட்டிக் கொடுக்க முடிந்தது. கொழும்புக் கென்று போன தம்பி வன்னியைத் தாண்டியதாகத் தெரியவில்லை. பின்னர் அதை நினைத்தே அம்மாவும் வருத்த காறியாகிவிட்டாள். அம்மா பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து விடுவாள் என அவள் அம்மாவுடனேயே இருந்து விடுகிறாள்.

உள்நாட்டு வரனுக்காக சம்மந்தங்கள் பேசி வருகின்றன. எதுவுமே பொருந்துவதாக இல்லை. குறிப்புப் பொருந்தினால் சீதனம் பிரச்சினையாகிவிடுகிறது. இச் சந்தர்ப்பத்தில் தான் விநோதன் குறுக்கிட்டான். அவன் இவளிடம் சின்ன வயதிலிருந்து பாடங் கேட்டுப் படிக்க வந்து கொண்டிருந்தவன். இவளை விட நாலு வயது குறைவு. ஒரு நாள் திடீரென அவளை விரும்புவதாகச் சொன்னான் சட்டென்று அனல் துண்டுகளைக் கொட்டினாற் போல அதிர்ந்து போனாள் அவள். நேற்றுவரை ஷிரோமியே கதியென்று கிடந்தவன் இன்று இப்படிச் சொன்னதும் கடும் மன உளைதலுக்கு உள்ளானாள் அவள்.

"சீ"... யென வெறுத்துப் போயிற்று எல்லாம்...

அண்ணாக்களிடம் சொல்லி வெளிநாட்டில் வரன்கள் பார்க்கும் படி அக்காவிடம் கூறினாள். "அம்மாவுக்காக ஊரை விட்டுப் போகக்கூடாதென்றிருந்த அவள் அம்மாவை விட்டு ஒரேயடியாகத் தூரம் போகப் போகிறாள்", என இக்கதையை முடித்து வைக்கிறார் தாட்சாயணி.

ஒரு பிள்ளையைப் போல அந்த வீட்டில் உலவி அவர்களுக்கு அன்பு காட்டிய விநோதனிற்காகவும், அவனையே நம்பியிருக்கின்ற ஷிரோமியின் எதிர்காலத்திற்காகவும் அவள் எடுத்த அதிரடியான முடிவு, நிம்மதிப் பெருமூச்சொன்றுடன் வாசகர்களை நிமிர்ந்து உட்காரவைத்து விடுகிறது. நூலின் அணிந்துரையில் சாகித்ய ரத்னா தெணியான் குறிப்பிடுவது போலவே, சமதரையில் ஆற்றுநீர் ஓடுவது போன்ற மொழி ஓட்டம் இக்கதைக்கு அணிசேர்த்து இலகு வாசிப்பிற் குள்ளாக்கியுள்ளது.

வன்னியில் மணமாகி ஆறெழு மாதங்களுக்குள் குண்டு வீச்சுக்குள்ளாகி கணவனை இழந்த இளம் கைம் பெண் யாழ்ப்பாணம் வந்த பின்னர் உயர்தரக்கல்வியை முடித்து கல்விக் கல்லூரியில் சேர விரும்புகிறாள். ஆனால் அவள் திருமணமாகாதவள் என அப்பகுதி கிராம சேவகர் நற்சான்று வழங்கி உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அவளது எதிர்கால வாழ்வினை நினைத்து அப்பணியினைத் துணிந்து செய் கின்றார் அக்கிராம சேவகர். இத்தகு அலுவலர்கள் மீதான பொது வாகவேயுள்ள எதிர்மறையான அபிப்பிராயத்தினை அடியோடழித்து அவர்களும் மனிதாபிமானம் மிக்கவர்கள் தான் என்பதனை "பொய்மையும் வாய்மையிடத்து" எனும் கதைமூலம் தாட்சாயணி இனங்காட்டியுள்ளமை சமுதாயத்தில் மேற்கிளம்பி வரும் மாறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் ஒரு குறியீடாகக் கொள்ளத்தக்கது.

அலுவலகங்களில் போடப்படும் "சிவத்தக் கோடு" ஏற்படுத்தும் அசௌகரியத்தினையும், அலுவலர்களை குறிப்பாக, பெண்களை அது எவ்வாறு அச்சுறுத்துகின்றது என்பதினையும் "சிவப்புக்கோடு" எனும் சிறுகதை மூலம் மிகவும் இயல்பானதாகவே தாட்சாயணி சித்திரிக்க முற்படுகின்றார்.

சாருமதி எனும் பள்ளித்தோழியின் மகன் விபத்திற்குள்ளாகி கோமாநிலையில் கிடப்பதும் சாருமதி இனி எக்காலத்திலும் அவளது வீட்டிற்குத் திரும்பி வரவே மாட்டாள் என்ற சேதி, சொல்லொணாத் துயரத்தினையும், ஏக்கத்தினையும் அவளிற்கு அளிப்பதாக பதிவு செய்யப்பட்டிருக்கும் "சாருமதியின் வீடு" சிறுகதைபோராளிகள் குடா நாட்டில் கோலோச்சி நின்ற காலகட்டங்களை கண் முன் கொணர்கிறது.

பிறப்பில் ஆணாயிருந்து, வளர வளர உடலின் சுரப்புகளும், உணர்வுகளும் மாற முடி வளர்ந்து சேலை கட்டி அறுவை சிகிச்சை செய்து முழுதாகப் பெண்ணாக மாறிவிட்ட ராகவியின் ஏக்கங்களை அற்புதமாகச் சித்திரிக்கின்றது "ராகவி ஆகிய நான்" எனும் சிறுகதை "அதெப்படி இவ்வளவு மோசமாக நடிக்க முடிகிறது மனிதர்களால், அவர்களாகவே வந்தார்கள் பழகினார்கள். வந்தது தான் வந்தார்கள், என்னில் மிச்சமிருந்த ஜீவனையும் சேர்த்துச் சூறையாடிக் கொண்டல்லவா போய்விட்டார்கள்?" எனும் ராகவியின் ஆதங்கம் வாசகரினுள்ளும் பல சாதகமான கேள்விகளை எழுப்பி அதிக அழுத்தங்களைப் பெற முனைகிறது.

ஏறத்தாழ ஒரு தசாப்தகால இடைவெளியின் பின்னர் தாட்சாயணியின் ஆக்கங்களைத் தரிசிக்கத் கிடைத்தமை அவரது அடுத்த கட்ட காத்திரமாக இலக்கிய நகர்விற்கான நல்லதோர் ஆரம்பமெனலாம். அவரது காலத்தில் எழுத ஆரம்பித்த அவரது சகாக்களான சாரங்கா, சிவாணி, குமுதினி முதலானோர் போலன்றி தாட்சாயணி தொடர்ந்தும் எழுதுவார் என்ற நம்பிக்கைக்கு ஒரு கால்கோளாகவும் இந்நூலினைக் கொள்ளலாம்.

போராட்ட ஆரம்ப காலம் முதல் நந்திக்கடலில் அது முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாள் வரையிலான காலகட்டத்தினை உணர் முறைமை மாற்றங்களுடன் சித்திரித்ததற்கும் அப்பால் மொழியியல் வழிநின்று தன் ஆக்க இலக்கியப் பாதைகளை அகலப் படுத்தி உன்னத படைப்புக்கள் உருவாகுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியதிலும் தாட்சாயணியின் ஒன்பதாவது குரல் தீட்சண மாகவே ஒலித்திருக்கிறது என மிகத் தாராளமாகவே கூறலாம்.

-தினக்குரல் : 19.01.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனைகதை வெளியில் புதிய எல்லையினைத் தொட்டு நிற்கும் பிரமிளா பிரதீபனின் "விரும்பித் தொலையுமொரு காடு"

சிறுகதை இலக்கியமானது பாய்ச்சலுக் குட்பட்டு அடுத்தகட்டத்தினை எய்துவதற்கு கதை சொல்லப்படும் முறைமை, கதைகளை உணர்ந்து கொள்வதில் ஏற்படும் மாற்றம் ஆகிய இரண்டுமே முக்கிய உந்துவிசை களாகின்றன. புதிய விடயமொன்றினை புதிய மொழியில் கூறும்போது, அக் கதாசிரியர் புதிய உலகத்தினையே வாசகர் முன்வைப்பவர் ஆகிறார். தனித்துவமானதொரு மொழி நடையும் அவ்வெழுத்தாளருக்கு கைவரப் பெற்றிருப்பின், அவர் வீரியமிக்க தனது எழுத்தின் வழியாக வாசகர் மனதிற்குள் நிரந்தரமாகவே சிம்மாசனம் அமைத்து விடுவார். நிறைந்த வாசிப்பும், அதன் விளைவா லான உலக இலக்கியங்கள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களின் பரீட்சயமும், பிரக்ஞையும் மிகுந்த எழுத்தாளர்களே எக்காலத்தும் தமது எழுத்தின் வசீகரத்தாலும், வீரியத்தாலும் வாசகனைத் தம்பால் இழுத்து அணைத்துக் கொள்ளும் வல்லமை பெற்றவராய் விளங்குவர்.

பத்து அல்லது பதினைந்து ஆண்டு களுக்கு முன்னர் "பத்தி", "இன்னாம்பி", "பீலிக்கரை", "கோடிப் பக்கத்தில் ஒரு பலா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சுமாரான கதைகளையே எழுதி வந்த பிரமிளா பிரதீபன், இன்று "ஜில் ப்ராட்லி", "மாட்டியா", "அது புத்தனின் சிசுவல்ல", "அல்லிராணி" போன்ற உலகத்தரம் மிக்க உன்னத கதைகளை எழுதுமளவிற்கு பரிணமித் துள்ளாரெனில் அவரில் ஏற்பட்டுள்ள புதிய உணர்வு முறையும், சிந்தனை எழுச்சியுமே காரணங்களாகின்றன. மலையகம் எனும் ஒரு வட்டத்தினைத் தாண்டி சர்வதேசிய மெங்கும் பிரமிளா இன்று பரவலாகப் பேசப்படுகின்றார் என்றால் அதற்கு அவரது நுட்பமான எழுத்துகளே பின்னணியாய் அமைந்ததெனலாம்.

தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் மிகவும் அரிதாகவே பயிலப்படும் உத்தியில் எழுதப்பட்ட பிரமிளா பிரதீபனின் பதினொரு கதைகள் அடங்கிய "விரும்பித் தொலையுமொரு காடு" எனும் தொகுப்பில் உள்ளடங்கியுள்ள கதைகளில் பெரும்பாலானவை வாசகரை தம்முள் ஆழ்த்தி வைத்திருக்கும் வல்லமை கொண்டவை. இவை யாவும் உதிரிகளாக அவ்வப்போது ஞானம், ஜீவநதி, சிறுகதை, மஞ்சரி, யாவரும், வனம், கனலி, நடு போன்ற சஞ்சிகைகளில் வாசிக்கப்பட்டவைகள்தான். ஆனாலும் நூலில் அவற்றினை மீள் வாசிப்பிற்கு உட்படுத்தியபோது பிரமிளாவின் பரந்த வாசிப்பும் ஆழ்ந்த தேடலும், ஆங்கில அறிவும், உலக இலக்கியங்கள் பால் கொண்ட ஆர்வமும் அதிகபட்சமாகவே அவரது கதைகளில் பிரதிபலித்திருந்தமையை நன்கு அவதானிக்க முடிந்தது.

"பீலிக்கரை"(2007), "பாக்குப்பட்டை"(2010) போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் "கட்டுப்பொல்"(2017) எனும் நாவலினையும் ஏலவே வெளிக்கொணர்ந்திருக்கும் பிரமிளாவுக்கு "விரும்பித் தொலையுமொரு காடு"(டிசம்பர் 2021) நான்காவது பனுவலாகும். மலையகத்திற்கு அப்பாலும் அவரது பார்வை அகண்டு விரிகிறது என்பதனை மலையகத்தின் அடையாளங்களேது மற்ற நூலின் மகுடத்திலேயே அவர் உணர்த்தியிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

இந்நூலில் மாய வெளிகளினூடே தான் மீட்டெடுத்தவற்றை யும் தன்னை நெருடிக் கொண்டிருக்கும் ஒரு சில காட்சிகளையுமே பிரமிளா சிறுகதையாக்க முனைந்திருப்பார். தனித்துவமிக்க தன் மொழியாடலாலும், காட்சிப்படுத்தலாலும் தனக்கான அந்தக் கற்பனை வெளிக்குள், விசித்திர உலகினுள் வாசகரையும் உடனழைத் துச் சென்று அவர்களுக்கும் அற்புதமான அவ்வனுபவத்தினை தொற்றவைத்திருப்பதில் இந்நூலின் வழியாக பிரமிளா பிரதீபன் அடைந்திருக்கும் வெற்றியே, தமிழின் புனைகதை வெளியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தகட்ட நகர்விற்கு அவரை இட்டுச் சென்றிருப்பதோடு, அவருக்கானதொரு தனி அடையாளத்தையும் தேடித் தந்திருக்கிற தெனலாம்.

ஈழத்து எழுத்தாளர்களுள் இத்தகு தனித்துவமான மொழிநடை மூலமும் கதை கூறும் முறை வாயிலாகவும் வாசகர்களை கட்டிப் போட்டவர்கள் ஏலவே சிலருளர். இவர்களுள் அ.முத்துலிங்கம் பிரதானமானவர். பிதாமகராகக் கொள்ளத்தக்கவர். இவ்வரிசையில் அணிவகுத்து நிற்கும் அடுத்த சிலருள் ஆசி கந்தராஜா, ரஞ்சகுமார் போன்றவர்கள் எடுத்துச் சொல்லத் தக்கவர்கள். தற்போது இந்தப் பட்டியலில் பிரமிளாவும் இடம்பிடித்துள்ளார்.

இத்தொகுதியில் உள்ளடங்கியுள்ள பதினொரு கதைகளும் வெவ்வேறு துய்ப்பினைத் தருவன. முன்னொருபோதும் தரிசித்திராத புதிய கதை மாந்தர் களத்திற்கு அழைத்துச் செல்வன. "ஜில் ப்ராட்லி", "மாட்டியா", "நிலி", "அது புத்தனின் சிசுவல்ல", "கமீலே டொன்சி யுக்ஸின் ஜோடித் தோடுகள்" போன்ற பின்புலங்கள் முற்றிலும் புதிதானவை. புலத்தினை மட்டுமன்றி கதை மாந்தர்களை, தொடர் பான பொருட்களை, விடயங்களை பிரமிளா விபரித்துச் செல்லும் முறைமையும் புதிய உலகம் ஒன்றினை உணர்த்தி நிற்பது. இவ் வகையில் இக்கதைகளின் முடிவுகள் தரும் தரிசனம் அலாதியானது. கதைகளின் பரிமாணத்தையும் வசீகரத்தையும் அகலப்படுத்தவல்லது.

பெண்ணின் குரலாகவே பெரும்பாலான பிரமிளாவின் கதைகள் வெளிப்பட்டிருப்பினும் அக்குரல்கள் எழுப்பும் ஒலியானது அவருக்கு முந்திய தலைமுறையில் எழுதிய பெண் பிரமாக்களிட மிருந்தும் முற்றிலும் வேறுபட்டது. அவலமாகவோ அல்லது அபலைகளின் குரல்களாகவோ அன்றி புத்திலக்கியமாக அல்லது புத்தொலியாக வெளிப்பாடு பெற்றுள்ள குரல்கள் பிரமிளாவினது எனக் கூறலாம். பெண்களை முழுமையாகவே அவர் தன் கதைகளில் வெளிப்படுத்தி நிற்கும் அதேவேளை முடிவுகளை எட்டும் விழிப்புணர்வு மிக்கவர்களாகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் அவர்களை அடையாளப்படுத்துவார். அப் பெண்கள் எழுப்பும் வினாக்கள் நியாயம் மிக்கவை. தக்க பதில் வேண்டி நிற்பவை. இலகுவில் புறந்தள்ள முடியாதவை. அல்லிராணி, மாயா (அது புத்தனின் சிசுவல்ல) போன்ற பிரமிளாவின் பாத்திரங்களில் இப் பண்பு தெரியவரும். கதையின் முடிவினை சற்றே விலக்கி வைத்து விட்டு நோக்கின் "ஜில் ப்ராட்லி"யையும் இவ்வகைமைக்குள் கொள்ளலாம்.

ஆண் - பெண் உறவில் உள்ளிருக்கும் உளச் சிக்கல்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமிளா வித்தியாசமாக சித்திரித்திருப்பார். பெண்கள் மீதான பலாத்காரங்களை இந்தளவு எல்லை வரை தரிசிக்க வைக்க முடியுமா என வியக்கும் வண்ணம் தன் கதைகளில் அவற்றினை வெளிப்படுத்தி யிருப்பார். இது தொடர்பில் பிரமிளாவின் நகர்வானது இதுவரை தமிழில் அரிதானதொன்றெனலாம். "ஓரிரவு" கதையில் அவ்விரவு முழுதுமாய் ராசாத்தி படும் அவஸ்தையும் "அல்லிராணி" எனும் கதையில் அக்கதையின் நாயகி பட்டதாகக் கூறும் அவலமும் ஈழத் தமிழ் இலக்கியத்தில் எப்பெண் எழுத்தாளர்களும் சொல்லாத சேதி, செல்லாத பயணம்.

பாலியல் விவகாரங்களை, விரசப்படுத்தாது. விகாரப் படுத்தாது தன் மொழி வழி வெளிக்கொணரும் அல்லது சொற்களில் தேக்கும் பிரமிளா பிரதீபனின் திறமை உண்மையில் அசாதாரண மானது.

"ஓரிரவு", "மாட்டியா" போன்ற கதைகளிலும் முற்றுமுழுதாக "அல்லிராணி" கதையிலும் பிரமிளா இவ் அற்புதத்தினை நிகழ்த்திக் காட்டியிருப்பார். பாலியல் பிரச்சினைகளை, பிறழ்வுகளை இலக்கிய மாக்குவதென்பது கத்திமுனையில் நடப்பதற்கொத்தது. முன்னைய மரபில் எஸ்.பொ, க.சட்டநாதன் போன்றோர் வெற்றிகரமாகவே இதனை முன்னெடுத்திருந்தனர். இந்த வரிசையில் பொருத்தப்படத் தக்க ஒருவராக தற்போது பிரமிளாவும் பரிணமித்துள்ளார்.

இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் பிரமிளாவின் கதை களை வாசித்துக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றுவதற்கு அல்லது அக்கதைகள் மீதான அதிகபட்ச ஆவலைத் தூண்டுவதற்கு அவரது எழுத்துகள் எய்தியிருக்கும் அழகியல் உச்சங்களும் ஒரு காரண மாகிறது. "பகற்கனவு", "ஒரு அரசு மரமும் சில வௌவால்களும்", "உரப்புழுக்கள்" போன்ற தன் மண் சார்ந்த சுமாரான கதைகளைக்கூட அழகியல் மிகுந்த தன் எழுத்து நடையால் தூக்கி நிறுத்தியிருப்பார் பிரமிளா. 2007இல் புரவலர் புத்தகப் பூங்காவால் வெளிக் கொணரப் பட்ட பிரமிளாவின் "பீலிக்கரை" சிறுகதைத் தொகுதியில், அவரை திரும்பிப் பார்க்க வைத்த கதை "பீலிக்கரை". அதையொத்த ஒரு பீலிக்கரையில் தான் "பகற்கனவு" எனும் கதையில் பரிமளமும் குளிக்கப் போகிறாள். அன்று அப்பீலிக்கரையினை வாசகர் கண்முன் கொணர்ந்த பிரமிளாவே பதினைந்து ஆண்டுகளின் பின்னராக இன்று இப்பீலிக்கரையினையும் காட்சிப்படுத்துகிறார். இக்கால இடைவெளி யில் துறைசார்ந்த வீச்சும் வாழ்க்கையின் பன்முக அலகுகள் பால் கொண்ட கவனங்களும் பிரமிளாவிடம் பன்மடங்காய் பெருகியிருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனையும் அழகியல் அம்சங்கள் பற்றி அதிகமாகவே அவர் அறிந்திருப்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இதன் விளை வினையே "பகற்கனவு" கதையிலும் ஏனையவற்றிலும் அவர் தரிசிக்க வைக்கின்றார்

"உரப்புழுக்கள்" கதையில் அனுரவின் அசைவினை, உடல் மொழியினை அவனது ஒவ்வொரு இயக்கத்தினையும் உணர்ச்சிமிகுந்த சித்திரிப்புகளாகவன்றி, தன் மொழிநடைக்குள் சகலவற்றினையும் அடக்கி பிரமிளா விபரிக்கும் பாங்கு உண்மையில் சிலிர்க்க வைக்கின்றது. பிரமிளா பிரதீபனின் ஆளுமைக்குள்ளேயே அவரது மொழிநடை பிரித்துப் பார்க்க முடியாத படி இரண்டறக் கலந்து விட்டிருப்பதையே இது உணர்த்துவதாயுள்ளது. "விரும்பித் தொலையுமொரு காடெனும்" மகுடக் கதையிலும் இப்பண்பே முனைப்பாகவுள்ளது. பண்பாட்டுக் குறியீடுகள் மூலம் புனைகதை படைப்பதற்கு நிறைந்த வாசிப்பும் துறைசார் பிரக்ஞையும் மிக முக்கியம். அதற்கு மேலாக அதீத திறமையும் அவசியமாகிறது. இவை யாவுமே பொருந்தப் பெற்றவராக பிரமிளா பிரதீபன் திகழ்ந்து வருவது மிக்க மகிழ்வைத் தருகிறது. உலகளாவிய தமிழ் புனைகதையின் உன்னத எழுத்தாளர்கள் வரிசையில் பிரமிளாவும் இடம்பெறும் நாள் மிக அணித்தாகவே உள்ளது என்பதையே மொத்தத்தில் "விரும்பித் தொலையுமொரு காடு" எனும் அவரது இச்சிறுகதைத் தொகுதி உணர்த்தி நிற்கிறது எனலாம்.

- தினக்குரல் : 25.9.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனைகதை இலக்கியத்திலொரு புதிய பாய்ச்சல் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் "பணச்சடங்கு"

அறிவியலுடன் உலகளாவிய தனதனுபவங்களையும் கலந்து வித்தியாசமான தளங்களில் நின்று புதிய புனைவு மொழியிலும், உத்திகளிலும் கதை சொன்ன முறைமையில் இன்றைய எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவராக முதற் சிலருள் வைத்துப் போற்றத்தக்கவராக, ஆசி கந்தராஜா திகழ்கிறார். பூங்கனியியல், உயிரியல் தொழிநுட்பத்துறைப் பேராசிரியர், அறிவியல் அறிஞர், விவசாயத் துறை ஆலோசகர், அனுபவமிக்க மின்னியல் ஊடகவியலாளர், எழுத்தாளர் என ஆசி கந்தராஜா பல்துறைகளிலும் பிரகாசிப்பினும் அவரை ஜனரஞ்சகப்படுத்தியது எழுத்தாளர் எனும் அவரது பேராளுமை தான் எனத் துணிந்து கூறலாம்.

எழுத்தாளர் எனும் வகையில் கதைஞராக, புனைவாளராக, நாவலாசிரியராக, கட்டுரையாளராக ஆசி செயலியற்றி வருகிறார். அறிவியலை, குறிப்பாக பூங்கனியியலை முன்னிறுத்தி ஆசி புனையும் கட்டுரைகளில் அறிவியல் சார்ந்த தகவல்கள் அவரது சித்திரிப்பு ஆற்றலுடன் செம்பாதியாய் கலந்திருக்கும். ஆனால் அவரது புனைவுகளிலோ ஆசிரியரின் திறனானது அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரிப்பு ஆற்றலுக்கு அப்பாலும் பல தளங்களிலும் வியாபித்து மானிட உறவு நிலைகளையும் உணர்வுகளையும் அற்புதமான வெளிப்படுத்துவதாக அமையும்.

புனைகதைஞராய் நின்று ஆசி படைத்த இலக்கியங்கள் சர்வதேசிய மாற்றங்களின் போக்கிற் கேற்ப இயைந்திருந்து அவரை ஒரு தவிர்க்க முடியாத எழுத்தாளராக சிறுகதையைப் புத்தாக்கம் செய்யும் பிதாமகர்களில் ஒருவராக நிலை நிறுத்தின எனலாம். அந்த வகையில் "பாவனை பேசலின்றி" **(2000)** "உயரப் பறக்கும் காகங்கள்" **(2003)** போன்ற அவரது சிறுகதைத் தொகுப்புகளும் அதில் உள்ளடங்கியிருந்த கதைகளும் இலக்கியவெளியில் பெரிதும் பேசப்படலாயின. இந்த இரு நூல்களைத் தவிர **2018** இல் ஆசியின் தேர்ந்தெடுத்த சிறுகதைத் தொகுப்பானது "கள்ளக்கணக்கு" எனும் பெயரில் அறுவடையானது. "பாவனை பேசலின்றி" சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான இலங்கை அரசின் இலக்கிய விருதினைத் தனதாக்கியிருந்தமையும், "கள்ளக் கணக்கு" நூலானது தமிழக அரசின் உலகத் தமிழ்ச்சங்க விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கிய விருது என இரட்டை விருதுகளைப் பெற்றிருந்தமையும் இவரது புனைவாற்றலுக்குக் கிடைத்த பேரங்கீகாரங்கள் எனக் கொள்ளலாம். அறிவியல் சார் தகவல்களையும், புனைவின் கூறுகளையும் கலந்து புது வித மொழி நடையுடனும், அங்கதச் சுவையுடனும் தன் கதைகளை அவர் நகர்த்தும் பாங்கு அவருக்கேயுரியது. இப் பண்பினாலேயே, பெரும்பாலான வாசகர்களாலும் விமர்சகர்களாலும் அ.முத்துலிங்கம் அவர்களுடன் ஆசி பொருத்திப் பார்க்கப்படுகிறார்.

ஆசியின் அல்புனைவுகள் அறிவியல் சஞ்சிகைகளுக்கு நிகரானவை. விஞ்ஞானியான போதிலும் வித்துவத்துடன் அவற்றினைப் புனையாது விவசாயஞ் செய்பவர்களாலும், அறிவியல் பிரக்ஞை அற்றவர்களாலும் புரிந்துணரத்தக்க வகையில் தனது கட்டுரைகளை அவர் வடிவமைத்திருப்பார். நீண்ட காலப் பயிர்களை குறுகிய காலத்துள் மகசூல் தரவைப்பது, அயன மண்டலப் பயிர்களை அவுஸ்திரேலியாவிலும் பயிரிட்டு அறுவடை காண்பது, ஒட்டுவைத்தும், பதிவைத்தும் பயிர்களில் மிகுந்த பலனைக் கொள்வது, என பயிர்கள் தொடர்பிலான ஆராய்ச்சிகளையும், பூங்கனியியல் அபிவிருத்தியினையும், இலக்கியமாக்கி அதனைப் பாமரர் வரை கொண்டு சென்றதோடு, அப்புதுவகை இலக்கியத்திற்கு முன்னோடியாகவும் தலைப்பட்டு நிற்பதே ஆசி கந்தராஜா பெறும் முக்கியத்துவத் திற்கான காரணம் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வகைமையில் அமைந்த ஆசியின் "கறுத்தக் கொழும்பான்"(2014), "செல்லப் பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்" (2019) போன்ற அல் புனைவுக் கட்டுரைத் தொகுப்புகள் பரபரப்பாக விற்பனையாகியதும் திருப்பூர் இலக்கிய விருதுகளை தமதாக்கியதும் அவரின் அறிவியல் எழுத்துகளுக்கும் ஆராய்ச்சிக்கும் கிடைத்த பெரு வெற்றி என தாராளமாகவே கூறலாம். இவரது குறுநாவல் முயற்சிகளும் விதந்துரைக்கற்பாலது. புலப்பெயர்விலான உணர் முறைமை மாற்றங்களையும், நிலைமாறும் வாழ்க்கை முறை களையும் ஆசி எனும் புலம் பெயர்ந்த இலக்கியவாதி குறு நாவல்கள் போன்ற தன் புலப்பதிவுகள் வாயிலாக வெளிப்படுத்தும் முறைமை வெகு அற்புதமாகவே அமையலாயின. "திரிவேணி சங்கமம்" எனும் குறுநாவல் இன்றளவும் மனதில் நிலைப்பதற்கு இத்தகு சித்திரிப்பு முறைமையே காரணமாகியது. புலம்பெயர்ந்து வாழும் விடலைகளின் விழுமியப் பிறழ்வினை அந்நவீனத்தில் உயிர்ப்புடன் ஆசி சித்திரித் திருப்பார். இக்குறுநாவலை உள்ளடக்கியதாக வெளிக்கொணரப் பட்ட "கீதையடி நீயெனக்கு" எனும் பனுவலும் 2015 இல் திருப்பூர் இலக்கிய விருதினை வென்றிருந்ததும் மனங் கொள்ளத்தக்கது.

அறிவிப்பாளராக, தொகுப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாள ராக வானலைகளிலும் ஆசி எடுக்கும் அவதாரங்கள் ஒவ்வொன்றும் அபாரமானவை. இந்த வகையில் தாயகம் வானொலியில் இவர் தொகுத்தளிக்கும் "நிலாமுற்றம்" நிகழ்ச்சி நயந்து நோக்கற்பாலது. ரஷ்ய - உக்ரைன் யுத்தம் பற்றிய இவரது தொகுப்பொன்று சில தினங் களின் முன்னர் ஒலிபரப்பான தருணம், அது பலருள்ளும் பதியமாகி யிருந்தது.

ஆசி கந்தராஜாவின் பத்தாவது நூலாக அண்மையில் அறுவடையாகியிருக்கும் "பணச்சடங்கு" ஆசிரியரின் நான்காவது சிறுகதைத் தொகுதியாகும். பரந்துபட்ட விற்பனை வலையமைப்பி னூடு எம்மவர் புத்தகங்களை வெற்றிகரமாக சந்தைப்படுத்தி வரும் குலசிங்கம் வசீகரனின் "எங்கட புத்தகங்கள்" பிரசுராலயமே பணச் சடங்கினை வெளிக்கொணர்ந்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இந்நூலில் பதினைந்து கதைகள் உள்ளடங்கியுள்ளன. இப்பதினைந்து கதைகளையும் ஒருசேர படித்த பின்னர் வாசகனுக்கு ஏற்படும் உணர்வானது உண்மையில் அபரிமிதமானது. தான் அனுபவித்த அல்லது உணர்ந்த புதுவகை அனுபவங்களை தனது பார்வையில் இருந்ததன் படியே கட்டமைத்து அதே வடிவத்துடனேயே வாசகனது தரிசனத்திற்கும் உள்ளாக்க வைக்க ஆசி போன்ற ஒரு சிலரால்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. இத்தகு தன்மையினாலேயே "தமிழில் இந்தவகை எழுத்துகள் இதற்கு முன் இல்லை" என நாஞ்சில் நாடன் போன்றவர் களால் "ஆசி"க்கு அணிந்துரை நல்கி ஆசி வழங்க முடிகிறது.

இப் பதினைந்து கதைகளுள் மூன்று கதைகள் மிக முக்கியமானவை. இவை ஆசிரியரின் சொந்த மண்ணில் நிகழ்வன வாகப் புனையப்பட்டவை. மண்ணிற்கே உரித்தான உரையாடல்களும் சொற்களும் இயல்பாகவே இக்கதைகளில் வந்தமைந்து அணி சேர்த்துள்ளன. "இந்துமதி ஆகிய நான்", "சாது மிரண்டால்", "நரசிம்மம்" ஆகிய இம் மூன்றுள் முதலிரு கதைகளும் மணவாழ்வு மற்றும் பாலியல் பிறழ்வு தொடர்பானவை. "நரசிம்மம்" போரின் விளைவுகளையும் அதன் வழியான அதிர்வுகளையும் முன் நிறுத்திப் பேசுகிறது. நோய்க் கிருமியை தொற்ற வைத்து தன்னை வஞ்சித்த மனைவியை பழிவாங்கும் கணவனைப் பற்றிய கதை "சாது மிரண்டால்". அறிவியல் கற்ற எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பலர் இருப்பினும் அவற்றை புனைகதைகளில் புகுத்தி பொதுசனங்களிடம் எடுத்துச் சென்று சேர்க்கத்தக்க வல்லமையினை ஆசி போன்ற ஒரு சிலரே கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பண்பினை அவர்கள் கொண்டு விளங்குவதாலேயே வாசகர்களாலும் விரும்பி வாசிக்கப்படு கிறார்கள்.

இளைஞர் இயக்கத்தில் இருந்தவர்களுக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நிகழ்ந்த கதி பற்றிய ஒரு சிறுவெட்டு முகமாக "நர சிம்மம்" கதையினைக் கொள்ளலாம். புனிதவதி எனும் வனிதை, இராணுவ முகாம்களில் அனுபவித்த தொடர் பாலியல் பலாத்காரங்களையும் சித்திரவதைகளையும் அதன் விளைவால் தாய்மையுற்று பெற்றெடுத்த தன் குழந்தைக்கு ஒருவித வன்மத்துடன் பெயர் சூட்டுவதையும் மனதை விட்டகலா முறையில் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். புதிய வாழ்விட வெளியில் நின்று கொண்டு, தான் பிறந்த மண்ணில் நிகழ்ந்த போரையும் அதன் பின்னர் நிகழ்ந்த இத்தகு வலிமிகுந்த சம்பவங்களையும் ஆசி நோக்கிய முறைமையே இங்கு பிரதானமாகிறது. மறுபுறமாக ஆயுதக் கலாசாரத்தின் ஆதிக்கம் தனிமனித வாழ்வினை எவ்வாறு சின்னாபின்னமாக்கியது, சீர் குலைத்தது என்பதனையும் மேற்படி கதைகளில் துணிவுடன் ஆசிரியர் பதிவு செய்துள்ளமையும் நோக்கற்பாலது. புலம்பெயர்ந்து வாழும் காரணமாகவும் ஆசிக்கு இத் தைரியம் சாத்தியமாகியிருக்கலாம்.

புலம்பெயர் எழுத்தாளர்களில் ஒரு சாரார் ஈழத்து வாசகர் களுக்கு தம் படைப்புகளின் வாயிலாக புத்தனுபவங்களை தரிசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பர். இன்னோர் வகையினர் வாழ்வியலின் பண்பாட்டுக் கூறுகளை விமர்சனத்திற்குள்ளாக்கும் வகையில் தமது பதிவுகளை முன்னெடுப்பர். தமது அனுபவ வளங்களையெல்லாம் புனைகதைக் குள் கொண்டுவந்து சேர்க்கும் முதலாவது வகையினரையே வாசகர் பெரிதும் உவப்பர். புலப்பெயர்வின் பின்னரான பிறந்த மண் பற்றிய ஏக்கங்கள், கலாசாரம், பண்பாடு, பாரம்பரியங்கள் முதலானவைகள் அந்நியமாவதிலான சிக்கல்கள், புதிய நாடுகளில் வாழ்வினை முன்னெடுத்துச் செல்வதில் முகங்கொடுக்க வேண்டிய சவால்கள், தொழிற் தளப் பிரச்சினைகள், முதியோர் எதிர் கொள்ளும் இடர் பாடுகள் போன்றனவே பொதுவாக புலம்பெயர் இலக்கியங்களின் பாடு பொருளாகின்றன. ஆனால் இவற்றிற்கு அப்பாலும் சென்று அறிவுபூர்வமான அணுகுமுறை, சிந்தனைகளால் தம் சிறுகதைகளை சுவாரசியம் மிக்கதாக சிருஷ்டிப்பதாலேயே ஆசி புலம்பெயர் எழுத்தாளர்களுள் எடுத்துப் பேசத்தக்கவராகிறார். இந்தவகையில் இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் “எதலீன் என்னும் ஹோாமோன் வாயு“ எனும் கதை குறிப்பிடத்தக்க ஒன்றெனலாம்.

“வெயில் சூட்டுக்கு எலுமிச்சங்காயிலிருந்து எதலீன் வெளி யேறியதாலேயே பிஞ்சு வெண்டிக்காய் முத்தியது” என்ற இரசாயன மாற்றத்தை ஒரு சிறுகதையின் அடிநாதமாக, பாடுபொருளாக ஆக்கி கதை நிகழும் காலத்தினை கால் நூற்றாண்டு வரை நகர்த்தத்தக்க, பக்குவமும், முதிர்ச்சியும் ஆசிக்கே உரித்தானது. அதுவே அவரது தனித்துவமுமாகிறது. “பணச்சடங்கு” எனும் கதையில் எம் மண்ணிற்கே உரிய பாரம்பரியம் எவ்வாறு அவுஸ்திரேலியா வரை வியாபித்திருக்கிறது என்பதை அங்கத நடையுடன் ஆசி நாசூக்காக சொல்லியிருப்பது நயத்தற்குரியது. 50 வயதைக் கடந்த தம்பதியினரிடையே “தவணை” தவறியதால் ஏற்படும் இயல்பான பதகளிப்பை நம்பகத் தன்மையுடன் சித்திரித்திருக்கிறது. “சாத்திரம் உண்டோடி” எனும் சிறுகதை. இவ்வாறாகவே “அந்திமம்”, “முகமூடி மனிதர்கள்”, “வேதியின் விளையாட்டு” போன்ற கதைகளிலெல்லாம் ஆசி தானாகவே நின்று கதை சொல்வதால் அவரது மெய்யனுபவங்கள் யாவுமே எமக்குரியதாகி எம்முள் தொற்றிக் கொள்கின்றன.

தொகுதியில் இடம் பெற்றிருக்கும் மூன்றாவது வகையான கதைகளின் களங்கள் ஈழத்து வாசகர்களுக்கு முற்றிலும் அந்நிய மானவை, புதிதானவை. ஈரான், லெபனான், ஜெருசலேம், ஜோர்தான் போன்ற தேசங்களை கதை மாந்தர் களமாகக் கொண்டு இந்த ஆறு கதைகளும் புனையப்பட்டுள்ளன. தொழிலின் நிமித்தமாக அந்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குச் சென்றிருந்த வேளைகளில் அங்கு தான் அவதானித்த வற்றையும், அனுபவித்தவற்றையும் கருப்பொருட்களாக்கி காத்திர மானதாக ஆசி வடிவமைத்த கதைகள் அவை. இந்த வகையிலே அ.முத்துலிங்கத்தின் கதைகூறு முறையின் ஒரு தொடர்ச்சியை ஆசி கந்தராஜா பேணி வருகிறார் எனலாம். "பல நாட்டு மனிதர்களின் அனுபவங்களுடன், விஞ்ஞான அறிவும் ஆசியின் கதைகளை அலங்கரிக்கின்றன" என ஓரிடத்தில் அ.முத்துலிங்கம் கூறியதனை இவ்விடத்தே மனங் கொள்ளல் தகும்.

இவ்வகைமையில் அமைந்த "ஆண் குழந்தை", "காதல் ஒருவனைக் கைப் பிடித்து", "ஆண்சுகம்", "எதிரியுடன் படுத்தவள்", "கையது கொண்டு மெய்யது பொத்தி", "தலைமுறை தாண்டிய காயங்கள்" ஆகிய ஆறு கதைகளுள்ளும் "ஆண் குழந்தை", "கையது கொண்டு மெய்யது பொத்தி" ஆகிய இரண்டும் கவனத்தைக் கோருவனவாக அமைந்துள்ளன. மகப்பேறின்மைக்கும் தொடர்ச்சி யாக பெண் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் பெண்கள் அல்ல பொறுப்பாளிகள் என்ற அறிவியல் பூர்வமான உண்மையை "ஆண் குழந்தை" கதை மூலம் ஆசிரியர் உணர வைத்திருக்கின்றார். சிரிய யுத்தத்தால் இடம் பெயர்ந்து லெபனான் தலைநகரான பெய்ரூத்தில் சிக்குண்டு அல்லலுறும் இரண்டு குழந்தைகளின் கதையாக "கையது கொண்டு மெய்யது பொத்தி" திகழ்கிறது. சிறுவன் அலியையும் அவனது தங்கை பாத்திமாவையும் பொலிஸிலிருந்து தப்பவைத்த அந்த இஸ்லாமிய பெரியவர், கதை வாசித்து முடித்து நீண்ட நாட்கள் சென்றும் நினைவை விட்டு அகலாதிருந்தார். 15 கதைகளுள்ளும் மூச்சைத் திணற வைத்த கதை இது எனலாம்.

"அந்திமம் முதல் பணச்சடங்கு" வரை 15 கதைகளை உள்ளடக்கி யுள்ள இப்பனுவலில் உச்சம் பெற்ற கதைகளாக குறைந்தது 5 கதைகளையாவது பரிந்துரைக்கத்தக்கதாயுள்ளது. அந்தவகையில் பெரும் பாலான கதைகள் கனதியுடனமைந்து புனைகதை வெளியில் ஒரு புதிய எல்லையினை இப்பனுவல் தொட பாலம் அமைத்துள்ளன எனலாம். "எனது ஆக்கங்கள் எதையுமே நான் ஒரே முறையில் எழுதி யது கிடையாது. அவை திரும்பத் திரும்ப எழுதப்பட்டவை. அவற்றில் உண்மை கலந்த நம்பகத்தன்மை உள்ளதா எனப் பார்க்கப்பட்டவை. ஏற்ற சொற்களைப் பாவித்து, முடிந்தவரை எளிமையான உரை நடையில் விபரிக்கப் பட்டவை" என நூலின் என்னுரையில் ஆசிரியர் ஆசி கந்தராஜா கூறியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. குறிப்பாக புனைகதை வெளியில் இன்று காலடி பதித்திருக்கும் இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்கள் ஆசியின் இக்கூற்றினை ஓர் அறிவுரையாகக் கூட கொள்ளலாம்.

நூலிற்கு பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் வழங்கியிருக்கும் நீண்ட முன்னுரையும் குறிப்பிடற்பாலது. புலம்பெயர் இலக்கியம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு உசாத்துணையாகவல்ல இம்முன்னுரை நூலின் கனதிக்கும் ஓர் காரணமாகின்றது என்றால் அது மிகையாகாது. தெளிவான அச்சுப் பதிப்பு, கண்களுக்கு இதமான எழுத்துரு, கனதியான தாள், கவர்ச்சியான பக்க வடிவமைப்பு முதலானவைகளும் புத்தகத்தினை மேலும் பெறுமதியாக்கியுள்ளன. இதே தரத்துடன் "எங்கட புத்தகங்களை" தொடர்ந்தும் குலசிங்கம் வசீகரன் வெளிக்கொணர வேண்டும்.

ஊரெல்லாம் சொல்லி ஒரு பணச்சடங்கினை பேராசிரியர் ஆசி கந்தராஜா ஒழுங்குபடுத்தியுள்ளார். வாசகர்களும் விமர்சகர்களும் நிச்சயம் கோலாகலமாக அதைக் கொண்டாடுவார்கள்!

– தினக்குரல் : 13.03.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டூர் அசோகாவின் மீதெழலாய்
## பழுதறக் கனிந்திருக்கும் "எழுதப்படாத கவிதைகள்"

ஈழத்தில் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் என்றதும் இன்று முதலில் நினைவிற்கு வருபவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்படுபவர் மண்டூர் அசோகா என அனைவராலும் அதிகம் அறியப் பெற்ற திருமதி அசோகாம்பிகை யோகராசா அவர்களாவர். ஈழத்தமிழ்ப் பெண் பிரமாக்களுக்கான சாகித்திய விருது இவரிலிருந்தே ஆரம்பிக்கின்றது எனும் வகையிலும் இலக்கிய வரலாற்றில் இவர் மிக முக்கியத்துவம் மிக்க ஒருவராகிறார்.

மண்டூர் அசோகா அவர்களது பலம் என்பது அவரது சிறுகதைகளில் தான் ஆன பொழுதிலும் மெல்லிசைப்பாடல்களே இவரது இலக்கிய முயற்சிகளுக்கு அத்திபாரமாக அமைந்திருந்தது எனலாம். ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தில் தினந்தவறாது இடம் பெற்ற மெல்லிசைப் பாடல்கள் நிகழ்ச்சியில் மண்டூர் அசோகாவின் பாடல்கள் ஒலிக்காத நாட்கள் அரிதெனலாம். மண்டூர் அசோகா எனும் பெயர் ஓர் இலக்கிய விம்பமாக எம்மக்கள் மனதில் நிலைகொண்ட காலகட்டமும் ஏறத்தாழ அதுவாகத்தானிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கிருந்த எழுத்தார்வத்தினை ஊக்குவித்து வளர்த்து விட்டதில் பெரும்பங்கு இலங்கை வானொலிக்கு உண்டென நன்றியுடன் நினைவு கூரும் மண்டூர் அசோகாவின் அச்சு ஊடகப் பிரவேசம் "தாய்நாடு" சஞ்சிகையில் பிரசுரமான "அம்மா வந்தாள்" எனும் கதையினூடு ஆரம்பமாகிறது. இற்றைவரை நூற்றிற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கும் அசோகா அவற்றினைத் தொகுத்து "கொன்றைப் பூக்கள்"(1976), "சிறகொடிந்த பறவைகள்" (1993), "உறவைத்தேடி"(2002) ஆகிய மூன்று தொகுதிகளை வெளிக் கொணர்ந்துள்ளார். இவற்றுள் தனது அகவை இருபத்தியேழில் இவர் அறுவடை செய்த "கொன்றைப் பூக்கள்" தொகுதி, இளவலிலேயே சாகித்ய விருதினைத் தனதாக்கிய பெண் எழுத்தாளர் எனும் வரலாற்றுப் பெருமை மிக்கதோர் தடத்தினைப் பதிக்க அசோகாவை இட்டுச் சென்றதற்கும் அப்பால் ஒரு பெரும் அங்கீகாரத்தினையும் அவரிற்கு நல்கியதெனலாம்.

"பாதை மாறிய பயணங்கள்" எனும் நாவலானது (1992) அவ் இலக்கியத்திலும் அசோகா கவனிக்கப்படத்தக்கதோர் ஆளுமை என்பதனை உணர்த்தலாயிற்று. இந் நாவல் வடக்கு கிழக்கு மாகாணத்தின் சாகித்ய விருதினைத் தனதாக்கியதுடன் ஈழத்து இலக்கிய வெளியில் மண்டூர் அசோகா அவர்கள் தவிர்க்கப்பட முடியாததோர் ஆளுமை என்பதையும் பதிவு செய்தது. சிறுகதை, நாவலிற்குச் சமாந்தரமாகத் தன் கவித்திறனையும் வளர்த்து வாசகர்கள் புரிந்து கொள்ளத் தடை யில்லாத வகையில் இலாவகமான மொழி நடையில் அவற்றினை யாத்து கனதியான கவிதாயினியாகவுந் தனது தனித்துவத்தைத் தக்க வைத்துக் கொண்டார். மட். அரசினர் ஆசிரியர் கலாசாலை மற்றும் வலம்புரிக் கவிதா வட்டம் ஆகியவை நடாத்திய கவிதைப் போட்டிகளிலெல்லாம் அசோகா பரிசில்களை வென்றமை இவரது கவியாற்றலின் சில வெளிப்பாடுகளெனலாம்.

இலக்கிய செயற்பாடுகளுக்காக விருதுகள் பலவற்றை அசோகா வென்றிருப்பினும் 2001இல் தஞ்சாவூர் இதயகீதம் இலக்கியப் பொது நல இயக்கத்தினர் வழங்கிய "தமிழருவி" மற்றும் இலங்கையின் உயர் தேசிய விருதான கலாபூஷணம் முதலானவை அவற்றுள் உச்சங்களாக நோக்கத்தக்கன. அசோகாவின் அனுபவத் திரட்சிக்கும் முதிர்ச்சிக்கு மான வாழ்நாள் சாதனை விருதுகள் இவை எனவுங் கொள்ளலாம்.

இத்தகு வழித்தடங்களினூடு பயணித்த மண்டூர் அசோகாவின் நான்காவது சிறுகதைத் தொகுதியாகவும் ஐந்தாவது நூலாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுதப்படாத கவிதைகள்" எனும் இந்நூல் அமைகிறது. பொதுவாகவே அசோகா தன் கதைகளில் பெண்களின் உணர்வுகள், மன அழுத்தங்கள் முதலியன யதார்த்த வாழ்வோடு மோதுகின்ற தன்மைகளை மிக இயல்பாகவே சித்திரித்திருப்பார். சக்தியற்ற பெண்களின் மௌன உணர்வுகளுக்கு வடிவங்கொடுப்பனவாகவே பெரும்பாலான அவரது கதைகள் பின்னப்பட்டிருக்கும். அவரது புனைவுகளில் மெய்யனுபவச் சித்திரிப்புகளின் ஊடாக மனித உறவுச் சிக்கல்களும் மனித உணர்வு நெருக்கடிகளும் முனைப்புற்றிருக்கும். "கொன்றைப் பூக்கள்" முதல் "உறவைத்தேடி" வரையிலான தொகுப்புகளில் இடம் பெற்றிருந்த அத்தனை கதைகளிலும் இப் பொதுப்பண்பினை இனங்காணலாம். அவ்வாறான பண்பின் ஒரு தொடர்ச்சியினையே இத் தொகுதியிலும் தரிசிக்க முடிகிறது.

இத் தொகுதி அசோகாவின் பத்துக் கதைகளை உள் வாங்கியுள்ளது. வாசிப்பதற்கு சுவாரசியமாக விளங்குவதோடு பெரும்பாலான கதைகள் மனதை அதிரவைப்பனவாகவும் உள்ளன. அவலம் நிறைந்த மனித வாழ்வியலை, முன்தோன்றி நிற்கும் பண்பாட்டுச் சிக்கல்களை, நெருக்குவாரங்களை பொதுப்படையில் இக்கதைகள் பேசுகின்றன. தொகுதியில் உள்ளடங்கியுள்ள பத்துக் கதைகளுள் பெரும்பாலானவை குழந்தைகள் நலம் பேணல், மற்றும் அவர்களுக்கான நீதி தொடர்பிலான புனைவுகளைாகக் காணப்படுவது நோக்கற்பாலது. சிறுவர்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகம், சீரற்ற குழந்தை வளர்ப்பு முறையும் அதனாலான விளைவுகளும், சிறுவர்கள் மீது திணிக்கப்படும் சுமைகள் போன்றவற்றைப் பேசுபொருளாகக் கொண்டு இக் கதைகள் புனையப்பட்டுள்ளன. "குருட்டுப் பூனைகள்", "வெள்ளச்சி", "மேய்ப்பனில்லாத ஆட்டுக் குட்டிகள்", "விட்டு விடுதலையாகி", "ஒரு செம்மறியாட்டுக் குட்டியும் சில ஓநாய்களும்" போன்ற ஐந்து கதைகளையும் இவ்வகையில் அடையாளப்படுத்தலாம். இவை யாவுமே சிறார்கள் எதிர்கொள்ளும் பல தரப்பட்ட சிக்கல்களையும் நெருக்கீடுகளையும் உணர்வு பூர்வமாகச் சித்திரித்திருப்பவை. சிறுவர்களின் அகவுலகம் மற்றும் புறவுலகம் தொடர்பிலான புனைவுகளாகவும் இவை விளங்குவது மற்றுமோர் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

தாயின் அரவணைப்பின்றி வாழும் சிறுவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் எதிர்கொள்ளும் சவால்களை வெகு நுட்பமாகவே அசோகா இச் சிறுகதையில் பதிவு செய்துள்ளார். இத்தகு சிறார்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த தாயின் வாஞ்சையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அரவணைத்து நிற்கும் அசோகாவின் உணர்வு பூர்வமான அணுகுமுறை சிலிர்க்க வைக்கின்றது. அத்துடன் அது சொல்லும் சேதியும் மகத்தானது, முன் மாதிரியானது. பாசத்திற்காக ஏங்கும் இப்பேர்ப்பட்ட பிள்ளைகளுக்கு போதிக்கப்பட வேண்டியது பாட விதானங்கள் அல்ல. அவர்கள் வேண்டி நிற்கும் தாய்ப்பாசத்தினையே என்னும் செய்தியினை "மேய்ப்பனில்லாத ஆட்டுக்குட்டிகள்" எனும் புனைவின் மூலம் அசோகா உணர்த்தியுள்ளார். அவர் அதைச் சொன்ன முறைமை தான் இக்கதையினை முக்கியத்துவப்படுகிறது.

தாயின் பொறுப்பற்ற, விழுமியமற்ற நடவடிக்கையினால் மன உளைச்சலுக்கு உள்ளாகும் பிள்ளையொன்றின் நிலையினை, "விட்டு விடுதலையாகி" எனும் கதையில் அசோகா அழகாக எடுத்தியம்பு கிறார். ஈற்றில் இந்த உலகத்தையே பார்க்க விரும்பாதவனாக இறந்துபோன தந்தையை அடைக்கலம் நாடுவதாகக் கதையினை முடித்து நெஞ்சினில் ஓர் ஏக்கத்தையும் கண்களில் ஈரக்கசிவினையும் ஏற்படுத்துகின்றார். மறுதலையாகத் தந்தையின் பொறுப்பின்மையை யும் பெற்ற பிள்ளையையே வன்புணரும் பண்பற்ற மிருகத் தன்மை யினையும் குருட்டுப் பூனைகள் கதையில் படம் பிடித்திருக்கிறார் அசோகா. "இப்படியும் நடக்குமா?" என அதிரவைக்கும் அச்சம்பவத் தினை ஓர்வித அச்சத்துடன் அசோகா சொல்லிய முறைமையும், அது தொடர்பிலான பல சங்கதிகளைச் சொல்லாமலே உணரவைத்த பாங்குமே இங்கு பிரதானமாகின்றன.

அந்நியச் செலாவணிக்காக, ஆடம்பரப் பொருட்களுக்காக அங்கலாய்ந்து இளங்குருத்தொன்றின் உயிரைக் காவுகொள்ளும் "பெரியப்பா வீட்டார்" பற்றிய கதை "ஒரு செம்மறியாட்டுக் குட்டியும் சில ஓநாய்களும்". பெற்றதாய் வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்புத் தேடிச் சென்ற பின்னர் அடுத்தவர் வீட்டில் ஒடுக்கு முறைக்காளாகும் பதின்ம வயதைச் சார்ந்த இதையொத்த பல ராகவிகளுக்கும், அன்னையர்களுக்கும் போதனையாக வல்ல கதையாக இது அமைகின்றது. தாம் வாஞ்சையுடன் வளர்த்து வந்த "வெள்ளச்சி" எனும் பசுவினை, பட்ட கடனுக்காக விற்ற பின்பு அதன் பிரிவால் துயருறும் கண்மணி எனும் சிறுமியின் கதையே வெள்ளச்சி "கண்மணி யின் சந்தோச உலகம் நொருங்கிச் சிதைந்தது", "வீடே வெறிச்சோடிப் போனது" போன்ற வரிகள் கண்மணியின் உணர்வினைப்படம் பிடித்துக்காட்டும் அற்புதமான குறியீடுகளெனலாம்.

சிறுவர்களுக்கான குடும்பச் சூழல், கல்விச்சூழல் மற்றும் சமூகச் சூழல் முதலானவை சுமுமான முறையில் பேணப்பட்டாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது கல்வி நடவடிக்கைகள் சீராக அமையும். இதில் பெற்றாரின் வகிபாகம் மிக முக்கியமானது. இவற்றினை வலியுறுத்தி சிறுவர் தொடர்பான சிக்கல்களை கலைத்துவ நோக்குடன் கதைகளாகப் படைத்து வெற்றி பெற்ற எழுத்தாளர்கள் ஏலவே எம்மகத்தில் சிலருளர். சிறுவர்களின் சவால்களை, அவர்களது அவலங்களை எல்லாம் மனதை விட்டகலா முறையில் வெளிப்படைத் தன்மையுடன் மேற்படி கதைகளில் பதிவு செய்த முறைமையில் மண்டூர் அசோகாவும் அவர்களுடன் இயைத்துக் கொள்ளப்பட வேண்டியவராகின்றார்.

இத் தொகுப்பிலுள்ள "துயரம் சுமப்போர்" ஈழத்துப் போர்க் காலத்தைப் பிரிதிபலிக்கும் கதையாக விளங்குகின்றது. போர்க் காலத்தைப் பிரதிபலிப்பனவாக எழுதப்பெற்ற இவரது கதைகளின் தொகுப்பு "உறவைத்தேடி" எனும் மகுடத்தில் **2002** இல் கொழும்பு, மீரா பதிப்பக வெளியீடாக வந்திருந்தது நினைவிற்கு வருகிறது. சந்தைக்குப் பொருட்கள் விற்கவெனச் சென்றிருந்த பரிமளம் எனும் மூதாட்டி அங்கு நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பலியாவதும் பெற்ற பிள்ளைகள் தம்மைப் பராமரித்திருப்பின், இந்நிலை தன் மனைவிக்கு நிகழ்ந்திருக்குமா? எனப் பரிமளத்தின் கணவர் பொன்னம்பலத்தார் அங்கலாய்ப்பதுமாக இக்கதை விரிகிறது. போர்க்காலத்தில் நிகழ்த்தப் பட்ட அழிவுகளின் ஒரு வெட்டுமுகமாகவும், அந் நிகழ்வுகளை மீட்டுவதாகவும் இக்கதை அமைகிறது.

அடுத்தடுத்த வயல் வாடியில் கமஞ்செய்யும் குமரன், சுந்தரம் எனும் இரு நண்பர்களின் கதையாகப் புனையப்பட்ட "வேட்டை" கதையில் எதிர்பாராது நிகழும் திருப்பம் முழுமைக்கதையையுமே மாற்றி யமைத்து விடுகிறது. தற்பாதுகாப்பிற்காக கும்மிருட்டில் குமரன் எடுத்துச் சென்ற துப்பாக்கியால், பன்றி என நினைத்து அவன் வைத்த வேட்டில் ஆருயிர் நண்பன் சுந்தரமே வேட்டையாடப்படுவ தும் அதைச் சகிக்காது அதே இடத்திலேயே குமரன் அதே துப்பாக்கி யால் தன்னை மாய்த்துக் கொள்வதுமாகச் சிருஷ்டிக்கப்பட்ட இக்கதை கவனயீனத்தினாலான விளைவுகளை உணர்த்தத் தலைப்படு கின்றது. கடந்து வந்த காற்தடங்களை மறந்து நிற்கும் இன்றைய புலம் பெயர் சமூகத்தின் ஒரு வெட்டு முகத்தினை "நழுவிச் செல்லும் காற்தடங்கள்" கதை தரிசிக்க வைக்கின்றது.

இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் "தூண்டிற் புழுக்கள்", "எழுதப்படாத கவிதை" எனும் இரண்டும் சற்று வித்தியாசமான கதைகள். திருமணத்தின் பின்னரான பாலியல் பிறழ்வுகள் பற்றிப் பேசுபவை. குடும்பம், குடும்பம் என ஓடி, ஓடி உழைத்த மாணிக்கனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி வெளிநாட்டு ஏஜென்சிக்காரன் ஒருவனுக்குச் சப் ஏஜென்ட் எனக் கூறப்படும் ஒருவனுடன் தொடர்பினைப் பேணுவதும் அதன் விளைவால் குடும்பத்தில் குழப்பங்களும், சண்டைகளும் சதா நிகழ்ந்து, ஈற்றில் அதுவே தற்கொலைக்கு மாணிக்கனை இட்டுச் செல்வதுமான கதை. வேண்டாத விவரணைகள், விரசங்களேதுமின்றி கதையினை நகர்த்திச் சென்றுள்ள முறைமை நயத்தற்குரியது.

ஏறத்தாழ இதே கருப்பொருளைக் கொண்டு விளங்கும் இந்நூலின் மகுடக்கதையான "எழுதப்படாத கவிதை", கதை சொல்லப் பட்ட முறைமையிலும் கருப்பொருளை நோக்கிய வகையிலும் ஏனைய கதைகளிலிருந்தும் வேறுபட்டு புதிய எல்லை ஒன்றினைத் தொட எத்தனித்துள்ளதெனலாம். நல்லதோர் திரைப்படம் பார்த்ததைப் போன்ற நிறைவினைத் தருமளவிற்கு மிக அற்புதமாகவே இக்கதை யினை அசோகா நகர்த்தியுள்ளார் எனலாம். இத்தொகுதிக் கதை களுக்குள்ளே உச்சம் பெற்ற கதை என இதைக் கொள்ளலாம்.

ஒவ்வொரு கதையினையும் முடிக்கும் முறையில் மண்டூர் அசோகாவின் மொழியாற்றல் புலனாகிறது. இத்தகு மொழியாற்ற லுக்கும், எழுத்து வீச்சுக்கும் அவரது மூத்த சகோதரன் இ.பாக்கிய ராஜன் போன்றவர்களின் பின்னணியும், தமிழாசிரியையாக பல்லாண்டுகள் அவர் வகித்த பணி நிலையும் காரணங்களாகின்றன. அவர் எளிமையான ஒரு கதாசிரியையாக விளங்குவதும், பெரும்பா லான அவரது கதைகளில் அவரே பிரதான கதாபாத்திரமாகத் திகழ்வதும் அவரது கதைகள் நம்பகத்தன்மை கொண்டதாக அமைய வழிகோலியுள்ளன. முன்னைய தொகுதிகளை விடவும் இத் தொகுதி யில் அவரது மொழிநடை மேம்பட்டு விளங்குவதும் கவனத்திற் குரியது.

பொதுவான ஒவ்வொரு தொகுதியிலும் ஓரிரு கதைகளே சிறந்து விளங்குவதுண்டு. ஆனால் மண்டூர் அசோகாவின் இத்தொகுதி யில் குறைந்தது மூன்று கதைகளையாவது சிறந்த கதைகள் என பரிந்துரைக்கத்தக்கதாயுள்ளது. மண்டூர் அசோகா அவர்கள் மென் மேலும் புனைகதை இலக்கியம் படைக்கவும், அவை யாவும் ஈழத்து இலக்கிய உலகிற்கு வளம் சேர்ப்பனவாக அமையவும் மனதார வாழ்த்துகின்றேன்!

- நூலிற்கான அணிந்துரை

ஜீவநதி மண்டூர் அசோகா சிறப்பிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவின் எட்டுத்திக்கு வட்டாரங்களையும் கண்முன் கொணரும் மண்டைதீவு கலைச்செல்வியின் "கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன"

ஈழச் சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்தும் வரலாற்று ஆய்வாளர்கள் காலவரன் முறையிலும் கருத்தியல் வரன் முறையிலும் வகைப்படுத்தியே தமது அவதானங்களை முன்வைப்பர். அவ்வகையில் ஆய்வினை மேற்கொள்ளும் போதே, அது ஒரு சிறப்பான பகுப்புமுறையாக அமையும். அதற்கிணங்க "சமுதாய சீர்திருத்த காலம்" (1930-1949), "முற்போக்குக் காலம்"(1950-1960), "புத்தெழுச்சிக் காலம்"(1961-1982), "தமிழ்த் தேசியவுணர்வுக் காலம்"(1983க்குப் பின்னர்) என நான்கு வகையானதாக ஈழத்துச் சிறு கதையின் செல்நெறிகளை கால வோட்டத்துடன் வகுத்துக் கொள்வர்.

இந்த வகையில் 1961லிருந்து 1982 வரையிலான "புத்தெழுச்சிக்" காலகட்டத்தில் ஈழத்துச் சிறுகதை வெளியில் மாற்றங்கள் பல நிகழ்ந்திருப்பது நோக்கற்பாலது. கருத்து வளமும் கலை வளமும் கைகோர்த்து நகர்ந்த இக்கால வெளியில் இனத்துவம், சமூகத்துவம், தலித்தியம், வர்க்கியம் மற்றும் பெண்ணியம் போன்ற பல்வேறுபட்ட கருத்து நிலைகள் சிறுகதைகளின் கருப் பொருளாக வளம் சேர்த்து நின்றன. ஈழத்துத் தேசிய பத்திரிகைகளுடன் "கலைச்செல்வி", "மல்லிகை", "சிரித்திரன்", "சுடர்" முதலான மாசிகைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது இக்கால கட்டத்து எழுத்தாளர்களுக்கு களமமைத்துக் கொடுத்து அவர்களை ஆதரித்தும் ஊக்குவித்தும் வந்தன.

இக்கால வெளியில் நல்ல பல சிறுகதை எழுத்தாளர்கள் உதய மாயினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுகதை பற்றிய பிரக்ஞை உடையவர்களாகவும் அதன் செல்நெறி பற்றிய புரிதல் கொண்டவர்களாகவும் இருந்ததால் காத்திரமான சிறுகதைகள் உருவாகக் காரணமாயினர். அந்த வகையில் "ஈழநாடு" மற்றும் "சுடர்" இதழ்களில் கனதிமிக்க கதைகளைப் படைத்ததில் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாத ஒருவராக மண்டைதீவு கலைச் செல்வி நோக்கப்படுகின்றார். ஆரம்ப நாட்களில் கவிதை புனைவதி லும் இவர் மிகுந்த ஈடுபாடு காட்டிவந்தார் என்பதும் ஈண்டு மனங் கொள்ளத்தக்கது.

கலைச்செல்வி மிகவும் தெளிவான கருத்தியல் நிலை நின்று தனது கதைகளைப் படைத்து வந்தார். வர்க்கியம், தலித்தியம், சூழலியம், பெண்ணியம் போன்ற எக் கருப் பொருட்களாயினும் மிக்க புரிதலுடனேயே அவற்றினைக் கையாளலானார். சமூக வாழ்க்கையின் இயல்பான ஓட்டத்தில் ஏற்படும் சிக்கல்கள், மானிட அக, புற முரண் பாடுகள், மெல்லிய உணர்வுகள் தொடர்பிலெழும் மன உளைச்சல் போன்ற அம்சங்கள் இவரது கதைகளில் மிகத் தூக்கலாக இருக்கும்.

தனது தாய் தேச வாழ்க்கையிலிருந்து உயிர்த்துடிப்பான பல பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து தனது சிறுகதைகளில் கலைச்செல்வி உலவவிட்டிருப்பார். தான் வாழும் பிரதேசத்தின் சமூகத்து வாழ்வு விழுமியங்களை உள்வாங்கி குடும்ப உறவுகளை மென்மையான இறுக் கத்துடன் பிணைத்து எழுதுவதில் இவர் கைதேர்ந்து விளங்கினார். இத்தகு அம்சங்களே ஆரம்ப காலங்களில் இவரது படைப்புகளில் பிரதானம் பெற்று விளங்கி வாசிப்போர் ஆர்வத்தினைத் தூண்டுவன வாக அமைந்திருந்தன எனலாம். ஈழநாடு பத்திரிகையில் **1980 / 1981** களில் தொடர்ச்சியாக இவர் எழுதி வந்த "ஒரு கண்ணீர்ப்பூ", "அவள் துயில் கொள்கிறாள்", "கரை காணாத கப்பல்", "யாருக்காக அழுதான்", "கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன" போன்ற கதைகளும் **1981 / 1983** காலப் பகுதிகளில் சுடரில் இவர் எழுதிய "நீர்க் குமிழிகள்", "கல்லானா லும்" ஆகிய கதைகளும் இப்பண்புகளைக் கொண்டு விளங்கியமை யாலேயே விமர்சகர்களதும் இலக்கிய ஆய்வாளர்களதும் கவனத்தை குறுகிய காலத்திலேயே கலைச்செல்வியால் ஈர்க்க முடிந்தது.

"கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன" என்ற மகுடத்தில் வெளிவரும் இந்நூலானது, கலைச்செல்வியின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். முகிழும் இப்பனுவலில் இவரது பதினொரு கதைகள் உள்ளடக்கம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையிலும் வர்க்கியம், தலித்தியம், சூழலியம் போன்ற கருப்பொருட்களை சித்திரமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுவதற்கு கலைச்செல்வி முனைப்புற்றிருப்பது புலனாகின்றது. கலைச்செல்வி கையாண்டிருக்கும் சிக்கலற்ற உத்திகளும், அதி திருத்தமான மொழிநடையும் அவரது கதைகளைத் தூக்கி நிறுத்தியிருக்கும் தன்மையினை இத்தொகுதியினைப் பயிலும் எவரும் உணர்ந்து கொள்வர். இந்த 11 கதைகளிலும் கலைச்செல்வி சித்திரித்த மனிதர்கள் அவரது தாய் தேசமான மண்டைதீவில் மட்டும் வாழ்ந்தவர்கள் அல்லர். அவர்கள் தமிழர் தேசமெங்கும் வாழும் வகைமாதிரி மனிதர்கள். அத்தகு பாத்திரங்களின் இதயக் குமுறல்களை, உள்ளத்து அவலங்களை, ஏக்கங்களை, உணர்ச்சிகளை, தோல்விகளை, தியாகங்களை, சின்னச் சின்ன சந்தோஷங்களை, விட்டுக் கொடுப்பு களை கலைச்செல்வி மிகத் துல்லியமாகவே வெளிப்படுத்துகிறார். அத்தகு நுண்ணிய சித்திரிப்புகளே இந் நூலிற்கு ஒருவித கனதியைக் கொடுத்து இக்கதைகள் ஆவணப்படுத்த வேண்டியதன் முக்கியத்து வத்தை உணர்த்தி நிற்கின்றதெனலாம்.

1983க்குப் பிற்பட்டதான தமிழ் தேசியவுணர்வுக் காலத்தில் எழுதிய இரு கதைகள் இத்தொகுதியின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. இப்பனுவலில் இடம்பெற்றிருக்கும் 11 கதைகளுள்ளும் அதிசிறந்த கதைகளாக விளங்குவதும் அவ்விரண்டுமே. முன்னைய 9 கதைகளுடன் ஒப்பிடுகையில் இவ்விரண்டும் மேம்பட்டு விளங்கு வதற்கு, இடையில் பரந்திருக்கும் இருபது ஆண்டுகால இடைவெளி யும் அதில் கதாசிரியை அடைந்திருக்கும் இலக்கிய முதிர்ச்சி நிலையுமே மிக முக்கிய காரணங்களாகின்றன. அந்த நீண்டகால இடைவெளியில் தமிழர் தேசத்தில் நிகழ்ந்த உக்கிரப்போரும் அதனால் அடுத்தடுத்து நிகழ்ந்த இடப்பெயர்வுகளும் கதாசிரியையினை மட்டுமல்ல அவரது படைப்புகளையும் புடம் போட்டிருப்பது படைப்புகளைப் படிக்கும் வேளை புலனாகின்றது. மண்டைதீவின் எட்டுத்திக்கு வட்டாரங்களையும் அக் கிராமத்து மனிதர்களையும் மண் மணம் குன்றாது எம் கண் முன் கொணர்ந்து அவர்களது செயற்பாடுகளையெல்லாம் உயிர்ப்பித்து வைத்ததில் நூலாசிரியை வெற்றி பெற்றிருக்கிறார் எனலாம். "மண்டை தீவு கலைச்செல்வி ஈழத்து சிறுகதைத் துறையில் சேர்ந்து எண்ணப்பட வேண்டியவர்" என சாகித்யரத்னா செங்கை ஆழியான் தனது ஆய்வொன்றில் பதிவு செய்திருப்பார். அவரது கூற்றினை உயிர்ப்பித்து நிற்கும் இந்நூலின் வரவு நிச்சயம் ஈழத்து இலக்கிய வெளிக்கு வளம் சேர்க்கும் எனக்கூறி, நூலாசிரியைக்கும் இக்கதைகளின் பிரதிகளையெல்லாம் தேடி எடுத்தது முதற் கொண்டு அவற்றினை அச்சேற்றி நூலாக ஆக்கும் வரை உழைப்பினை நல்கிய ஜீவநதி பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனுக்கும் என் மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

– நூலிற்கான முன்னுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சிறுவர் இலக்கியத்தின் வளத்திற்கோர் வகை மாதிரி பஞ்சகல்யாணியின் "கதை மரம்"

**பு**லோலியூரின் எல்லைக்குள் வாழ்ந்து மறைந்தும் மறையாதவர்களாய் கற்றோர் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும் அறிஞர், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் அநேகர். இவர்களுள் சதாவதானி நா.கதிரைவேற் பிள்ளை, தில்லைநாத நாவலர், தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, சைவப் பெரியார் க.சிவபாத சுந்தரனார், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, அருட்தந்தை தாவீது அடிகளார், தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் போன்றோர் உடன் நினைவிற்கு வருவர். இலக்கிய உணர்விலும், தமிழறிவிலும் ஆண் களுக்கு எவ்வகையிலும் தாமும் சளைத்தவர் கள் அல்லர் என்பதனை புலோலியூர் பெண் அறிஞர்கள் கடந்த நூற்றாண்டின் முற் கூற்றிலேயே தமது பங்களிப்புகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்த வகையில் ஒரு முன்னோடியாகக் கொள்ளத்தக்கவராக பண்டிதை பத்மாசனி அம்மாள் இராஜேந்திரா அவர்கள் விளங்குகின்றார். "புலோலி பசு பதிஸ்வரர் பயிற்றுப் பத்தந்தாதி" எனும் அந்தாதியை **1925** இல் எழுதியதில் ஈழத்தின் முதற்பெண் கவிஞர் என்ற புகழிற்கும் இவர் உரியவராகிறார். அதுமட்டுமன்றி ஈழத்தின் முதற்பெண் மொழிபெயர்ப்பாளர் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையும் அன்னார்க்கு உண்டு.

இதன் ஒரு தொடர்ச்சியாக கடந்த நூற்றாண்டின் இறுதிக் கூற்றில் புலோலியில் பெண்களின் இலக்கியப் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகவே அமைந்திருந்தது எனலாம். அக்காலகட்டத்தில் புலோலியூரில் எழுத ஆரம்பித்த பெண் எழுத்தாளர்கள் கனதியான பங்களிப்பை நல்கி திறனாய்வாளர்களின் அதீத கவனத்தையும் ஈர்த்திருந்தனர் என்பதும் ஈண்டு மனங் கொள்ளத்தக்கது. அந்த வகையில் சந்திரா தியாகராஜா, க.குகநாயகி, மங்களராணி போன் றோர் விதந்துரைக்கத்தக்கவர்கள். இப்பட்டியலில் இன்னொருவரை யும் மிக முக்கியமாக எடுத்துக் கூறல் வேண்டும். புலோலியின் பிரிகோட்டில் வாழ்ந்த, சுப்பர் மடத்தைச் சேர்ந்த லதா உதயனே அவராவார். புதிய உணர்முறைமையுடன் இவர்கள் எழுதிய சிறுகதை களும், நாவல்களும், கவிதைகளும் விருதுகள் பலவற்றினை வென்றதற்கும் அப்பால் அவர்கள் பிறந்த மண்ணிற்கும் அவை பெருமை சேர்த்திருந்தன என்றால் அது மிகையாகாது.

இவர்களின் வரவின் பின் நீண்டகாலமாக புலோலியூரில் பெண் எழுத்தாளர்களின் முகிழ்வு இல்லாதிருந்தது பெருங்குறையா கவே இருந்து வந்தது. அதை நிவர்த்திக்குமாப்போல் அண்மைக் காலங்களாக தென்புலோலி, பிலாவடித்தெரு எனும் முகவரியிலிருந்து பஞ்சகல்யாணி செல்லத்துரை தன் பங்களிப்பினை நல்கி வருவது மகிழ்வைத் தருகிறது. அதுவும் மருத்துவத்துறையில் பாண்டித்தியம் பெற்ற ஒருவர் இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டு ஆக்கங்கள் படைத்து அடுத்தடுத்து நூல்களை வெளிக்கொணர்வதோடு மாகாண மட்டத்தில் அத்துறைக்கான விருதுகளையும் வெல்கின்றார் என்பதே இங்கு பிரதானமாகிறது. ஏலவே கலாபூஷணம் க.சதாசிவம், எம்.கே.முருகானந்தன் போன்ற மருத்துவர்கள் புலோலியூரில் இலக்கியத்தில் ஈடுபட்டதற்கும் அப்பால் சாகித்ய விருதுகளையும் தமதாக்கி சாதனைகள் பல புரிந்துள்ளனர். அந்த வரிசையில் பொருத்தப்படத்தக்க ஒருவராக இப்போது மருத்துவர் பஞ்சகல்யாணி யும் முகிழ்ந்து வருவது கவனிப்பிற்குரியது.

பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலையில் உயர்தரக் கல்வியைப் பெற்றுக் கொண்ட பஞ்சகல்யாணி யாழ்.பல்கலைக்கழகத்தில் தனது மருத்துவக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து தற்போது வடமராட்சி கிழக்கு, அம்பன் அரசினர் வைத்திய சாலையில் மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். சிறுபராயத்தி லிருந்தே வாசிப்பதிலும், எழுதுவதிலும் மிக்க ஆர்வமுடையவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் பஞ்சகல்யாணி, இயற்கையை இரசிப்பதிலும் அதனை நேசிப்பதிலுமே பிரதானமாகத் தன் பொழுதுகளைக் கழித்து வருகிறார். தொல்பொருட்களைத் தேடுவதும், அவற்றினைத் தன தாக்கிக் கொள்வதும் இவரது குறிப்பிடத்தக்க மற்றொரு பொழுது போக்கெனலாம். தான் இரசிக்கும் இயற்கையினை, அதன் அற்புதமான இயல்புகளை தனது பிள்ளைகளுக்கும், ஏனைய குழந்தைகளுக்கும் காட்சிப்படுத்த பஞ்சகல்யாணி அவாவுகிறார். சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்க இவர் விழைவதும் இத்தகு உந்துதலினாற்றான்.

"அழகிய உலகம்", "சிந்தனை செய்" என இரு நூல்களை சிறுவர்களுக்காக ஏலவே அறுவடை செய்திருக்கும் பஞ்சகல்யாணி "கதை மரம்" எனும் நூலை அண்மையில் வெளிக் கொணர்ந்துள்ளார். இவற்றுள் முன்னையது சிறுவர்களுக்கான பாடல்களாகும். பின்னிரண்டும் சிறுவர்களுக்கான கதைகளை உள்ளடக்கியது. "சிந்தனை செய்" நூல் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுவர் இலக்கிய மாக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் தேர்ந் தெடுக்கப்பட்டது. அண்மையில் இதற்கான விருதினையும், கௌரவத் தினையும் பஞ்சகல்யாணி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இம் மூன்று நூல்களையும் ஜீவநதி பதிப்பகமே பதிப்பித்திருந்தமையும் ஈண்டு பதிவு செய்யத்தக்கது.

சிறுவர்களுடைய அறிவு, ஆக்கத்திறன், கற்பனைத் திறன், மொழி மீதான பரிச்சயம் மற்றும் தமது உலகம் பற்றிய தரிசனம் போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் சிறுவர் கதைகள் பிரதான பங்கை ஆற்றுகின்றன. கதை கேட்டல் என்பது பிள்ளைகளின் வாழ்வில் ஒரு முக்கிய கற்றற் செயற்பாடாக அமைந்து விடுகிறது. எமது முன் னோர்கள் சிறுவர்களுக்கான கதைகளை வாய்மொழிப் பாரம்பரிய மாகப் போதித்து வந்தனர். பாட்டிகளும், பாட்டன்மாரும் அறத்தை யும், பண்பாட்டையும், விழுமியத்தையும் தாம் சொல்லும் கதை மூலமாகவே சிறுவர்களுக்குப் புகட்டி வந்தனர். இவ்வடிவம் இன்று பல்வேறு கோணங்களிலும் வியாபித்து நிற்கிறது. அத்தகு வடிவங் களில் ஒன்றாக பஞ்சகல்யாணியின் "கதை மரம்" விளங்குகின்றது. சமகால குழந்தைகள் இலக்கியத்தின் வளத்திற்கான ஒரு வகை மாதிரியாகக் கூட இக்"கதை மரத்தினைக்" கொள்ளலாம்.

சிறுவர்களின் சிந்தனைகளை கிளறத்தக்க கருத்துகளும், நல்லெண்ணங்களையும், அறவழிகளையும் போதிக்கத்தக்க அம்சங் களும் சிறுவர் கதைகளில் மேம்பட்டு இருத்தல் வேண்டும். அறிவியலை பொருத்தமான இடங்களில் உள்வாங்கி அவர்களது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையை விரிவுபடுத்த முனைய வேண்டும். சிறுவர்களது உளவியலை அறிந்து அவர்களது மென்மையான உணர்வுகளை மதித்து சிறுவர் இலக்கியங்கள் சித்திரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகு நுட்பங்களுடன் "கதை மரத்துக்" கதைகள் வடிவமைக்கப் பட்டிருப்பதாலேயே பஞ்சகல்யாணி எடுத்துப் பேசத்தக்க ஒருவராகின்றார். இந்த இடத்திலேயே இராசையா மாஸ்டர், கோகிலா மகேந்திரன், செ.அன்புராசா அடிகளார், ஓ.கே.குணநாதன் போன்ற சிறுவர் இலக்கியத்தில் கிரீடம் சூடிக்கொண்டவர்களுடன் பஞ்ச கல்யாணி ஒப்பிட வேண்டியவராகின்றார், கொண்டாடப்படத் தக்கவராகிறார்.

சிறுவர் இலக்கியத்திற்குரிய சிறிய செல்லாடல்கள், சின்னச் சின்ன வாக்கியங்கள், சிறுவர்களின் கற்பனைகளை மடை திறந்து விடக்கூடிய காட்சியமைப்புகள், சிந்தனையைக் கிளறத்தக்க கருத்துக்கள், சித்திரங்கள் போன்றவை மிகப் பொருத்தமாகவே "கதை மரத்துக்" கதைகளில் அமைந்துள்ளன. அநேக கதைகளின் முடிவுகள் குழந்தைகள் மனதில் நற்சிந்தனைகளை விதைத்து நிறைவுறுகின்றன. "ஏகாம்பரத் தாத்தா", "வகுப்பறை" போன்ற கதைகளில் இத்தகு பண்புகளைக் காணலாம்.

வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை விளக்கி உயிரியல் பாடத்தினை போதித்து நிற்கும் "வண்ணத்துப் பூச்சியின் அம்மா", பட்டத்தின் சமநிலையை எடுத்துரைத்து பௌதீகவியலைப் புகட்ட முனையும் "தாத்தா கட்டிய பட்டம்", விட்டுக் கொடுப்பினை கற்பிக்க முயலும் "குரங்குகளும் முதலையும்", அழகென்பது எது என்பதற்கு சாட்சி சொல்லும் "பறவைகளின் அழகுராணிப் போட்டி", என ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் மழலைச் செல்வங் களுக்கு அறிவூட்டத்தக்கவகையில் சொல்லப்பட்டிருப்பது இந் நூலிற்கு ஓர் கனதியினைக் கொடுத்திருக்கிறது. மிக்க ஆர்வத்துடன் சிறார்கள் இந்நூலினைத் தேடிப் பயில்வதற்கு இந்த பண்புகளே வகை செய்துள்ளதெனலாம்.

இத்துறையில் இன்னும் கணிசமான பங்களிப்பினை இந்நூலாசிரியர் மேற் கொள்ள வேண்டும். பிஞ்சுகளுக்கான இலக்கி யத்துடன் மட்டும் நின்றுவிடாது பஞ்சகல்யாணியின் இலக்கிய முயற்சி சிறுகதை, நாவல் என பல்துறைக்கும் பரிணமிக்க வேண்டும் என வாழ்த்துவோமாக!

- தினக்குரல் : 22.01.2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிப்பாய் நயப்புறும் அஜந்தகுமாரின் நாட்குறிப்புகள்

சிறுகதை, நாவல் போன்ற புனைவு இலக்கியங்களில் மெய்யனுபவங்கள் அல்லது வாழ்வின் தரிசனங்கள் மிகையுறும் போது அது வேறோர் வடிவங் கொள்கிறது. உள்ளதை உணர்ச்சிக் கலப்பின்றிக் கூறி அதை வரலாறாக் காது உணர்ச்சியும் கற்பனையும் கலந்து இலக்கியமாக்கிடும் இந்த உத்தி மேனாடுகளி லிருந்தே ஆரம்பமானது எனலாம். Norman Mailer என்ற அமெரிக்க எழுத்தாளரும் அவர் எழுதிய Exectioner's Song எனும் நூலும் இவ்வகையில் உடன் நினைவிற்கு வரத்தக்கன. அகிலனின் "ஒற்றன்" நாவலையும் வேண்டு மாயின் இவ் வடிவத்துள் அடக்கலாம். எமது எழுத்தாளர்களான என்.கே.ரகுநாதன் எழுதிய "ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி", மு.தயாபரன் (தகவம்) வெளிக்கொணர்ந்த நூலான "நினைவழியா நாட்கள்", அ.முத்து லிங்கத்தின் "உண்மை கலந்த நாட்குறிப்புகள்" போன்றவற்றையும் இப்பரிசோதனை முயற்சிக்கு உதாரணங் கொள்ளலாம். Creative nonfiction எனும் இவ் வகைமை வாசகன் தன்னனுபவங்கள் வழி நின்று சிந்திக்கவும், விழிப்புணர்வுறவும் வழி சமைக்கின்றன.

இந்த வகையில் இத்தகு பதிவுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நீட்சியாக அண்மையில் அறுவடையான த.அஜந்தகுமாரின் இனிப்புக் கதைகள் எனும் நூல் திகழ்கின்றது. இந் நூலில் பதினான்கு பதிவுகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு மகுடத்தின் கீழும் நன்னான்கு பகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பகுதிகளும் (A.B.C) நாளாந்த வாழ்வனுபங்களை நாட் குறிப்புப் போல அல்லது சுயசரிதை போல வெளிப்படுத்தி நிற்க நான்காவது பகுதியானது (D) அவ்வனுபவங்களின் படிப்பினைகளை அலசுவதாக உள்ளன. அஜந்தகுமாரின் வெவ்வேறு காலகட்டத்து உண்மை கலந்த நாட்குறிப்புகள் வாசகர்களுக்கு அனுபவத் தொற்றலை ஏற்படுத்து வதற்கும் அப்பால் அவர்களது இதய ஆழத்தையும் தொட்டுவிடுகிறது. வாழ்வில் தொலைந்து போன மனவமைதியினை கண்முன்னே மீண்டும் கொணர வைக்கத்தக்க இத்தகு மெய்க்காட்டு இலக்கியங்கள் எழுதும் முறைமையிலேயே நயப்புறத்தக்கன. அந்த ரீதியில் இனிப்புக் கதைகள் பதினான்கும் இலக்கியப் பெறுமானம் பெற்றே விளங்கு கின்றன எனலாம்.

அஜந்தகுமார் சிறுகதை எழுத்தாளராக, கவிஞராக, தமிழியல் ஆய்வாளராக, நல்ல பேச்சாளராக இளவயதிலேயே ஆழத்தடம் பதித்தவர். “ஒரு சோம்பேறியின் கடல்”, “தனித்துத் தெரியும் திசை”, “அப்பாவின் சித்திரங்கள்”, “நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்”, “படைப்பின் கதவுகள்” போன்ற பேசப்பட்ட பனுவல்களை ஈழத்து இலக்கிய உலகிற்கு வரவு வைத்தவர். இவ்வகை நூல்களுக்காக மாகாண மட்டத்திலும் தேசிய ரீதியிலும் விருதுகளை வென்றவர். மழலை மனதுகளை ஆகர்ஷிக்கத்தக்க வகையில் அண்மையில் இவர் வெளிக்கொணர்ந்த “மழலை ஓவியங்கள்” எனும் நூல் பலரது பாராட்டுக்களையும் பெற்றிருப்பது ஈண்டு பதிவு செய்யத்தக்கது.

“எப்பொழுதாவது தான் எழுத வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். அப்படிப்பட்ட ஒரு காலத்தில் எழுதப்பட்ட இந்த எழுத்துக்களை எந்த வடிவத்தில் சேர்ப்பது என்று எனக்குத் தெரிய வில்லை. ஆனாலும் இவை அனுபவங்களும் சிறு புனைவுகளும் இணைந்த எளிமையான மொழி நடையில் ஒரு வகை வித்தியாசமான வடிவமாக உருப்பெற்றுள்ளதை உணர்கிறேன்” என நூலின் என்னுரை யில் கூறும் அஜந்தகுமார், “இந்தப் பதிவுகளை எழுதும் வேளைகளில் மீண்டும் திரும்பி வர முடியாத காலங்களுக்குள்ளும் நினைவுகளுக் குள்ளும் நான் அலந்தும் அமிழ்ந்தும் இருந்தேன்” என்கிறார். இவரின் இக் கூற்றுக்களுக்கு அல்லது கேள்விகளுக்கு இசைவான விடையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேட எத்தனிக்கும் போது அதற்கான ஒரு கால்கோளினை "நாவலும் ஆவலும்" எனும் அவரது ஓர் பதிவே இட்டுத் தந்திருப்பது வியப்பிற்குரியது.

"எனக்குள் ஒரு பெருங்கனவு, அப்பாவின் கதையை ஒரு நாவலாக்க வேண்டும் என்பதுதான் அது. அதற்காக எத்தனையோ நாளாக நானும் முயல்கிறேன்" என ஆரம்பிக்கும் அப்பதிவில் எழுத ஆரம்பித்த அந் நாவல் சில சமயம் கட்டுரை போல மாறிவிடும். சில நேரம் முயலாகும். சில நேரம் ஆமையாகும் என ஆதங்கப்படுகிறார். ஆமை வருவது விட்டுக்குத்தானே கூடாது, நாவலுக்கு நல்லது தானே என்று சில நேரம் "ஊறட்டும்" என்று காவல் இருப்பேன். ஆனால் எழுதியவை திருப்தி தராமல் போகக் கிழித்து எறியத் தொடங்கினேன். வாங்கி வந்த கொப்பியில் இன்னும் நாலு பக்கம்தான் இருக்கிறது. புது கொப்பி வாங்கத்தான் வேணும்", என தனது அனுபவத்தினைப் பதிவு செய்கிறார்.

"நாவலும் ஆவலும்" எனும் இப்பதிவின் மூன்றாம் பகுதி (C) இவ்வாறாக அமைய முதலாம் (A) இரண்டாம் (B) பகுதிகள் சம்பந்தமே இல்லாமல் நாவல் பழத்தைப் பற்றிப் பேசுகின்றன. பள்ளிக் கூடத்தில் ஆரம்பக் கல்வி கற்ற நாட்களில் எழுதிய கொப்பியை நாவல் பழம் விற்கும் கிழவியிடம் கொடுத்து ஒரு சரை நாவல் பழத்தை வாங்கித் தின்ற நினைவினையும், வடமராட்சியில் இருந்து தென்மராட்சிக்கு இரவோடு இரவாக இடம் பெயர்ந்த வேளையில் நாவல் பழங்களை காற்சட்டைப் பொக்கற்றுக்குள் அடைஞ்சு கொண்டு சென்றதையும் முள்ளிவெளி பத்தைக்குள் பூச்சிகள் மினுங்கிக் கொண்டிருந்த அக்கணங்களில் பொக்கற்றுக்கை கையை விட்டு நாவல் பழத்தை எடுத்துத் தின்னத் தொடங்கிய அனுபவத்தினையும் நாவல் எழுதும் முயற்சியுடன் எவ்வகையில் சம்மந்தப்படுத்தப் போகின்றார் என வியந்து நின்ற வேளையில், D எனும் இறுதிப் பகுதியில் விஞ்ஞான பூர்வமான கருத்தொன்றினை முன்வைத்த அஜந்தகுமார், புத்திலக்கியம் ஒன்றினை அடையாளப்படுத்தி நிற்கிறார்.

"இரண்டு நாவல்களுமே நினைவைத் தருகின்றது. நாவல்பழம் ஒரு காலத்திற்குரியது. நாவலும் ஒரு காலத்திற்குரியது தான். பொக்கற்றுக்கை வைச்சு நான் நாவல் பழம் சாப்பிட்டதாலேயோ என்னவோ நாவலிலும் பொக்கற் நாவல் நிண்டது. அதை ஒரு அளவோடு வெட்டி அந்த நாவல்ல ஜம்பு மரத்தை ஒட்டுக் கன்றாக்கி இப்ப நல்லாக் காய்ச்சுக் கொட்டுது. நானும் நாவலை ஒட்டுக் கன்றாக்கி சிறுகதை, கவிதையாவது எழுதுவம் எண்டு பாக்கிறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதற்கு இலகுவாகவும் எளிமையாகவும் இருக்கும் இத்தகு புத்திலக்கியங்கள் பல்வேறு காலங்களையும், சூழ்நிலைகளையும், நிகழ்வுகளையும் சித்திரித்து உள்மன ஆழங்களுக்கு இட்டு செல்லும் வல்லமை கொண்டு விளங்குகின்றன. இவ்வகை இலக்கியங்களை, ஒட்டுக்கன்றுகளை எவ்வாறு வகைப்படுத்த வேண்டுமென்பதை வாசகர்களும் விமர்சகர்களுமே தீர்மானிக்க வேண்டியுள்ளது. கதரின் ஸ்ரொக்கட் என்ற ஆங்கில நாவலாசிரியர் எழுதிய "த ஹெல்ப்" எனும் நாவலும் ஏறத்தாழ இத்தகைய வகைமைக்குள் உள்ளடக்கத்தக்க ஒன்று தான். அந்நாவலை தனித்தனியாகப் படிக்கும் போது சிறுகதையாக இருக்கும்; ஒன்று சேர்த்தால் நாவலாகும்.

கத்தி முனையில் நடப்பது போன்ற ஒருவகை ஆபத்து இத்தகு இலக்கியங்களுக்கு உண்டு. ஆனால் மிக்க அவதானத்துடன் தனது மெய்யனுபவங்களை இலக்கியமாக்கியதில் அஜந்தகுமாரின் "இனிப்புக் கதைகள்" இலகுவாகவே இலக்கிய அங்கீகாரத்தினைப் பெற்று விடுகின்றன எனத் துணிந்து கூறலாம்.

"நுள்ளான் சாப்பிட்டா நூறாண்டு வாழலாம்", என்றவாறே நுள்ளான் மொய்த்த சோற்றைக் குழைத்துச் சாப்பிடும் (தன்) குடும்ப நிலைவரத்தை பகுதி A யிலும் சோறு போட்டுக் கொடுத்த கோப்பையில் மச்சம் வெடுக்கெடுத்தால் சந்நியாசி வேசங் கொண்டு வீட்டை விட்டு கொழுப்பில் வெளியேறி பூசாரியாகி தற்போ பச்சையரிசிப் புக்கையும் கொஞ்சம் தோல் கறுத்த கதலி வாழைப்பழமுமே கதியெனக் கிடக்கும் தாடியப்பாவின் சரிதையை பகுதி B யிலும், சாப்பிடும் போது எவராவது மிச்சம் விட்டு அச் சோற்றினைக் கொட்டினது கண்டால் சன்னதம் ஆடும் சோற்றின் அருமை புரிந்தவரை பகுதியிலும் சித்திரித்திருக்கும் "சோறும் வேறும்" எனும் மகுடத்தில் அமைந்த பதிவு; "போராளிகளின் காப்பரண்களில் எஞ்சும் சோற்றுப் பருக்கைகளை உரப்பை மீது பரப்பிக் காயவிட்டு மீண்டும் அதனை அரிசியாக்கி சிற்றுண்டியாக்கும் திட்டம் அனைத்துக் காவலரண்களுக்கும் பரவலாக்கப்பட்டு அமுல் படுத்தப்படிருந்தது, எனும் சிலிர்க்க வைக்கும் செய்தியினை பகுதி D யில் உள்ளடக்கியிருந்ததில் உச்சஞ் தொட்டதெனலாம்.

நிறைந்த ஆவலுடனும், கதைக் கலையில் புதியதையே தேட முனையும் எப்போதுமுள்ள அவதியுடனும், ஆர்வத்துடனும், அரிச்சுவடி படித்ததிலிருந்து பல்கலைக்கழகத்தில் படித்த நாள் வரையில் தான் பெற்ற பரந்த அனுபவத்தினை அல்லது தினக்குறிப்புக் களை வாசகர்களுடன் பகிரும் நோக்கில் அஜந்தகுமார் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கும் பதினான்கும் உண்மையில் இனிப்புக் கதைகளான போதிலும் விரிவஞ்சி ஏனையவை பற்றி இங்கு விளம்ப முடியாதுள்ளது.

நூலின் பின்னட்டையில் நூலாசிரியரின் ஆசிரியரான எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் எழுதியிருக்கும் உசாத்துணைக் குரிய குறிப்பு நூலிற்கு மேலும் அணிசேர்த்துள்ளது.

அடிப்படைப் பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும் சொல்லும் கதைகள் இன்னும் கனதி பெற வேண்டிய தேவைப் பாட்டிற்கு உட்பட்டு நிற்பதாக நூலின் முன்னுரையில் நூலாசிரியரின் மற்றுமோர் ஆசிரியரும், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவருமான எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணன் அழுத்தி உரைத்திருப்பதை அஜந்தகுமார் கவனத்தில் கொள்ளும் பட்சத்தில் அவரின் இத்தகு எழுத்துக்கள் இலக்கிய உலகில் நிச்சயம் கனதியான சுவட்டை ஏற்படுத்திக் கொடுக்கும் என மிகத் தாராளமாகவே கூறலாம்.

- தினக்குரல் : 06.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகச் செய்திகளை சீரோடு சித்திரித்திருக்கும் சிறீறங்கனின் "சிவப்புக்கோடு"

நெருக்கடிகள் நிறைந்த காலகட்டமாயினும் நேரம் தவறாது திட்டமிட்டபடியே நூல்களை வெளிக்கொணர்ந்து, பதிப்புத் துறையில் பிரமிக்கத்தக்க வகையில் பணிகளை முன்னெடுத்து வரும் ஜீவநதி வெளியீட்டகம் கடந்த 2019 ஆம் ஆண்டில் ஐந்து சிறுகதைத் தொகுதிகளை அறுவடை செய்துள்ளதாக அறியக்கிடைக்கின்றது. தாட்சாயணியின் ஒன்பதாவது குரல், மலரன்னையின் "அப்பாவின் தோட்டம்", க.சின்னராஜனின் "தண்ணீர", நிவேதா உதயராஜனின், "உணர்வுகள் கொன்றுவிடு" சி.சிறீறங்கனின் "சிவப்புக்கோடு" ஆகிய அவ்வைந்து சிறுகதைத் தொகுதிகளும் வெறுமனே வரவுகளாகவன்றி சிறுகதைத் துறையினைச் செழுமைப்படுத்த வல்லனவாக அமைந்திருப்பது ஈழத்தில் சிறுகதை ஆரோக்கியமான திசையினை நோக்கியே பயணிக்கின்றது எனும் நம்பிக்கைக்கு துணை போவதாகவே உள்ளது.

இந்த வகையில் ஜீவநதியின் 130ஆவது வெளியீடாக 2019 நவம்பரில் வெளிக்கொணரப்பட்ட "சிவப்புக்கோடு", வளர்ந்து வரும் படைப்பாளியான சிவகுருநாதன் சிறீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றங்கனால் எழுதப்பட்ட பன்னிரு சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுதியாகும். 2019 இல் ஈழத்திலிருந்து வெளியான பத்திற்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகளுள், தர மேம்பாடு கொண்டு விளங்க வல்லன என்ற கணிப்பிற்குள் வரும் முதல் ஐந்து நூல்களுள் இடம் பெறத்தக்க ஒன்றாக "சிவப்புக்கோடு" துலங்குவதால் சிறீறங்கனும் கவனிப்புக்குரிய ஒருவராகிறார். வழமையான சிறுகதை கட்டமைப்பி லிருந்து விலகி ஒரு புதிய பரிமாணத்தை கோடிட்டுக் காட்டும் பதிவுகளாகவும் இவை அமைந்திருப்பதும் இந்நூல் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணமாகின்றது.

"அநீதியைக் காணும் போதெல்லாம் அது என்னை எழுதத் தூண்டுகின்றது. இராமருக்கு உதவிய சிறு அணிலைப் போல் நானும் இச் சமூகத்தினைச் சீர்படுத்த முயலுகின்றேன். என் மனக்காயங்களுக்கு எல்லாம் இந்த எழுத்தின் மூலம் ஒத்தடம் இட்டுக் கொள்கின்றேன்" என என்னுரையில் பதிவு செய்திருக்கும் சிறீறங்கன் 2016 இலிருந்து எழுதி வருகின்றார். யாழிலிருந்து வெளிக் கொணரப்படும் வலம்புரி சங்குநாதம் பத்திரிகையிலேயே பெரும்பாலான இவரது கதைகள் பிரசுரமாகியிருக்கின்றன.

உயர்தர கணக்கீட்டு ஆசிரியராக யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றி வரும் சிறீறங்கன் பல்வேறு தேசிய கலை இலக்கியப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்கள் பலவற்றைப் பெற்றுள்ளார். அத்தகைய பரிசுக் கதைகளையும் உள்ளடக்கி கடந்த நான்காண்டுகளில் தான் பிரசவித்தவற்றினைத் தொகுத்து "சிவப்புக் கோடு" நூலினை வடிவமைத்திருக்கின்றார். "சிறீறங்கனின் மனித உறவுகள் குறித்தான பார்வை நெகிழ்ச்சியானது. அவரின் மொழிக்கை யாட்சி வாசகனுக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியது" என இராஜினிதேவி சிவலிங்கம் வாழ்த்துரையில் கூறும் கருத்துக்களுடன் நூலினை ஆழ்ந்து படிக்கும் எவரும் நிச்சயம் உடன்படுவர்.

போரின் வலியினையும் பெண்களின் கையறு நிலையினையும் போதைப் பொருட்களின் பாவனையினாலான பாதிப்புகளையும் பெரும்பாலான இவரது கதைகள் பேசி நின்றாலும் அத்தகு இடிபாடுகளையும், இடர்பாடுகளையும் எவ்வாறு எதிர் கொள்வது என்று எடுத்துரைத்த வேறுபட்ட முறைமையே சிறிறங்கனை வெளிக்கொணர்ந்துள்ளது எனலாம்.

சேவைக்காலம் முழுவதும் இருப்பிடத்தின் அருகாமை யிலேயே பணிபுரிய வேண்டும் என அடம்பிடிக்கும் அரச ஊழியர் மத்தியில் யுத்த காலத்தில் குடாநாட்டிலிருந்து வன்னிக்குச் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஓர் இளம் ஆசிரியர் பட்ட அவஸ்தையினை அச்சொட்டாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறது "சிவப்புக்கோடு" எனும் தொகுதியின் முதற்கதை. இதுவே ஆசிரியர் எழுதிய முதலாவது கதை என்பதும் குறிப்பிடற்பாலது. உக்கிரமாக யுத்தம் நிகழ்ந்த காலகட்டத்தினைப் பின்புலமாகக் கொண்டே இக்கதை நகர்கின்றது. வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் வைகறைப் பொழுதில் புறப்பட்டு, சைக்கிளை கைதடி மலாயன் கபே கடைக்கு பின்னால் விட்டுவிட்டு முகமாலை பேரூந்தினை பிடித்து அதில் தொற்றிக் கொண்டு கொடிகாமத்தை வந்தடைந்த போது "சேர் இறங்குங்கோ, முகமாலை போகாது" என்றான் பேருந்துச் சாரதி.

பருத்தித்துறையில் இருந்து அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பிறிதொரு வாகனத்தில் இனி ஏற வேண்டும். சனத்தை அள்ளிப்போட்டுக் கொண்டு ஒரு பக்கம் சரிந்த வண்ணம் யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் வான் ஒன்று வந்து நின்றது. நாம் ஏறாது உருத்திரபுரம் செல்லும் பெண் ஆசிரியர் இருவரை ஏற்றி விட்டோம். கன்டெக்ரர் பெடியன் "அண்ணை ரைட்" என்று சொல்லி விரல் நுனியில் தொங்கியபடி போனான். எம் மீது கரும்புகையைக் கக்கி கோபத்தைத் தீர்த்துப் போனது அந்த வான். சில நிமிடத்தில் பருத்தித்துறையில் இருந்து வந்த பஸ்ஸைப் பிடித்து முகமாலைக்கு ஒருவாறு வந்து சேர்ந்தோம்.

இது "ஆமி செக் பொயின்ட்". பெண்கள் வரிசையும் ஆண்கள் வரிசையும் தனித்தனியே நீண்டு காணப்பட்டது. நீண்ட மலைப் பாம்பு போல் மெல்ல மெல்ல நகர்ந்தது. நான் "செக் பொயின்டுக்குள்" நுழைந்ததும் என் பையினைச் சோதனை செய்தான் ஒருவன். பின் மற்றையவன் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை தடவிப் பார்த்தான், அருவருப்பாய் இருந்தது. வெளியே வந்ததும் வரிசையில் எனது பஸ் எங்கோ நின்றதால் முன்வந்த ஓர் பஸ்ஸில் தொற்றிக் கொண்டேன். அடுத்து இயக்கத்தின் சோதனைச் சாவடி. அங்கும் அதே மாதிரி பல வரிசைகள். நான் ஓடிச் சென்று அரச உத்தியோகத்தர் வரிசையில் நின்றேன். எங்கள் அடையாள அட்டையை வாங்கி "டோக்கன்" இலக்கம் தந்தார்கள். இப்போ அதுதான் என் உயிர். மீண்டும் பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். ஒரே வியர்வை வியர்த்து ஒழுகியது. பரந்தனைத் தாண்டி பஸ் சென்று கொண்டிருந்தது. அடுத்த இறக்கம் என்னுடையது. நேரத்தைப் பார்த்தேன். எட்டுமணி. இறக்கம் வந்ததும் இறங்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தேன். தலை குழம்பி, உடுப்பு கசங்கி இருந்தது. கால் துவண்டு உடம்பு களைத்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மனம் சோரவில்லை.

விரைந்து பாடசாலை அலுவலகத்தை அடைந்து வரவுப் பதிவேட்டினை அணுகினேன். பேனாவைக் கையிலெடுத்து கையெழுத்திடப் போனேன். அங்கே சிவப்புக்கோடு எனைப் பர்த்துச் சிரித்தது. உடல் துவண்டு போக... உள்ளம் வலியெடுத்து "ஓ" என அழுதது. "சிவப்புக் கோடு" எனும் இக் கதையில் ஆசிரியர் சொல்லிய சேதிகளை விட சொல்லாமலே சொல்லிச் சென்ற செய்திகள் ஏராளம் எனலாம். அதிகாலையிலிருந்து எட்டுமணிவரை எத்தனையோ "சிவப்புக் கோடு"களைக் கடந்து வந்த அந்த ஆசிரியர், அலுவலகத்தில் வரவுப் பதிவேட்டில் கீறிக் கிடந்த அந்த சிவப்புக் கோட்டினைக் கண்டு மனம் சோர்வுறுவதாக கதையினை முடித்திருப்பது வாசிப்போர் நெஞ்சுகளில் ஆயிரமாயிரம் கேள்விகளை எழுப்பி நிற்கின்றது. உண்மையில் பதிவேட்டில் அவர் கண்ணுற்ற "சிவப்புக் கோடு" ஒரு குறியீடுதான். கைதடியிலிருந்து கருக்கலோடு அவர் புறப்பட்ட அந்தக் கணத்திலிருந்து எட்டுமணிக்கு பரந்தன் சந்தியினை அடையு மட்டிலும் அவர் கடந்து வந்த எண்ணற்ற சிவப்புக் கோடுகளையே இக் கதையில் சிறீறங்கன் வாசகர்களைத் தரிசிக்க வைத்திருக்கின்றார் எனலாம். போர்க்காலச் சூழலிற்கும், நிகழ்வுகளுக்கும் வாசகர்களை அப்படியே அழைத்துச் சென்றிருப்பது கதைக்கு கிடைத்த மற்றுமோர் வெற்றி எனலாம்.

"சனத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு வானொன்று ஒரு பக்கமாகச் சரிந்து கொண்டு வந்தது, எம் மீது கரும்புகையைக் கக்கி கோபத்தைத் தீர்த்துப் போனது அந்த வான், "உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை தடவிப் பார்த்தான் அருவருப்பாய் இருந்தது," "டோக்கன் இலக்கம் தந்தார்கள்... இப்போ அதுதான் என் உயிர்!" போன்ற வரிகள் சிவப்புக் கோட்டினை மேலுந் துலங்க வைத்திருக்கின்றன.

ஐந்தாம் தரத்தில் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சை பற்றிய "கனவு மெய்ப்பட வேண்டும்" எனும் கதையும் தொகுதியில் குறிப்பிடத்தக்கதொரு கதையாகத் திகழ் கின்றது. "இந்தப் புலமைப் பரிசில் பரீட்சை உண்மையில் எத்தனை பேருக்குச் சோதனையாக அமைகின்றது. இது ஒரு சமூக நோய் போல் எல்லோரையும் பீடித்து வருகின்றது. பிள்ளைகளை மட்டுமன்றி பெற்றோரையும் உடல், உளத் தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றது" எனுஞ் செய்திக்கு அப்பால் "சித்தியடையும் பெரும்பாலான பிள்ளைகள் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கணக்கெடுப்பின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கையில் விவசாய வறிய குடும்ப மாணவர்கள் அல்லவா பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்" எனும் கேள்வியினையும் ஆசிரியர் முன்வைத்திருப்பது கவனத்திற்குரியது.

பாடசாலை மட்டத்தில் முதலாம் மாணவனாகச் சித்தி யடைந்த அகில் துள்ளிக்குதிக்காது. சந்தோசத்தை வெளிப்படுத்தாது "என் போட்டோவை பேப்பரில் போட வேண்டாம் பிளீஸ் சித்தியடை யாத என் நண்பர்கள், என்னைப் போன்ற மாணவர்கள் கவலையில் இருப்பார்கள், அவர்கள் துன்பத்தில் நானும் பங்கு கொள்கின்றேன்" என உறுதிபடக் கூறுவது மாணவ சமுதாயத்துக்கு முன்மாதிரி யானதாய் அமைந்து கதைக்கு ஓர் கனதியைக் கொடுத்திருக்கிறது. மேலும் கல்வியியல் சம்பந்தப்பட்ட இக்கருத்தினை ஒரு கல்வியி யலாளனான சீறீறங்கன் உரைப்பது கதைக்கோர் அங்கீகாரத்தினையும் வழங்கியுள்ளது.

"மனிதத்தைத் தேடி" மனதை நெகிழவைத்த மற்றுமோர் கதை. தனியார் பேருந்து ஒன்றில் வெள்ளை வேட்டியும் தோளில் ஒரு சால் வைத்துண்டுமாக இடைநடுவில் ஏறிய எழுபத்தைத்து வயது முதியவரை பிரயாணிகள் நடாத்திய முறைமையினைச் சித்திரிக்கும் இக்கதை குறுங்கதையான போதிலும் ஏற்படுத்திய அதிர்வு பலமானது.

பெரும்பாலும் பெண்களே அந்த பேரூந்தை நிறைத்திருந்தனர். அநேகமானவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். அல்லது தூங்குவது போல் பாசாங்கு செய்தனர். சிலர் தம் கைத்தொலைபேசியில் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தனர். அதில் சிலர் தங்கள் காதுகளில் பாட்டுக் கேட்கும் கருவியை மாட்டியிருந்தனர். அந்த முதியவர் ஆச்சரியமாக அவர்களைப் பார்த்தார். அவர் அறிந்த வரையில் காதுகேளாதோர் மட்டுமே இப்படியான கருவியை அணிவார்கள். இத்தருணத்தில்... ஆம்! இவர்களும் செவிடர்கள் தான்

"இந்தக் கிழவனை ஏண்டா எத்தினனீ?" தனக்கு மேல் உள்ள கண்ணாடியில் நடத்துனரை பார்த்து சாரதி கத்தினார்.

"பாவம் அவர் வரட்டும்" என்றது ஓர் நல்ல உள்ளம். தனது இருக்கையையும் கொடுத்து உதவிற்று. அருகிருந்தோரின் ஏளனங் களும் முகச்சுழிப்புகளும் கிழவனுக்கு சிரத்தை தருவதாக இல்லை. தான் இறங்க வேண்டிய இடம் எப்போது வரும் என அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். அவர் இறக்கம் வந்தது. மெல்ல மெல்ல இறங்கிப் போய் வாசலில் நின்றபடியே அப் பேருந்தில் இருந்தவர்களை ஒரு முறை உற்றுப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னய்யா தேடுறீங்க" என்றார் நடத்துனர். "நல்ல மனுங்களை தேடுறேனப்பா" என்றவாறே விருட்டென்று இறங்கி நடந்தார் முதியவர்.

"எனது சிறுகதையின் கதாபாத்திரங்கள் ஒன்றும் கற்பனையல்ல. அவர்கள் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்ற ஆசிரியரின் கூற்றின் படி பார்த்தால் பேருந்தில் நிகழ்ந்த கதையையும் உண்மைச் சம்பவமாகவே கருத முடிகிறது. அந்த முதியவரைப் பார்த்து ஏறத்தாழ அந்தப் பேருந்தில் பயணித்த எல்லா பயணிகளுமே அருவருக்கின்றனர். அதனால் அந்த முதியவர் வெட்கித் தலை குனிய வில்லை. துவண்டு விழவில்லை. கெத்தாக நின்று தன் கருத்தினை ஆணி அடித்தது போல் சொல்லிவிட்டு "இறங்கிச்" செல்கிறார். அந்த இடத்தில் தான் சிறீறங்கன் "எழும்பி" நிற்கின்றார் எனலாம்.

இவ்வாறாக "விட்டில் பூச்சிகள்" என்ற இறுதிக் கதை வரையில் அநேகமாக எல்லாக் கதைகளுமே ஏதோ வகையில் வாசிப்போர் இதயத்தைத் தொட்டுச் செல்கிறது எனலாம். சற்றுமே திகட்டாது வாசகர்களைச் சுண்டியிழுக்கும் சக்தி கொண்டவைகளாக கதைகள் அமைந்திருப்பது மற்றுமோர் சிறப்பு. மிகையான, தேவையற்ற அலங்காரங்கள், ஆலாபனங்களின்றி சமூகச் செய்திகளை அவரது எழுத்துக்கள் தெளிவாக வெளிக்கொணர்வதும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

ஆனாலும் ஈழத்து நவீன புனைகதை இலக்கியங்கள் பற்றிய பரிச்சயமும், துறை சார்ந்த வீச்சும் சிறீறங்கனிடம் மேலும் வேண்டப்படுவதையும் தொகுதி உணர்த்தத் தவறவில்லை. மிகச் சிறந்த சமூக அவதானிப்பினூடும், தேர்ந்தெடுத்த ஒரு மொழி நடையினூடும், சிறீறங்கன் எதிர்காலத்தில் சிறுகதையுலகில் பயணிப்பாராயின் இவரது முன்னைய தலைமுறையில் கோலோச்சி நிற்கும் வதிரி இ.இராஜேஸ்கண்ணன், தாட்சாயணி போன்றோருடன் இவர் பொருந்தத்தக்க ஒருவராக வல்லவர் என்பதனையே சிவப்புக்கோடு எனும் நூல் உணர்த்தி நிற்கிறது எனலாம்.

- தினக்குரல் : 26.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக வாழ்வியலை முன்னிறுத்தும் பாலரஞ்சனி ஜெயபாலின் "நெத்திக்காசு"

மலையக மக்களது வாழ்வியலையும் அச் சமூகத்தின் வளர்ச்சி நிலையினையும் பிரதிபலிக்கின்ற மலையக இலக்கியங்களுள் தனிப்பெரும் வரலாறு கொண்ட மலையகச் சிறுகதைகளானது, சமுதாய விழிப்புணர்வுக் காக முதன்முதலில் கிளர்ந்தெழுந்த கோதண்ட ராமர் நடேசய்யர் எழுதிய "திரு.ராமசாமி சேர்வையின் சரிதம்" எனும் கதையிலிருந்து தோற்றம் பெறுகிறது. நடேசய்யரின் அக்கதை 1931 இல் வெளிவந்ததாக அறியக் கிடைக் கின்றது. இந்தவகையில் மலையகச் சிறு கதைகள் இன்னும் ஒன்பது ஆண்டுகளில் நூற்றாண்டினைக் கொண்டாடி வரலாறு படைக்கவுள்ளது.

நடேசய்யரைத் தொடர்ந்து அறுபது கள்(1960) வரை சி.வேலப்பிள்ளை, கே.கணேஷ், பொ.கிருஷ்ண சாமி, த.ரஃபேல் போன்றவர்கள் (1949 - 1960) சிறுகதை முயற்சியில் ஈடுபட்டாலும் மலைய கச் சிறுகதைகளுக்கு உருவம் அமைத்தவர் களாக என்.எஸ்.எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், திருச்செந் தூரன், சாரல் நாடன், இர.சிவலிங்கம், ஏ.வி.பி.கோமஸ் ஆகியோரையே கருது மளவிற்கு மலையக மக்களின் துயரார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வினையும் அங்கு நிலவிய அநீதிகள், அக்கிரமங்கள், அடிமை வாழ்வு முதலானவற்றையும் இவர்கள் அழகியலுடனும், ஆழத்துடனும் பதிவு செய்தார்கள். இவ்வாறான அணுகுமுறைகளே ஆரம்ப கால கட்டங்களில் மலையக இலக்கியத்தில் மிகுந்த செல்வாக்கினை செலுத்துவதாக அமைந் திருந்தன.

அறுபதுகளில் நிகழ்ந்த இலக்கிய மறுமலர்ச்சிக்கு அக, புற எழுச்சிகளின் சேர்க்கையும் நடேசய்யர் இட்ட பலமான கால் கோளுமே காரணங்களாயின எனலாம். தெளிவத்தை ஜோசப் போன்ற மலையக முன்னோடி எழுத்தாளர்களை அடியொற்றி பெரும் அணியொன்றே மலையகத்தே உருவானது. மு.சிவலிங்கம், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரன்பன், அல் அஸூமத், மல்லிகை சி.குமார், கே.கோவிந்தராஜ், பதுளை சேனாதிராஜா, இரா.சடகோபன் (பட்டியல் பூரணமானதல்ல) போன்றவர்களின் இலக்கியப் பிரவேசம் சிறுகதை இலக்கியத்தின் சீரிய செல்நெறிக்கு வித்திட்டு மலையக இலக்கியத்தை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்ல வழிசமைத்தது எனலாம்.

மலையக இலக்கியத்தினை முற்போக்கு உணர்வுடன் நோக்கி மண்வாசனை மிக்க படைப்புகளை வெளிக்கொணர்வதில் மலையகத்தைச் சேர்ந்த கணிசமான பெண்களும் ஆரம்பகாலம் முதலாகவே ஈடுபட்டு வந்துள்ளமை நோக்கற்பாலது. இவர்களுள் நடேசய்யரின் தொழிற்சங்கப் பணிகளிலும் செயற்பாடுகளிலும் அவருக்குப் பக்கபலமாக இருந்த அவரது துணைவியார் மீனாட்சி யம்மையாரையே முன்னோடியாகக் கொள்ள வேண்டியுள்ளது. தொடர்ந்து கோகிலம் சுப்பையா, திலகா பழனிவேல், பூரணி, புசல்லாவ இஸ்மாலிகா, நயீமா ஏ.சித்திக் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு நவீன இலக்கியத்திற்காக அவ்வப்போது தங்களது பங்களிப்பினை நல்கி வந்துள்ளனர். அடுத்த பரம்பரையில் பலரது எழுத்துகளும் மிகுந்த நம்பிக்கை தருவதாக அமைந்திருந்தன. பிரமிளா பிரதீபன், ஜஸீமா ஹமீட், இளைய நிலா பஸ்மினா அன்சார் போன்றோர் இவ்வகையில் முதலில் நினைவுக்கு வருகின்றனர். இப்பட்டியலில், மாத்தளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு விளங்கும் பாலரஞ்சனி ஜெயபால் (முன்னர் சர்மா) அவர்களையும் தயக்கமின்றி இயைத்துக் கொள்ளலாம்.

மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் பால ரஞ்சனி யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். இந்த வகையில் மலையகம் தவிர்ந்த இலங்கையின் வேறு மாகாணங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீக மாகவும் பிறப்பிடமாகவும் கொண்டு தொழில் நிமிர்த்தம் மலையகத் தில் வாழ்ந்து மலையகப் பிரச்சினைகளை பாடு பொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்த பேராளுமைகளான "மலைக்கொழுந்து" பேராசிரியர் நந்தி, "குருதிமலை" டாக்டர் தி.ஞானசேகரன், "மூட்டத்தினுள்ளே" டாக்டர் புலோலியூர் க.சதாசிவம் ஆகியோரை பாலரஞ்சனி மீட்டிப் பார்க்க வைக்கின்றார்.

கவிதை, சிறுகதை, மெல்லிசைப் பாடல்களில் தனது இலக்கியப் பங்களிப்பினை நல்கி வரும் பாலரஞ்சனியின் ஏராளமான மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி யுள்ளன. 2001 ஆம் ஆண்டில் "மனசின் பிடிக்குள்" எனும் மகுடத்தில் இவரது ஹைக்கூ கவிதைத் தொகுதி டொமினிக் ஜீவாவின் மல்லிகைப் பந்தலினூடாக வெளியாகி பலரது கவனிப்பையும் பெற்றிருந்தது. தற்போது பாலரஞ்சனி எழுதிய பன்னிரு சிறுகதைகளைத் தொகுத்து "நெத்திக்காசு" எனும் நூலினை எஸ்.கொடகே சகோதரர்கள் பிரை வேட் லிமிட்டெட்டினர் வெளிக்கொணர்ந்துள்ளனர். 2020க்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டி யில் இப்பிரதி முதற் பரிசினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியரின் பனுவல் தொடரில் இரண்டாவதாகக் கொள்ளத்தக்க இந்நூலில் 1991 முதல் 1999 வரையிலான காலப்பகுதியில் அவரால் எழுதப்பட்ட கதைகள் உள்ளடக்கம் பெற்றுள்ளன.

ஆண்டாண்டு காலமாக மலையகத்து மக்கள் அனுபவித்து வரும் வறுமை, அவர்களது லயத்துக் காம்பரா வாழ்க்கை முறைமை கள், தாய் கொழுந்து பறிக்கவும் தந்தை தொழிற்சாலை வேலைக்கும் சென்று விடுவதால் "புள்ளக்காம்புரா"வில் சேர்க்கப்படும் குழந்தைகள், குடும்ப வருமானம் போதாமையால் பிள்ளைகள் பத்துப் பன்னிரண்டு வயதிலேயே படிப்பை இடைநிறுத்த வேண்டிய நிலைமை. தோட்டத் துரைமார்களதும் கங்காணி மார்களதும் அடக்குமுறைகள், அட்டூழி யங்கள், பாலியல் சுரண்டல்கள், குறைந்த வருவாயால் செய்யும் தொழிலுடன் வேறு பகுதிநேர வேலைக்காகவும் முயற்சி செய்ய வேண்டிய நிலைவரம், ஆண்களின் குடிப் பழக்கத்தால் சிதைந்து சின்னா பின்னமாகும் குடும்பங்கள் போன்ற இன்னோரன்ன பிரச்சினை களே சாதாரணமாக மலையக இலக்கியத்தின் பாடுபொருளாக அமைவன. பாலரஞ்சனியும் இத்தகு பாடு பொருட்களினூடாகவே தனது இலக்கியப் பயணத்தினையும் மேற்கொள்கிறார்.

ஆனாலும் பெண் பாத்திரங்களை முதன்மைப்படுத்தி அவர்கள் இப்பெருஞ் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்து தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வினை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என பெண்ணிய பார்வையினூடு தன் கதைகளை நகர்த்திச் செல்வார் பாலரஞ்சனி. இதுவே இவர் பெறும் முக்கியத்துவத்துக்கான காரணம். தவிரவும் கல்விக்காகவும் தொழிலிற்காகவும் நகர்ப்புறம் நோக்கி நகர்ந்து செல்லும் உணர்திறன் மிக்க இளந்தலைமுறையினர் பற்றிய பிரக்ஞை யும் புலப்பதிவும் மேற்படி சாதாரணமான பாடுபொருட்களை எல்லாம் அசாதாரணமான இலக்கியங்களாக்க அவரிற்கு அடித்தளம் அமைத்ததெனலாம். மலையக கலாசார மற்றும் பண்பாட்டிற் குள்ளேயே நின்று பாலரஞ்சினி தனது கதைகளைப் புனைவதற்கு இயல்பாகவே அவருக்கு வசப்பட்டிருக்கும் செம்மைமிகு அகப் புறப்பார்வை கைகொடுத்து உதவியுள்ளது.

"எனது ஆற்றல் கட்டுக்கோப்பான ஒரு ஒழுங்கமைப்பினுள் அமைவதற்கு முழுக் காரணமாகவும் அமைந்தது எனது மூத்த சகோதரியின் கணவரும் எனது இலக்கிய தந்தையுமான இ.பத்மநாத ஐயரின் இலக்கிய பெட்டகப் பொக்கிஷமேயாகும். ஆனாலும் என் சிறுகதைகளுக்கான ஆடுகளம் என் தொழில் நிமித்தமே உருவானது. மலையக சமூகப் பின்னணி என் மனதில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது!" என நூலின் நுழைவாயிலில் நின்று தனது உள்ளக் கிடக்கையினை ஆசிரியர் வெளிப்படுத்தியிருப்பதையும் ஈண்டு நோக்கத்தக்கது.

இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் பன்னிரு கதை களுள்ளும் "நெத்திக்காசு", "தங்க வளையல்", "மாற்றம்", "பபியோவ்" போன்ற கதைகள் நன்றாக வடிவம் பெற்றிருப்பதுடன், வாசித்த பின்பு நீண்ட நேரம் மனதில் நிலைத்து நிற்கும் கதைகளாகவும் விளங்குகின்றன.

மலையக வாழ்வியலின் ஒரு வெட்டு முகமாக அமைகிறது "நெத்திக்காசு" எனும் கதை. இயல்பான கதையம்சம், ராசாத்தி, அவளது குழந்தைகள் செல்லா, காமாட்சி, சின்னப்பய குமரேசு என கதைக்கு அணிசேர்க்கும் பாத்திர வார்ப்புகள், பொருத்தமாக பயன்படுத்தப் பட்டிருக்கும் பேச்சு வழக்கு, கதையின் முடிவு யாவுமே இயல்பானதாய் அமைந்து கதையை கனதியாக்கியுள்ளன.

"அம்மா நீ எனக்கு காசு தந்து எத்தன நாளாச்சு? ஒரு காசாவது தாம்மா! காசு முட்டியில காசு போட்டு ரொம்ப நாளாச்சில்ல" எனக் கெஞ்சும் மகன் குமரேசனிடம், "செத்தா நெத்திக்காசு வைக்கக்கூட ஏங்கிட்ட ஒத்த காசில்ல டா" என வருத்தத்தோடு ராசாத்தி கூறும் போதும், ராசாத்தி இறந்தபின் அவளது நெத்திக்காசு நழுவி குமரேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியில் விழுந்தபோது, "அம்மா எனக்கு காசு தந்துவிட்டாள்" என கதறிக் கதறி சின்னப்பய குமரேசன் ஓடுவதும், வாசிக்கும் போதே வாசகர்களின் மூச்சைத் திணற வைப்பன.

அம்மா தந்த கடைசிக் காசை முட்டியில் போட முயன்றபோது குமரேசன் கண்ட காட்சியே இக்கதையின் உச்சம்! எட்டுக் கும்பிடுவதற்காக காசு முட்டி உடைக்கப்பட்டு இருப்பதனைக் கண்ணுற்றபோது குமரேசனின் மனம் மட்டுமல்ல வாசகரின் மனமும் கூடவே, சுக்குநூறாகியது!

ஏறத்தாழ மலையகத்தின் சகல பிரச்சினைகளையும் இந்த ஒரே கதையில் பாலரஞ்சனி காட்சிப்படுத்தியிருந்தாலும் மலையக சிறார்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளே இங்கு அதிகாரப்பட்டு நிற்கின்றன எனலாம். தொகுதியில் மனதை நெருட வைத்த மற்றுமோர் கதையாக "மாற்றம்" விளங்குகிறது. தனது மாணவி மீரா முன்னரைப் போல் பழகுவாள், தன் மீது பாசத்தைப் பொழிவாள் என்ற நம்பிக்கையுடன் சில வருடங்களின் பின் அதே பாடசாலைக்கு இடம் மாற்றம் பெற்று வரும் ஆசிரியை, அந்த மாணவியின் மாற்றத்தால் அடையும் அதிர்ச்சி வாசகரையும் தொற்றி, உறைய வைக்கின்றது. மீராவுக்காக வாங்கி வந்த பரிசுப் பொருட்கள் மடியிலிருந்து நழுவி விழுந்து நொருங்குவதாக கதையை ஆசிரியை முடித்திருப்பது நயக்கத்தக்கதாய் உள்ளது.

மலையக கலாசாரம், பண்பாட்டிற்குள்ளேயே நின்று பாலரஞ்சனி மலையக மண்ணை தன் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார் என்பதற்கு "தங்க வளையல்" தக்கதோர் சான்றெனலாம். நூலின் பின்னுரையில் கலாபூஷணம் மேமன்கவி கூறுவது போலவே இக்கதையில் "தங்க வளையல்" என்பது வெறுமனே ஒரு ஆபரணம் என்பதைக் கடந்து அது மலையக மக்களின் குடும்ப கலாசாரம், அதனூடான வறுமை என்பதற்கான குறியீடாக இக்கதையில் வெளிப்பட்டிருப்பது வெகு சிறப்பாக உள்ளது.

அண்ணன், தங்கை பாசத்தினை படம் பிடித்துக் காட்டியுள்ளது "பபியோவ்" கதை. பபி எனும் தனது பெயரை "பபியோவ்" என அழைக்கும் அண்ணனிடம் கோபித்துக்கொள்ளும் பபி, பின்னர் "பபி.....யோவ்" என அவன் அழுத்திக் கூப்பிடும்போது தென்படும் அன்பினை, கருணையினை உணர்வதும் அவனது அகால மரணத்தின் பின்னர் அப்படியாகத் தன்னை எவரும் அழைக்கமாட்டார்களா என ஏங்கித் தவிப்பதும் இறுதியில் தன்னை கைப்பிடித்த கண்ணன் "பபி... யோவ்" என அழைத்தபோது, அதில்... அண்ணனை இழந்த தன் துயரத்தினை மறப்பதுமாக... சித்திரிக்கப்பட்ட அற்புதமானதோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை. மலையகத்துப் பிரச்சினைகள் பல இக்கதையின் பின்னணியில் சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் கிரகணப்படுத்தி அண்ணன், தங்கை பாசமே இக்கதையில் முனைப்புற்று விளங்குகிறது. அதுவே கதைக்கு ஒரு காத்திரத்தன்மையினையும் நல்கியிருக்கிறது.

"ரெண்டு லட்சம்" எனும் கதையில் அதன் கருப்பொருளை விட வடபுலத்து தரிசனத்தை எப்படி பாலரஞ்சனி தன் கதைகளில் வெளிப் படுத்தியுள்ளார் என்பதனையே நோக்க வேண்டியுள்ளது. மலையக எழுத்தாளர் ஒருவர் வடபுலத்து வாழ்வியலை வெளிக்கொணர்வது வெகு அபூர்வம். ஆனாலும் தனது பூர்வீக பூமியினையும் மறவாது தன் ஆடுகளத்தில் ஒன்றாக, துணிச்சலுடன் கையாண்ட ஆசிரியையை பாராட்டலாம்! ஓர் சில இடங்களில் மட்டக்களப்பு சொல் வழக்கும் வந்து விழுந்திருக்கிறது. (வாங்கிக் கொண்டு சந்தோசமாய் கிடப்பம். பக்கம் 88). யாழ்ப்பாணத்தில் "இருப்பம்" என்றே சொல்வார்கள்.

புதிய அனுபவப் பதிவுகளை பகிர்ந்துகொள்ளும் நிறைந்த ஆவலும், புனைகதை வெளியில் புதியதையே தேட எத்தனிக்கும் எப்போது முள்ள அவதியும் கைகோர்த்து பாலரஞ்சனியை மலையக எழுத்தாளர் மத்தியில் மட்டுமல்ல ஈழத்து எழுத்தாளர் பட்டியலிலும் தவிர்க்க முடியாத ஒருவராக இணைத்துக்கொள்ளும் காலம் அதி தொலைவில் இல்லை என்பதையே "நெத்திக்காசு" கட்டியம் கூறியுள்ளது.

- தினக்குரல் : 24.06.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் வனப்பான வாழ்வியலிற்கு திடசாட்சியாய் திகழுமொரு கதைத்தொகுதி

மா.சிவசோதியின் "உறவுகள் சேர்ந்தது" நூலை முன்னிறுத்தி சில குறிப்புகள்

**யா**ழ்குடா நாட்டின் வடகோடியில் அமைந்துள்ள பரந்த நிலப் பிரதேசமே வடமராட்சி. வடமறவர் ஆண்ட பூமி வடமராட்சி என்பது வரலாறு. இப்பிரதேசத்தின் திக்கெல்லைகள் இயற்கையானவை. வடக்கே பாக்குநீரிணை, கிழக்கே வங்கக் கடல், தெற்கிலும் மேற்கிலும் தொண்டைமானாறு எனும் நீர்க்கோப்புகளாகும்.

வடமராட்சி மக்களின் வாழ்வியல் தனித்துவமானது. அங்கு வாழும் மக்களது கலை, கலாசாரங்களும் சடங்குகள், சம்பிரதாயங்களும் பண்பாட்டுக் கோலங்களும், பொருளாதார வலையமைப்பும் சற்று வித்தியாசமானவை. இம் மண் சார்ந்த மக்களது வழிபாட்டு முறைகளும் பேச்சு வழக்குகளும் அசைவியக்கங்களும் அம் மண்ணிற்கே ஒரு அடையாளமாக அமைந்து பெருமை சேர்ப்பன என்றால் அது மிகையாகாது.

ஈழத்து சிறுகதை வளர்ச்சிப் பாதையில் வடமராட்சியின் வகிபாகம் விதந்துரைக்கற்பாலது. 1930களின் பிற்கூற்றிலிருந்தே இம்மண்ணைப் பின்புலமாகக் கொண்டு சிறுகதைகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி பத்திரிகையும், மறுமலர்ச்சி சஞ்சிகையும் இந்த வகையில் ஆற்றிய பங்களிப்புகள் மிக முக்கியமானவை. ஈழகேசரியில் பத்துக் கதைகளை எழுதிப் புகழ்பெற்ற பண்டிதர் க.சச்சிதானந்தன், மறு மலர்ச்சியில் ஆறு கதைகளைப் பிரசவித்த புலோலியூர் கு.பெரியதம்பி மற்றும் சில சிறுகதைகளை படைத்த அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா முதலானோரை வடமராட்சியின் சிறுகதை மூலவர்கள் எனத் தாராளமாகவே கூறலாம்.

வடமராட்சியில் வதியாத போதிலும் அப்பிரதேசத்தை நிலவியல் தொடர்பில் உயிர்ப்புடன் சித்திரித்தவர் என்ற வகையில் ஈழத்து சிறுகதை முன்னோடிகளில் ஒருவரும் ஏழாலையைச் சேர்ந்தவருமான இலங்கையர்கோன் இன்றளவும் நினைவில் கொள்ளப்படத்தக்கவர். இம்முன்னோடிகளைத் தொடர்ந்து தமது படைப்பின் வாயிலாக வனப்புமிகு வடமராட்சியை தரிசிக்க வைத்தவர்களாக கே.வி.நடராஜன், என்.கே.ரகுநாதன், ஈழத்து சோமு எனும் நா.சோமகாந்தன், செ.கதிர்காமநாதன், தெணியான், புலோலியூர் க.சதாசிவம், நெல்லை க.பேரன், குந்தவை, சிதம்பர பத்தினி, த.கலாமணி, ச.முருகானந்தன், கண.மகேஸ்வரன், புலோலியூர் க.தம்பையா, மு.நற்குண தயாளன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

நந்தினி சேவியர், குப்பிளான் ஐ.சண்முகன், ஆனந்தமயில், வல்வை அனந்தராஜ், ரஞ்சகுமார், புலோலியூர் ஆ.இரத்தின வேலோன், கருணைரவி, இராஜேஸ்கண்ணன், இராகவன், யோ.கர்ணன் போன்றோர் கதை சொல்லும் முறையினாலும் தனித் துவத்தாலும் நுட்பமான சித்திரிப்புகளாலும் இப்பிரதேச சிறுகதை செல்நெறியின் அடுத்தகட்ட பாய்ச்சலுக்கு கால்கோளிட்டனர் எனலாம். சிறுகதைத் துறையில் தமது சிரத்தை மிக்க எத்தனிப்புக் களால் மேலும் சிலர் அண்மைக் காலங்களாக இப்பிரதேசத்தில் சிறுகதை எழுத்தாளர்களாக இனங்காணப்பட்டு வருகின்றார்கள். இ.சு.முரளிதரன், ந.மயூரரூபன், த.அஜந்தகுமார், லதா உதயன், பரணீதரன், விஷ்ணுவர்த்தினி போன்றோர் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். இப்பட்டியலில் இணைக்கப்படத்தக்க மற்றுமொரு கலைஞராகத் திகழ்பவரே மா.சிவசோதி ஆவார். (மேற்தரப்பட்ட பட்டியல்கள் எவையும் பூரணமானதல்ல என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்க).

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது தும்பளையில் வசித்து வருபவருமான மா.சிவசோதி கரவெட்டி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவராவார். யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்றபின் தற்சமயம் துணுக்காய் விநாயகபுரம் அரசினர் தமிழ் பாடசாலையில் ஆசிரியப் பணியினை மேற்கொண்டு வருகிறார். 2003இல் சங்கு நாதத்தில் பிரசுரமான கவிதை ஒன்றின் மூலம் இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்த சிவசோதியின் "கைதியின் கதை" எனும் முதற் சிறுகதை 2005இல் வெளியாயிற்று. சுடரொளி, சங்குநாதம், மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் ஜீவநதி சஞ்சிகையிலுமே பெரும்பாலும் எழுதி வரும் சிவசோதி இதுவரை தான் எழுதிய பதினொரு சிறுகதைகளை தொகுத்து "நினைவுகள் சுமந்து"(2017) எனும் சிறுகதைத் தொகுதியினையும் கவிதைகளைத் தொகுத்து "கல்லறை சேரும் காற்று"(2018) எனும் கவிதைத் தொகுதியினையும் ஏலவே வெளிக்கொணர்ந்துள்ளார். இதன் தொடர்ச்சியாக அண்மைக் காலங்களில் தான் எழுதிய பதின்மூன்று கதைகளை தொகுத்து "உறவுகள் சேர்ந்தது" எனும் மகுடத்தில் நூலாக தற்போது அறுவடை செய்துள்ளார். இம் மூன்று நூல்களையும் ஜீவநதி பிரசுரமே வெளியீடு செய்திருப்பது ஈண்டு குறிப்பிடற்பாலது.

யுத்தத்தில் தொலைந்துபோன வாழ்வினையும் யுத்தம் முடிவிற்கு வந்த பின்னரும் தொடரும் வாழ்வின் அவலங்களையும் அதை நிவர்த்திக்கப் படும் சிரத்தைகளையும் அதன்போது ஏற்படும் மனஉளைச்சல்களையும், வலிகளையும் வெளியில் சொல்லி அழ முடியாத பெண்களின் மௌன ஓலங்களையும் பெரும்பாலும் தனது கதைகளின் பேசுபொருளாக்கி வடமராட்சி மண்ணின் பின்புலத்தில் நின்று அம்மண்ணின் வாசனை குன்றாமல் சிவசோதி இந்நூலில் இடம் பெற்றிருக்கும் பதின்மூன்று கதைகளையும் சித்திரித்துள்ளார்.

தச்சந்தோப்பு, சண்டில்குளம், மத்தொனி போன்ற கரவெட்டி யில் தான் வாழ்ந்த இடங்களை வெகு கச்சிதமாகவே தன் கதைகளில் காட்சிப்படுத்தியிருக்கும் சிவசோதி, வடமராட்சியில் பிறந்து பதின்ம பருவம் வரை அங்கேயே வாழ்ந்துவிட்டு பிழைப்பிற்காக வேண்டி உள்நாட்டில் இடம்பெயர்ந்தும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தும் இருப்பவர்களின் நெஞ்சகத்து இனிய நினைவுகளை கிளற வைத்ததில் அபார வெற்றி கண்டிருக்கிறார் என்றே கூறலாம். இத்தகு காட்சிப் படுத்தல் பண்பானது முன்னுரையில் குப்பிளான் சண்முகன் சொல்வது போல் சிவசோதியின் கதைகளுக்கு ஒரு தனித்தன்மையினை தந்திருக்கிறது.

"கிழுவம் தடிகளாலான வேலி மல்லாந்து போய்க்கிடந்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கோதாரியளோடை மல்லுக்கட்ட விட்டுட்டான்." "ஒருத்தின செண்டுதெண்டால்", "எவ்வளவு தான் அடாத்தா இருந்தாலும்", "இந்த உடுப்பு என்னடி ஒரே பிசானாகக் கிடக்கடி", "அதை எடுத்துத்தா இதை எடுத்துத்தா எண்டு ஒரே அறப்பும் பறப்பும்" போன்ற வடமராட்சிக்கே உரித்தான மொழிகளை, பேச்சுவழக்குகளை, அந்த அழகிய கிராமத்து காட்சிகளை சிவசோதியின் கதைகளில் தரிசிக்க கிடைத்திருக்கும் வாய்ப்பானது உண்மையில் பின்னுரையில் அலெக்ஸ் பரந்தாமன் கூறுவதுபோல் வாசகர்களை ஆச்சரியப்படவும், ஆனந்தப் படவும் வைக்கிறது.

கட்டிய கணவனைப் போரில் இழந்த அல்லது தவறவிட்ட நிலையில் அந்த அபலைப் பெண்கள் மறுவாழ்வு தேடிப்போகும் பட்சத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை "துயரத்தின் நிழல்" எனும் சிறுகதையில் யதார்த்தபூர்வமாக உணர்த்த முற்பட்டுள்ளார் சிவசோதி.

"உங்களை நல்லவரெண்டு நம்பித்தானே, எங்களைப் பார்க்குமெண்டுதானே, மாமி உங்களை எனக்கு கட்டிவைச்சா. இப்ப இப்படிக் கதைக்கிறீங்கள்" வசந்தி சாதாரணமாகத் தான் அவனிடம் கேட்டாள்.

"அப்ப நான் கெட்டவன். நீ நல்ல பொம்பிளை என்ன?" என்றவாறே அந்த நிலவிலும் அவன் கண்கள் சிவக்க நின்றான். திரும்பியபோது குப்பென அடித்தது சாராய வாடை.

வசந்தி மௌனமாகவே இருந்தாள்.

"ஹம்... என்ன சொன்னாலும் நீ இன்னொருத்தனோட இருந்தவள் தானேடி" என்று கோப்பையை கீழே வைத்துவிட்டு எழுந்து சற்று தடுமாறியபடியே நடந்தான் அவன்.

அந்த வார்த்தைகளை அவன் கொட்டிய அந்தக் கணத்தில் வசந்தியின் மனம் என்னவெல்லாம் பாடுபட்டிருக்கும், அவளது இதயம் எப்படியெல்லாம் சுக்கல்களாகி நொறுங்கியிருக்கும் என ஆசிரியர் வாசகர்களிடம் கேட்கும் கேள்விகளில்... அவர் சொல்லா மலே கடந்து சென்ற கதைகள் ஏராளம் உண்டு எனலாம்.

போர்க்காலத்திலும் அல்லது அதன் பின்பும் நிர்க்கதியாக்கப் பட்ட ஆயிரக்கணக்கான இளம் பெண்களின் எதிர்காலம் இப்படி யாகத்தான் அமையப் போகின்றதோ என்ற ஒரு பதகளிப்பினை ஏற்படுத்தும் இச்சிறுகதை, இத்தொகுதிக் கதைகளுள் மிக்க கவனிப்பிற்குரிய தொன்றாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரித்தான சில நம்பிக்கைகளும் சடங்குமுறைகளும் உண்டு. இந்தவகையில் "தவறியவர்களை" முன்னிறுத்தி தவப்படையல் செய்வது வடமராட்சிப் பாரம்பரியங் களுள் ஒன்றெனலாம். அப்படையலை மையப்படுத்தி சிவசோதி எழுதிய "படையல்" எனும் படைப்பு இத்தொகுதியில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு கதை எனலாம். காணாமல் ஆக்கப்பட்ட வீட்டின் தலைப்பிள்ளையை நினைவிருத்தி "ஆத்தை" மேற்கொள்ளும் இப்படையலுக்காக காலையிலிருந்தே அவ்வீடே "ஆலாய்ப் பறக்கும்" இயங்கு நிலைதனை மிக அற்புதமாகவே இக்கதையில் காட்சிப் படுத்தியிருக்கிறார் கதாசிரியர்.

தோட்டத்தில் விளையும் கீரை, அதைக் கொண்டு வருவதற் காக தனது திருக்கல் வண்டியை எடுத்து வார்களுக்கிடையில் காலை விட்டு கெந்திகெந்தி உழக்கிச் செல்லும் சிறுவன், தோட்டக்காரர் கீரையை பிடுங்கி பைக்குள் திணிக்கும் இலாவகம், அந்த துலாப் பட்டையை எடுத்து கட்டையில் போடும் விதம் எல்லாமே... அந்த வடமராட்சியின் தோட்டச் சூழலிற்கே வாசகனை அழைத்துச் சென்று விடுகிறது.

இம் மண்ணின் முன்னோடி எழுத்தாளர்களான செ.கதிர் காமநாதன், நா.சோமகாந்தன், புலோலியூர் க.சதாசிவம் போன் றோரது உன்னதமான சிறுகதைகள் இப் "படையலைப்" படிக்கும் போது நினைவில் எழுந்ததைத் தவிர்க்க முடியாதிருந்தது.

வடமராட்சியின் வனப்பான வாழ்வியலிற்கு திடசாட்சியாய் விளங்கும் சிறந்ததோர் சிறுகதை இப் "படையல்" எனலாம்.

இத்தொகுதியில் நன்றாக வந்துள்ள மூன்றாவது கதையாக "மீண்டெழுதலை" கொள்ளலாம். ஆசிரியராகக் கடமையேற்ற முதற் பாடசாலையும் அதன் சூழமைவுகளும் அங்கு எதிர்கொண்ட துயரங்களும் இக்கதையில் வெகு நேர்த்தியாகவே சித்திரிக்கப் பட்டுள்ளது. ஆசிரியரின் மெய்யனுபவம் என்பதால் நம்பகத்தன்மை மிக்கதொரு கதையாக "மீண்டெழுதல்" மிளிர்கிறது.

ஆசிரியர்களது உளவியல் ரீதியான அணுகுமுறையானது விசேட தேவையுள்ள "நர்மதன்" போன்ற பிள்ளைகளை எவ்வாறு வெற்றிகொள்ள வைக்கின்றது என்பதனை மிக அழகாகவே ஆசிரியர் சித்திரித்துள்ளார். "நான் சொல்லுறன்" என எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைக்குமளவிற்கு நர்மதனை படிப்படையாக தயார்ப்படுத்திய அந்த ஆசிரியரது முயற்சி உண்மையில் முன்மாதிரியானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வார்த்தைகள் நர்மதனின் வாயிலிருந்து விடுபட்டன. ஆனாலும் சொன்ன விதம், நேர்த்தி, தெளிவு, தொனி எல்லாமே பிரமிப்பை உண்டு பண்ணிற்று. தன் உழைப்பிற்கு ஒரு பலன் கிடைத்துவிட்டதென ஒரு நினைவு ஆசிரியருள் எழுகிறது."

"கிழக்கு வானில் மேகங்கள் கலைந்திருந்தன, ஒளிக்கதிர்கள் எங்கும் பரவுகின்றன, முன்னே நடந்து கொண்டிருந்தான்" என்றவாறே கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

கதையில் கையாளப்பட்டிருக்கும் "கிழக்கு வான்", "மேகங்கள்", "முன்னே..." போன்ற குறியீடுகள் கதையின் முடிவிற்கும், கனதிக்கும் வலுச் சேர்ப்பதாய் அமைந்துள்ளன.

பிரதேச மொழியினை அவதானத்துடனும், அற்புதத்துடனும் கையாளுதல், காட்சிப்படுத்தல் போன்றவற்றில் ஆசிரியர் மா.சிவ சோதி முதிர்ச்சியுற்றிருப்பது மிக்க மகிழ்வினையும் பெருமிதத்தினை யும் தருகிறது. அவரது கருத்தியலும் கையாளும் யுக்தியும் மேலும் முதிர்ச்சியுறின், அவர் நல்ல பல சிறுகதைகளை எழுதவல்லவராவார். அத்தகையதொரு உன்னத தொகுதியினை அவர் அறுவடை செய்யும் நாள் மிக அணித்தாகவே தெரிகிறது.

- தினக்குரல் : 18.07.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் எழுதிய நூல்கள்

**சிறுகதைகள்**

1. அறிமுகவிழா(கோகிலா மகேந்திரனுடன் இணைந்து – 1984)
2. புதிய பயணம்: 1996(இரண்டாம் பதிப்பு 2011)
3. விடியட்டும் பார்ப்போம் : 1997 (விபபி பரிசு பெற்றது)
4. நிலாக்காலம் : 2002 (வட கிழக்கு மாகாண சாஹித்திய விருது)
5. நெஞ்சாங்கூட்டு நினைவுகள் : 2006 (வட மாகாண சாஹித்திய விருது)
6. காவியமாய் நெஞ்சில் ஓவியமாய் : 2011

**பத்தி எழுத்துக்கள்**

7. புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள் (இரண்டு பதிப்புகள்)
8. அண்மைக்கால அறுவடைகள் : தொகுதி 1
9. அண்மைக்கால அறுவடைகள் : தொகுதி 2
10. புலவொலி
11. அன்றலர்ந்த மலர்கள்

**தேர்ந்தெடுத்த தொகுதிகள்**

12. விடியலுக்கு முன் (சிறுகதைகள்)
13. திக்கற்றவர்கள்(சிறுகதைகள்)
14. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சிறுகதைகள்(பத்தி எழுத்துகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரத்தினவேலோன் ஒரு நூல் பற்றி அணுகும் பாங்கு தனித்துவமானது. அதற்காக அவர் அந்நூல் சார்ந்த சகல விடயங்களையும் ஆராய்ந்து தேடிப் பெறுகிறார். அந்நூலின் ஆசிரியர் பற்றியும் அதன் உள்ளடக்கம் பற்றியும் அவர் முழுமையான தேடலை மேற்கொண்ட பின்னரே அக்கட்டுரையை எழுத ஆரம்பிக்கிறார். அவ்வாறு செய்கின்ற போது அப்பனுவலைத் தேடி வாசிக்க வேண்டும் எனும் ஆவல் வாசகனுக்குத் தொற்ற ஆரம்பிக்கிறது. வாசகனுக்குத் தெரியாத ஒரு விடயத்தை அவர் அறிமுகப்படுத்தும் பாங்கு அவரது எல்லாக் கட்டுரைகளையும் வாசகனைத் தேடி வாசிக்க வைக்கிறது.

– தாட்சாயணி

9 789550 958153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org